# அருள் சாரல்

அருள் கடலின் மின் இதழ்

அலை 01 சாரல் 01 ஜூலை 2020 அருள் கடல் வட்டார இறையியல் மையம், சென்னை

# அருள்கடல் பயிற்சி வாழ்வும் பணியும்



ராஜ் இருதயா, சே.ச.
அருள்கடல் இறையியல் மையத் தலைவர்

அருள் கடல் அன்னை கடந்த 41 ஆண்டு கால இறையியலாக்கக் குடும்பத்திற்கு அருள் கிராமம், அருள் தென்றல், அருள் தேடல், அருள் அமிழ்தல் போன்ற இனிய மகவுகளைப் பெற்றெடுத்துப் பேணி வளர்த்து வந்திருக்கின்றாள். இப்போது 'அருள் சாரல்' எனும் புதிய மகவைப் பூக்கச் செய்துள்ளாள்.

'அருள் சாரல்' அருள்கடலாரின் மின்னணு இதழாக நம் தலைவரும் தந்தையுமான புனித இலயோலா இஞ்ஞாசியார் மாதத்தில் முகிழ்ந்துள்ளது. 2020-2021 கல்வியாண்டின் தொடக்க விழாவில் அருள் கடல் முன்னாள் மாணவரான சென்னை மறை மாநிலத் தலைவரால் ஜீலை 10 ஆம் தேதி வெளியிடப்படுகின்றது.

அருள் கடலின் இறையியலாக்கச் சிந்தனைகள், செயல்பாடுகள், முன்னெடுப்புகள் போன்றவற்றை எமது நான்கு சுவர்களுக்குள் முடக்கி வைத்துக் கொள்ளாது தமிழகம், இந்தியாவில் உள்ள இறையாட்சியின் பல்வேறு களங்களில் பரவலாக்கம் செய்வதே எமது புதிய நற்செய்திப்படுத்தல் முயற்சியாக உள்ளது. நூல்கள், இதழ்களில் கட்டுரையாக வழங்கல், கருத்துப் பட்டறைகள், பங்குப் பணிகள், சமூகச் செயல்பாடுகள், இயக்கத் தோழர்களோடு செயல்படல், அறிவு ஜீவிகளோடு கலந்துரையாடல்,  மின்னணு சாதனங்கள் வழியாக இந்தப் புதிய நற்செய்திப்படுத்தல் பணி பல நகர்வுகளை எடுத்துச் சென்றுள்ளது.

அப்படிப்பட்ட நகர்வை முன்னிறுத்தி, அருள் கடல் பயிற்சி-பணி வாழ்வின் பல பரிமாணங்களை உங்களோடு பகிர்ந்து  வீச வருகின்றது அருள் சாரல். தொடர் இறையியலாக்கச் சிந்தனைகளையும் இன்றையச் சூழலலை ஆக்கிரமித்துள்ள பிரச்சனைகள், சிக்கல்கள், போராட்டங்கள், விடுதலை விழுமியங்களுக்குப் விடை தேடும் முயற்சிகளையும் தேடல்களையும் சுமந்து அருள் சாரல் வீசுகின்றது. மாணவர்-ஆசிரியர் எழுத்துப் படைப்பாற்றலை வளர்த்திடும் சாரல் துளிகளாகவும் அருள் சாரல் பூத்துள்ளது.

அருள் கடலின் முன்னாள் மாணவரோடு தொடர்பை, உறவைத் தொடர்ந்திடவும், அருள் பணியாளராகப் பல தளங்களில் சிறப்பாகப் பணி செய்யும் அவர்களின் சிந்தனைகளையும் அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ள அருள் சாரல் ஓர் இணைப்புப் பாலமாகவும் செயல்படும்.

அருள் சாரல் மலர்ந்திட உதவிய ஆசிரியர்கட்கும் மாணவர்கட்கும் அருள் நிறைந்த அன்பு வாழ்த்துகளும் நன்றிகளும். அருள் சாரலுக்கு வடிவமும் அழகூட்டிடும் அமைப்பையும் கொடுத்துள்ள மாணவர் ஏடிட்டோர் குழுவிலுள்ள பீலிக்ஸ் சகாயராஜ், சாலமோன், அருள், லிவிங்ஸ்டன் அனைவருக்கும் நெஞ்சார்ந்த வாழ்த்துகளும் நன்றிகளும்.

தமிழ்ப் பேரறிஞர் வீரமாமுனிவர் வடித்தெடுத்த தேம்பாவணி காப்பியத்தில் இடம் பெற்றுள்ள 'அருள் கடல்' எனும் பெயரை எம் முன்னோர் இந்த இறையியல் மையத்திற்குச் சூட்டியிருப்பதே இம் மையம் அருள் பெறவும் அருள் பகிர்ந்து செயல்படவும் தான். அருள் சாரல் வழியாக நாங்கள் பெற்ற அருளை உங்களோடு பகிர்ந்து கொள்ள அருள் வீச்சாக அருள் சாரலைத் தெளித்திட முன் வந்துள்ளோம். அருள் சாரலில் நனைந்திடுவோம். அருளாக மலர்ந்திடுவோம்.

# மாணவர் ஏடிட்டோர் குழுவின் நன்றிக் குவியல்



**பொறுப்பாசிரியர்**
**அருள் முனைவர். ராஜ் இருதயா**



**ஆசிரிய ஆலோசகர்**
**அருள் முனைவர். சகாயராஜ் ஸ்டான்லி**

## மாணவ ஆசிரியர் குழு



**இளவல்**
**அருள்**



**இளவல்**
பீலிக்ஸ்



**இளவல்**
**லிவிங்ஸ்டன்**



**இளவல்**
**சாலமோன்**

**தொடர்புக்கு:**
**arulsaaral@gmail.com**

“அருள் சாரல்” மின் இதழ் எம் அருள் கடலின் கருவறையில் உருவான குழந்தை. கண்டதையும் கேட்டதையும் போகிற போக்கில் காற்றில் பறக்க விட்டு விடாமல் உள்ளத்தில் நிறுத்தி அசைபோட்டுப் பார்க்கவும் அனுபவத்தை வாழ்வாக்க வேண்டும் என்ற அற்புதமான பாடத்தை அருள் கடல் இறையியல் எமக்கு மையம் கற்றுக் கொடுக்கிறது.

அருள் கடல் வாழ்வில் நாங்கள் பெற்ற அனுபவங்களையும் கற்ற பாடங்களையும் சீர் தூக்கிப் பார்க்க ஒரு தளத்தைத் தேடிய போது “மின் இதழ்” என்ற சிந்தனை உதயமானது. இச்சிந்தனைக்கு சொந்தக்காரர் எம் பாசமிகு இல்லத் தந்தை சிந்தனைச் சிற்பி அருட்தந்தை ராஜ் இருதயா சே.ச.

அருள்கடல் இறையியல் மையம் எமக்கருளிய பலதரப்பட்ட 'கள' அனுபவங்களும் 'தள' அனுபவங்களும் எம்மை அர்த்தமுள்ள இறையியலாக்க வழிகளில், செயல்பாட்டுச் சிந்தனைகளில் வார்த்தெடுக்கின்றன,

இறையியல் படிப்பு வெறும் நான்கு சுவர்களுக்குள் முடங்கி விடாது விளிம்புகளுக்குச் செல்லவும், விளிம்பு நிலை மக்களிடமிருந்து விடுதலைக்கான கீற்றுகளைக் கண்டு கொண்டு இயேசுவின் வழியில் இறையாட்சிப் பணியில் எம்மை நாங்கள் ஈடுபடுத்திடவும் எமது அருள் கடல் இறையியல் பயிற்சி முத்தாய்ப்பாக அமைந்துள்ளது.

இறையியல் பயிற்சி வாழ்வில் நாங்கள் சிந்தித்தவற்றை எம்மைச் சிந்திக்க வைத்ததை எழுத்துப் படைப்பாக மாற்றி, பகிர்ந்து பரவலாக்கம் செய்திட அருள் சாரல் ஒரு நல்ல மின் வழி இதழாக அமைகின்றது.

அருள் சாரல் என்ற சிந்தனைக்கு தன் உள்ளத்தில் உருக் கொடுத்து எம் சிந்தனைக்கு வடிவம் கொடுத்த எம்மைத் தொடர்ந்து ஊக்கப்படுத்தி வரும் எம் இல்லத் தந்தை அருட்பணி ராஜ் இருதயா சேச அவர்களுக்கு அனைத்து அருள்கடல் இளவல்கள் சார்பாகவும், அருள் சாரல் ஒருங்கிணைப்புக் குழு சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அருள் சாரல் குழுவின் ஆசிரிய ஆலோசகராக இருந்து வழிநடத்திய கல்வி இயக்குநர் அருட்பணி. சகாயராஜ் சேச அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகள்.

எமக்கு உற்ற தோழனாய் நல்ல ஆசானாய் இருந்து எம் வளர்ச்சியில் அக்கறை கொண்டு எமக்காக உழைத்து வரும் எம் இறையியல் ஆசான்களுக்கும் ஆன்ம வழிகாட்டிகளுக்கும் எம் இதயம் கனிந்த நன்றிகளைச் சமர்ப்பிக்கின்றோம்.


அருள் சாரல் துளிகளை உங்கள் மேல் தங்கள் கவின்மிகு படைப்புகளாக தெளித்திட முன்வந்துள்ள அனைத்து இளவல்களுக்கும் தோழமை நன்றிகள்.

“அருள் சாரல்” அருள்கடலின் மணிமகுடத்திற்குப் பெருமை சேர்க்கும் முத்தாய்ப்பான இன்னொரு மாணிக்கக் கல்.

வரலாற்றைத் திருப்பிப் பார்ப்பதோடு வரலாற்றைத் திரும்பிப் பார்க்கவும் வைக்கும் ஓர் அற்புதமான படைப்பு.

காலச் சூழ்நிலைக்கேற்ற எல்லார் கைகளிலும் எளிதாகத் தவழக்கூடிய ஒரு மின் இதழ். கண்கவர் அருள் சாரல் தெளிக்கும் கருத்துகளில் நனைந்திட அழைக்கின்றோம். அருள் சாரல் சிறப்புற உங்கள் சிந்தனைகளையும் பகிர்ந்து கொள்ள அழைக்கின்றோம்.

அருள் & பீலிக்ஸ்
ஏடிட்டோர் குழுவின் சார்பாக



அருட்பணி. டேனிஸ் பொன்னையா, சே.ச.
இயேசுசபை மதுரை மறை மாநிலத் தலைவர்

# புதிய மைல் கற்களைக் கடந்திடும் அருள் கடல் அன்னை

'அருள் சாரல்' வருவதறிந்து மிகவும் மகிழ்கின்றேன். தனது 41 ஆண்டுகால இறையியலாக்கப் பயணத்திலே பல்வேறு மைல் கற்களைக் கடந்து வந்திருக்கின்றார் அருள் கடல் அன்னை. அருள் கடலின் இறையியலாக்கச் சிந்தனைகள், செயல்பாடுகள், முன்னெடுப்புகள் போன்றவற்றைத் தமிழகம், இந்தியாவில் உள்ள பல்வேறு இறையாட்சிப் பணிக்களங்களுக்கு இணையதளம் வழியாகக் கொண்டுசேர்த்து பரவலாக்கம் செய்வது இன்றைய காலத்தின் அவசியமும் அறைகூவலும். இது ஓர் புதிய நற்செய்திப்படுத்தல் முயற்சி.

இப்படிப்பட்ட படைப்பாற்றல் மிக்க இறைச் செயல்பாட்டை நமது அருள் கடல் அன்னை சரியான நேரத்தில் எண்ணிப்பார்த்து திட்டமிட்டு அதை விரைவில் செயல்படுத்தியிருப்பதும் மிகுந்த பாராட்டுக்குரியது. அருள்கடல் அன்னை இறையாட்சியை மையப்படுத்திய பல்வேறு செயல்பாடுகளை மிகவும் அற்புதமாகச் செய்துவருகின்றார் என்பது உலகமறிந்த உண்மை.

அருள்கடல் இறையியல் மையத் தலைவர், அருட்பணி. ராஜ் இருதயா, சே.ச. அவர்களின் இது குறித்த பதிவுகள், தருகிற பட்டியல் போற்றத்தக்கவை. நூல்கள், இதழ்களில் கட்டுரையாக வழங்கல், கருத்துப் பட்டறைகள், பங்குப் பணிகள், சமூகச் செயல்பாடுகள், இயக்கத் தோழர்களோடு செயல்படல், அறிவு ஜீவிகளோடு கலந்துரையாடல் மற்றும் மின்னணு சாதனங்கள் வழியாக இந்தப் புதிய நற்செய்திப்படுத்தல் பணி என பட்டியல் நீள்கிறது.

அருள்கடல் அன்னை மடியில் தவழ்ந்த ஒரு முன்னாள் மாணவர் என்கிற நிலையில் இப்பட்டியல் காட்டும் அருள்கடல் அன்னையின் வளர்ச்சி கண்டு வியக்கிறேன் உளம் மகிழ்கிறேன். இத்தனை பணிகளும் அடித்தட்டுமக்கள் மற்றும் சமூகப் பணியாளர்கள் மத்தியில் விடுதலை வாழ்வுக்கான பங்களிப்புகளை அளப்பரியவகையில் செய்துகொண்டிருக்கின்றன என்பதைச் சமூக மற்றும் பங்குப் பணிகளை மக்கள் களத்தில் செய்து கொண்டிருக்கிற பலரும் நன்கறிவர்.

இத்தகையச் செயல்பாடுகள் பயிற்று நிலையில் உள்ள இறையியல் மாணவர்கள் இன்னும் உற்சாகத்துடனும் ஆழமான அர்ப்பண உணர்வுடனும் இறையியலாக்கச் செயல்பாட்டில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதற்கு ஒரு உந்து சக்தியாக இருக்குமென்பதில் மாற்றுக் கருத்தில்லை.

அருள் சாரல் படைத்திட உதவிய ஆசிரியர்கட்கும் மாணவர்கட்கும் எனது உளமார்ந்த பாராட்டுகளும் நன்றிகளும். குறிப்பாக அருள் சாரல் மலர உறுதுணையாக இருந்த மாணவர் ஏடிட்டோர் குழுவுக்கும் இன்னும் சிறப்பாக இதற்கு ஊக்கமும் ஆக்கமும் தந்த அருள்கடல் இறையியல் மையத் தலைவர், அருட்பணி. ராஜ் இருதயா, சே.ச. அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த பாராட்டுகளும் வாழ்த்துகளும் நன்றிகளும்.

அருள் சாரல் வழியாகப் பரவலாக்கம் செய்யப்படுகிற இறையியலாக்கச் சிந்தனைகள் அதன் வாசகர்கள் மீது அருள் மழையாகப் பொழியட்டும். இச்சிந்தனை விதைகள் இன்னும் எண்ணற்றப் பணித்தளங்களில் விதைக்கப்பட்டு ஆல்போல் தழைத்து பல நூறுமடங்கு பலனளிக்க வாழ்த்துகிறேன். நன்றி வணக்கம்.



**செபமாலை இருதயராஜ்**
**மறை மாநிலத் தலைவர்**
**இயேசு சபை சென்னை மறை மாநிலம்**

# புதிய பாணியில் இறையியல் களம் காணும் அருள் சாரல்

வரலாற்றில் வாழ்பவர் மனிதர்!
வரலாற்று நிகழ்வுகளுக்கு ஏற்ப
நமது வாழ்வும் பணியும் மாறாவிடில்
வரலாறு நம்மை மாற வைக்கும்! ஆம்,
வரலாற்று நிகழ்வுகளுக்கு ஏற்ப
நமது வாழ்வையும் பணியையும் மாற்றும்
களம் தான் அருள்கடல்!

அருள்கடல் என் இறையியல் களம்!
இறையியலைக் கற்றுக் கொடுத்து,
இறையியலாக்கச் சிந்தனையில் பதறவிட்டு,
இறைச் செயலுக்கு என்னை இட்டுச் சென்று,
இறைவாழ்வுப் பாடம் புகட்டிய களம் அருள்கடல்!

அதிகாரப் போதை, சாதீயப் பேய்கள்,
சாத்திரக் குப்பைகள், அடிமைத்தனங்கள் - இவை
பன்மடங்கு எழுந்து, இன்று பற்றி எரியும் நிலையில்
வரலாற்று மாற்றம் என்பது என்ன?
அடித்தள மக்களின் விடுதலை என்பது என்ன?
நீதிக்கான இறைச் செயல்பாடு என்பது என்ன?

அறநெறிமுறை, அருள்வாழ்வு,
இறையியலாக்கச் சிந்தனை, ஆய்வு, செயல் இவற்றை
இன்றையச் சூழலுக்கு ஏற்ப
எப்படி கூர்மைப்படுத்துவது என்று
என்னைப் புடம் போட்டு பார்க்க வைத்து
புது வழிகாட்டி களமாடியது அருள்கடல்!

பழையன கழிதலும், புதியன புகுதலும்
வரலாற்றுக் கட்டாயம்!
விவிலியத்தை, கிறித்துவின் வாழ்வை, இறப்பை, உயிர்ப்பை
இன்றைய மக்கள் பிரச்சினைகளுக்கு மத்தியில் புதுப்பித்து,
போராட்டங்களின் வேரோட்டங்களில்
இறைவனைக் காண வைக்கும்
வேட்கையை, அடையாளங்களை, முறைகளைக் கற்றுக்கொடுத்து,
வலுவற்றோர் வல்லமை பெறும் இறைச் செயல்பாட்டில்

இணைந்து நிற்க, கற்றுத் தரும் களம் அருள்கடல்!

கடந்த 41 ஆண்டுகளாகத் தமிழகத் திருஅவையில், இயேசு சபையில்,
இறைப் பணியாளர்களை உருவாக்கி,
சமூக நீதிக்கான, ஏழைகளுக்கான,
ஒடுக்கப்பட்டோரின் விடுதலைக்கான
செயல்பாட்டாளர்களைச் செதுக்கிவரும்
சிற்பிதான் அருள்கடல்!

தன் தொடர் இறையியலாக்கப் பணியாக,
'அருள் சாரல்' எனும் மின் இதழை உருவாக்கி,
புதிய பாணியில் இறையியல் களம் காண
புறப்படுகிறது அருள்கடல்!

அருள்கடல் இளம் இயேசு சபையாரின்,
இறை ஒளி ஊட்டிய வாழ்க்கை அனுபவம்,
செயல்படத் தூண்டிய பாதித்த நிகழ்வுகள்,
இறையியல் சிந்தனைக்கு உரமூட்டிய
எளியோரின் சவால்கள் - என
அருள் சாரல் உருவாகி இருப்பதைக் கண்டு
மனம் மகிழ்கிறது.

'அருள் சாரல்' உருவாக
தங்களது அனுபவம், சிந்தனை,
செயல்பாடுகளைப் பகிர்ந்து கொண்டோர்,
இவற்றைத் தொகுத்து வழங்கிய ஏடிட்டோர் குழுவினர்,
வழிகாட்டிய அருள்கடல் இறையியல் பேராசிரியர்கள்
அனைவரையும் ஒருங்கிணைத்துச் செம்மையாக வழி நடத்தும்
அருட்பணி. ராஜ் இருதயா மற்றும் அனைவருக்கும்
என் நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள்! பாராட்டுகள்!

இந்த 'அருள் சாரல்' உங்கள் கரங்களில் தவழும்போது,
இறையியல் ஈரம் உங்களை நனைக்கும்!
விடியலுக்கான துளிர் உங்கள் இதயத்திலும் மிளிரும்!

தமிழக திருஅவையின் இறை செயல்பாட்டுக்கு
இட்டுச் செல்லும் கருவியாக,
'அருள் சாரல்' தொடர்ந்து துணை நிற்கும்!
தொடரும் 'அருள் சாரல்'கள் - நம்மை
தொடர் பணிக்கு இட்டுச் செல்லும் அருள் மழையாகட்டும்!

# பொருளடக்க வரிசை


1 அமிழ்தல் அனுபவங்கள்

19 ஒருங்கிணைவுத்தாள்

20 தலைப்பு

23 அனுபவங்கள்

27 நிகழ்வுகள்

31 உருபாரு

33 விழாக்கள்

36 வெளியீடுகள்

37 எழுத்துப் படைப்புகள்

44 மௌனம் கலைவோம்



அலெக்ஸ் சே.ச .

# மாண்பு தேடும் மனித நெஞ்சங்கள்

அமிழ்தல் அனுபவக் களம்

ஊர் அழகானந்தல். இது திருவண்ணாமலையிலிருந்து திருக்கோவிலூர் செல்லும் சாலையில் அமைந்திருக்கிறது. ஆழகானந்தல் வேலூர் மறைமாவட்டத்தைச் சேர்ந்த பவித்திரம் பங்கின் கிளைப் பங்காகவும் இருக்கிறது. மூன்று கிலோ மீட்டர் தொலைவில் கொளக்குடி என்னும் கிராமத்தில் உயர்நிலைப் பள்ளி அமைந்திருக்கிறது.

சுமார் 1500 மக்களைக் கொண்ட இக்கிராமம் இரு வேறு சாதிப் பிரிவினரையும், சமயத்தாரையும் கொண்டிருக்கிறது. புறையர் சமூக மக்கள் இந்துக்களாகவும் அருந்ததியர் சமூக மக்கள் கிறித்தவர்களாகவும் இருக்கின்றனர். பாறையில் முளைத்த புற்களாக, பாலையில் கிடக்கும் கற்களாக, அருந்ததிய மக்கள் இங்கொன்றும் அங்கொன்றுமாக, வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் இச்சாதிய சமூகச் சூழலில். இதில் 150 கிறித்தவக் குடும்பங்கள் உள்ளன. அருந்ததிய மக்கள் கழிவுகளைச் சுத்தம் செய்பவர்களாகவும், இறந்த உயிர்களை அகற்றுபவர்களாகவும் அடையாளப்படுத்தப்படுகின்றனர். இதனால் இம்மக்கள் பட்டியலினத்தவர்களுக்குள்ளேயே மிகவும் இழிந்தவர்களாகப் பார்க்கப்படுகின்றனர். இவர்கள் ஆதிக்கச் சாதியினரின் நேரடி அடக்குமறைகளில் அதிகம் பாதிக்கப்படாதவர்கள் எனினும் அருகில் வாழும் பறையர் சமூகத்தினரால் அதிகம் ஒடுக்கப்பட்டவர்களாகவே இருக்கின்றனர். இவர்களுக்கிடையே வன்முறைகளும் கலவரங்களும் அவ்வப்போது நடப்பதுமுண்டு. இவர்களுக்கிடையே நிலவும் போட்டிப் பிரிவுகளால் இப்பஞ்சாயத்திற்குத் வேண்டிய தேவைகளையும் சரியாக நிறைவேற்ற முடியாமலேயே போய்விடுகிறது. இப்பஞ்சாயத்தில் நியாயவிலைக் கடை மட்டுமே இருக்கிறது. ஆரம்ப சுகாதார நிலையம் போன்ற அடிப்படை வசதிகள் இல்லை.

கல்விக் கண் திறந்திட

அருந்ததிய சமூக மக்களில் தற்காலத் தலைமுறையினரே கல்வி கற்கின்றனர். அரசுப் பணியிலோ அல்லது பிற உயர் ஊதிய வேலைகளிலோ யாரும் இல்லை. ஆசிரியர்களாக வெகு சிலரே பணியாற்றுகின்றனர். பட்டப்படிப்பு முடித்த இளைஞர்களும் நிரந்தர வேலையின்றிக் கூலி வேலைக்கே செல்கின்றனர். பணி. ஆரொக்கியராஜ் சே.ச. அவர்களின் விடாமுயற்சியாலே இம்மக்கள் கல்வி கற்க ஆரம்பித்தனர் என்பது மறுக்க முடியாத உண்மை. இதன் அடையாளமாக அவர் ஏற்படுத்திய மாலை நேரக் கல்வி மையம் தொடர்ந்து அகல் மையத்தின் கண்காணிப்பில் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

உழைத்து உயர விரும்புவோர்

இம்மக்களின் முதன்மையான வாழ்வாதாரமாக விளங்குவது விவசாயம் ஆகும். சோந்த நிலத்திலோ அல்லது கூலித் தொழிலாளர்களாகவோ இவர்கள் முற்றிலும் விவசாயத்தையே நம்பியிருக்கின்றனர். சாதியத்தின் அடிப்படையில் தோல் சார்ந்த தொழில்களிலே அதிகம் ஈடுபட்டு வந்த இவர்கள் தற்போது அத்தகைய தொழிலில் அதிகம் ஈடுபடுவதில்லை. தொழிலில் ஏற்படும் இந்த மாற்றமே இவர்களின் விடுதலையின் ஆரம்பம். விவசாயத்தில் ஈடுபடாதவர்கள் பெரும்பாலும் சிறு தொழில் முனைவோர்களாக உருவெடுத்துள்ளனர். பிறரிடம் வேலைக்கு சென்ற நிலை மாறி இப்பொழுது இவர்கள் பிறருக்கு வேலை கொடுக்கும் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

அனுபவங்களும் உள்ளொளிகளும்:

அறிமுகமில்லாதவர்களையும் முகமலர்ச்சியோடு தனது வீட்டில் ஏற்று உணவு கொடுப்பதில் அதிக அக்கறையும் கவனமும் காட்டுகின்றனர். “தனக்கு உணவு இல்லாவிட்டாலும் நீங்கள் வந்து சாப்பிடுங்கள். அதுவே போதும். ஏன் வயிறும் மனசும் நிறஞ்சுடும்” என்று சொல்லி இம்மக்கள் காட்டிய அன்பு என்னை நெகிழ வைத்தது.

உணவுண்டு மகிழ்ந்த போது புரியாத உண்மைகள் உறவாடும் போதுதான் புரிந்தன. இழிந்தவன் என்று முத்திரைக் குத்தப்பட்டு பார்த்தாலே தீட்டு, தொட்டாலே தீட்டு என்று தலைமுறை தலைமுறையாய்ப் புறந்தள்ளப்பட்டவர் என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது. துன்னை ஒரு சராசரி மனிதனாகவே மதிக்காத சாதியச் சமூகத்தில் என்னையும் மனிதனாக மதித்து என் வீடுநாடி வருபவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் கடவுளின் அவதாரங்களாகவே இருக்க முடியும் என எண்ணுகிறார்கள்.

“நீங்கள் உண்டாலே போதும் என் வயிறும் மனசும் நிறைந்திடும்” என்று சொல்வது உணவால் நிறைப்பதல்ல, மாறாக தீண்டாமைப் பசி நீங்கி மனம் மகிழ்விலும் தான்மையிலும் நிறையும் என்பதையே வெளிப்படுத்துகின்றது. மேலும் ஐம்புலன்களோடும், ஆறறிவோடும் பிறப்பவனெல்லாம் மனிதனல்ல மாறாக பிறரையும் தன்னைப் போல் உயர்வாக மதிப்பவனே மனிதன் என்னும் உண்மையை வாழ்வாக்குகின்றனர் இம்மக்கள்.

> புானையில் வடிப்பதனால்....சோறு
> மண்ணாகிவிடுமா? – பின்
> சேரி என்று ஏன் சேரவிடாமல்...மனிதனை
> மண்ணாக்குகிறாய்? சேரி வீட்டு சேவல்
> கூவியதால் அர்ச்சனைக்காரன்
> அரண்மனை இன்னமும் விடியவில்லையோ?

ஏன்று சாதிய சமுதாயத்தின் மீதான கேள்விகள் நீண்டு கொண்டே போகின்றன.

மேலும் ஒரு நிகழ்வு என்னை அதிகம் சிந்திக்க வைத்தது. குட்டு போட்ட கையோடு கொத்தனார் வேலை செய்து கொண்டிருந்த அந்த அண்ணனிடம், “கட்டடத்திலிருந்து விழுந்து கை ஒடிந்திருக்குன்னு சொல்லுறீங்க அப்புறம் ஏன் அண்ணா இதே வேலையைச் செய்யுறீங்க? வேற வேலையைச் செய்யலாமே?” என்று கேட்டதற்கு “பத்து பேரை வாழ வைக்கும் வாய்ப்போ வசதியோ எனக்கில்லை. ஆனால் பத்து பேரு சேர்ந்து வாழுகின்ற வீட்டை என்னால் கட்ட முடியும். ஆதனால் எத்தனை முறை கீழே விழுந்தாலும் எவ்வளவுதான் அடிபட்டாலும் உடலில் கட்டுவதற்கான தெம்பு உள்ளவரை நான் என் கொத்தனார் பணியைக் கைவிடப் போவதில்லை” என்று கூறிய அந்த அண்ணனின் வார்த்தைகள் என்னை உளி கொண்டு செதுக்கின. எனது அர்ப்பண வாழ்வையும் கேள்விக்குள்ளாக்கியிருக்கிறது. ஏதிர்பார்ப்பின்றி உண்மையான அன்பில் பிறருக்கு உதவ முடிகிறதா? வீழ்ந்து கிடக்கும் மனிதத்தைத் தூக்கிவிட நான் எடுக்கும் முயற்சி என்ன?

இவ்வாறு வாழ்வின் மாற்றத்திற்கான உள்ளொளிகளையும் ஆக்கச் சிந்தனைகளையும் இம்மக்களோடு வாழ்ந்த காலங்களில் வரமாகப் பெற்றிருக்கிறேன். அவையே பிறப்போடு பிறந்த சாதிய சாபங்களையும் தாண்டி, மொழி மத எல்லைகளையும் கடந்து எல்லோரையும் சமமாக மதித்து வாழும் எண்ணத்தை விதையாய் விதைத்திருக்கிறது.

இறையியலாக்கக் கேள்விகள்

- சாதியத்தாலும், தீண்டாமையினாலும் மாண்பிழந்திருக்கும் அருந்ததியர் மக்களின் தான்மையையும் மாண்பையும் இயேசுவின் வழியில் மீட்டெடுப்பது எப்படி?
- சாதியத்தால் சிதறுண்டு கிடக்கும் அருந்ததியர் மக்களை இயக்கமாகக் கட்டியெழுப்பி அவர்களுக்கான உரிமையை இயேசுவின் வழியில் மீட்டெடுத்துச் சமத்துவச் சமுதாயம் சமைப்பது எப்படி?
- இழிந்தவர் என்னும் அடையாளத்தை தகர்த்து தூய்மை எமது உரிமை, நிலம் எங்கள் உடைமை என்று மாண்போடு வாழும் அருந்ததியர் சமூகத்தை எவ்வாறு கட்டியெழுப்புவது?



ஆண்டோ சே.ச.

# வஞ்சிக்கப்படும் வெளிநாடு புலம் பெயர்ந்தோர்

## வெளிநாடு புலம் பெயர்ந்தோரின் வேதனைகள்

திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள கேட்டவரம்பாளையம் என்ற ஒரு பெரிய தலித் அருந்ததியர் மக்கள் கிராமத்தில் தங்கியிருந்து பல அனுபவங்கள் பெற்றேன். சொந்த நிலங்கள் இல்லாமல் தினக்கூலிகளாக அதிகம் பேர் கட்டிடத் தொழிலுக்கும், மற்றும் வயல்வெளி வேலைகளுக்கும் ஒரு சிலர் மட்டுமே அரசுப் பணிகளுக்குச் செல்கின்றனர். இயேசு சபை புலம்பெயர் தொழிலாளர் பணி மையத்தின் வழியாக இவ்வூருக்குச் சென்றதால், திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களிலிருந்து வேலையின் நிமித்தம் வெளிநாடுகளுக்குச் சென்று வேலைப்பளு மற்றும் பல வன்முறைகளால் துயருறும் குடும்பத்தாரையும், வெளிநாடுகளில் இறந்து சொந்தங்களின் உடலை மட்டும் பெற்ற குடும்பங்களையும் சந்தித்தேன்.

இம்மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் ஏராளம். மதுபானத்தினால் பல குடும்பங்கள் சீரழிந்துள்ளன. அடிமைச்சூழலில் ஆதிக்கச் சாதியினரால் ஒடுக்கப்பட்டவர்களாக, மனித மாண்பு பறிக்கப்பட்டவராக இருப்பதைத் தெரிந்து கொண்டேன். வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்தவர்களின் குடும்பங்களைச் சந்தித்த போது, மனதையே உருக்குலைக்கும் ஏமாற்றங்களும், பல ஆண்டுகளாக வெளிநாடுகளிலே வேலைபார்க்கும் சூழல் இருப்பினும் வாங்கிய கடனை அடைக்க முடியாமல் கடனுக்கு மேல் கடனும், அவமானங்களும் அதிகரித்துக் கொண்டே இருப்பதையும் காணமுடிகிறது.

## காயப்படுத்தப்பட்டவரின் அனுபவங்கள்

நாகலம்பட்டு என்ற சிறிய கிராமத்திலிருந்து சிவா, புகழேந்தி, மற்றும் கதிரேசன் என்ற மூன்று நபர்களும் ஏஜெண்டின் கவர்ச்சிகரமான பேச்சால் மயங்கி, மலேசியா சென்றார்கள். அவர்களுக்கு நிரந்தர வேலைகள் எதுவும் தராமல், வேலை செய்ததற்கும் கூலி கொடுக்காமல் அவர்களுக்கு உதவ யாருமில்லாத காரணத்தால் அவர்களை மிரட்டியும், அடித்தும் துன்புறுத்தினர். இச்சூழலில் உயிர் பிழைத்து தமிழ்நாடு திரும்பியவர் ஊருக்கு வராமல், திருச்சியில் இருந்து இப்போது வேலை செய்து தங்கள் குடும்பத்தைக் காப்பாற்றி வருகின்றனர்.

சகாயராஜ் என்பவர் ஏற்கனவே சவுதியில் பணிசெய்தவர். மகளின் திருமணத்தில் பல செலவுகள் ஏற்பட்டதால் மீண்டும் அங்குச் சென்று தோட்ட வேலை செய்ய முனைந்தார். தோட்ட வேலைக்குப் பதிலாக பாலைவனத்திலே ஆடுகள், ஒட்டகங்களைப் பார்த்துக்கொள்ளும் வேலையில் கட்டாயப்படுத்தி, துன்புறுத்தப்பட்டு அமர்த்தப்பட்டார். மனஉளைச்சலுக்கும், வன்முறைகளுக்கும் ஆளாகி, உயிர் மட்டும் மிச்சம் என்று எண்ணி, அங்கிருந்து தப்பி தாயகம் திரும்பினார். ஏஜெண்டுக்கு எதிராக வழக்கு தொடர்ந்து வெற்றி பெற்றார்,

## பாதிப்போரின் பார்வை பெறல்

'இவருக்கென்ன வெளிநாடு போய்ட்டாரு, பெரிய பணக்காரர்' என்ற எண்ணம் போய் வெளிநாடு செல்பவர்கள் மீதான புதிய பார்வை எனக்குள் ஏற்பட்டுள்ளது. மாண்பை இழந்து வேலைகள் செய்யத் தாயகம் தாண்டிச் செல்ல வேண்டுமா? என்ன கவலைகள் வந்தாலும் அதைப் பொறுத்துக்கொண்டு இலட்சிய நோக்கோடு, குடும்ப அர்ப்பணிப்போடு வாழ முயல்வோரின் வாழ்க்கை என்னைப் பெரிதும் பாதித்துள்ளது.

## இறையியலாக்கக் கேள்விகள்

- ✓ ஏமாற்றிடும் ஏஜெண்டுகளிடமிருந்து மாண்பை இழந்த புலம் பெயர்ந்த தொழிலாளர்கட்கு இயேசுவின் வழியில் எவ்வாறு நம்பிக்கையை ஊட்டிடவும், வழிகாட்டிடவும், மாண்பை வளர்த்திடவும் முடியும்?
- ✓ பல்வேறு இன்னல்கள், மீள முடியாத கடன் தொல்லைகள், மன உளைச்சல்களால் காயப்பட்டிருக்கும் புலம் பெயர்ந்த

தொழிலாளிகளுக்கு இயேசுவைப் போன்று எவ்வாறு ஆறுதலாகி அவர்களை மீளாத் துயரத்திலிருந்து மீட்டெடுப்பது?

- ✓ அதிகாரம், பணமிருந்தால் போதும் என்ன வேண்டுமானாலும் செய்துவிடலாம் என்ற அநீதச் சிந்தனையோடு செயல்படுவோர் மத்தியில் எவ்வாறு இறையாட்சியின் விழுமியங்களான நீதி, அன்பு, சமாதானம், நேர்மை போன்றவற்றை மீட்டெடுப்பது?

'

- ✓ நாங்க எல்லாம் தாழ்ந்தவர்கள்' என்று அடித்தட்டு மக்களையே சொல்ல வைக்கும் நிர்பந்தத்தை இயேசுவின் விடுதலைப் பார்வையில் எப்படி அடியோடு அறுத்தெடுத்து ஆற்றல் கொள்ளச் செய்வது?









பீலிக்ஸ் சே.ச.

# 'நீங்கள் வாழ்ந்தால் தான் நாங்கள் நல்லா வாழ முடியும்' அடிமைத்தனக் கூற்றா?

கோடை மலையின் மனத்தேவு கிராமத்தில் பழங்குடியினர் சமூகத்தைச் சார்ந்த பளியர் இன மக்கள், தொன்று தொட்டு இன்று வரை இந்தக் கிராமத்தில் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் இருபத்தி எட்டு குடும்பங்கள் தான். ஆனால் உள்ளத்தில் என்றுமே அவர்கள் ஒரே அன்பு குடும்பம். இவர்களின் நற்குணங்கள், வாழ்க்கைமுறைகள் மற்றும் அன்றாட சவால்களை அவர்களோடு நான் வாழ்ந்த இருபது நாள் அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ள விழைகின்றேன்.

பாட்டியின் கேள்வியும் எனது தேடலும்

விளிம்பு நிலையில் இருக்கும் இம்மக்களுக்கு எனது ஈடுபாடு எவ்விதத்தில் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திட உதவியாக இருக்கும்? ஒரு பாட்டியின் கேள்வியும் அதற்கு பதிலளித்த காய்கறிக்காரரின் ஆதிக்கத்தனப் பதிலும் தான் எனக்குள் இந்த கேள்வி எழுவதற்கு காரணமாக இருந்தது.

முதிர்ந்த வயதை அடைந்த பாட்டி ஒருவர் காய்கறிகள் வாங்குவதற்காக வந்திருந்தார். பளியர் சமூகத்தைச் சார்ந்த அப்பாட்டி காய்கறிகளின் விலையை உயர்த்திச் சொன்ன காய்கறிக்காரரிடம் சொன்னார், 'நாங்கள் எல்லாம் வாழ வேண்டாமா?' அதற்கு அவர் பாட்டியிடம், 'நீங்கள் வாழ்ந்தால் தான் நாங்கள் நல்லா வாழ முடியும்' என்று சொன்னார். அவர் சொன்ன பதில் என் கவனத்தை ஈர்த்தது. ஒருவர் வாழ்ந்தால்தான் இன்னொருவர் நல்லா வாழ முடியும் என்ற கூற்று பல அடிமைத்தனங்களுக்கு அடிப்படையாக இருக்கிறது. அவர்கள் குடிக்கின்ற பொதுக் குடிநீரிலிருந்து செய்யும் அன்றாடக் கூலி வேலை வரை அந்த ஒரு பதில் அவர்கள் அனுபவித்து வருகின்ற அனைத்து அடிமைதனத்திலும் பிரதிபலிக்கின்றது.

இதைப்பற்றி அவ்வூரில் உள்ள வயதானவரிடம் பேசிக்கொண்டிருந்தேன். இரண்டு வகையான அணுகுமுறைகளைக் கொண்டு சமூக அவலங்களை எதிர்கொள்வதைப் பற்றி எடுத்துச் சொன்னார். என் வாழ்க்கையை நல்ல படியாக வாழ்வது என்பது ஓர் அணுகுமுறை. சமூக அவலங்களைக் கண்டு குரல் கொடுப்பது இன்னொரு முறை. இவ்விரண்டில் மற்றவர்களுக்காக குரல் கொடுப்பது என்பது வாழ்க்கை நடைமுறையில் கடைபிடிப்பது என்பது மிகக் கடினம்.

மாணவர்கட்கு எதிரிகள்?

அழகிய சிரிப்பு மற்றும் கள்ளங்கபடமற்ற முகப்பாவங்களைக் கொண்ட அவ்வூர் குழந்தைகள் என்னை முதலில் 'சார்' என்று அழைத்தார்கள். பின்னர் அண்ணா என்றார்கள்.

பெரும்பான்மையான மாணவ மாணவியர்கள் கல்வி கற்பதில் காட்டும் ஆர்வம் பள்ளி நாட்களில் விடுமுறை எடுக்கக் காட்டும் ஆர்வத்தைவிட குறைவாகத்தான் இருக்கும். இதற்கு மூன்று மூலக்காரணங்களாக நான் பார்ப்பது 1) ஆண்ட்ராய்டு கைபேசி 2) குழந்தைத் திருமணம் 3) கூலி வேலை செய்து சம்பாதித்தல்.

- டிக்டாக்கில் வரும் காணொளியை மெய் மறந்து பார்க்கும் நேரத்தை விட புத்தகத்தைக் கையில் எடுத்து வாசிக்கும் நேரம் மிகக் குறைவு.
- பருவம் அடைந்த பள்ளிச் செல்லும் குழந்தைகள் இளம் வயதிலே திருமணம் செய்வதற்கு ஆர்வம் காட்டுகின்றனர். பெற்றோர்களுக்கும் இம்மாதிரியான நிகழ்வுகள் பெரிதாகத் தெரிவதில்லை. சமீபத்தில் என்னுடன் பேசிக் கொண்டிருந்த பள்ளி மாணவனின் திருமணம் என்னை வியப்படையச் செய்தது.
- தோட்டத்து முதலாளிகள் விரித்த பண ஆசை வலையில் பல மாணவர்கள் விழுந்து தவிக்கிறார்கள். வேலைக்குப் போகும் மாணவர்களை பார்க்கும் சக மாணவர்களுக்கு இது பெரும் சோதனையாக உள்ளது.

சாதியம் நுழைந்து விட்டதோ?

மாட்டு இறைச்சி உண்பதை தீட்டாக கருதும் அவர்கள். மாட்டு இறைச்சி உண்பவர்களை தாழ்ந்தவர்களாகக் கருதுகின்றனர். சாதிய ரீதியில் அவர்களைப் சிறுமைப்படுத்திப் பார்க்கும் பழக்கமும் அவர்கள் மத்தியில் தென்படுகின்றது. உண்மையிலே சாதியின் உட்கூறுகளை உணர்ந்து இப்படி எண்ணுகிறார்களா அல்லது இயற்கையில் இவர்களின் வாழ்வு முறை அப்படி செய்து இருக்கிறதா? என்ற கேள்வி என்னுள் எழுந்தது.




கல்வி எனும் ஆயுதம்

கடைசிநாள் விழாவின் போது வந்த பணி.லியோனார்டு அவர்கள் கொடுத்த ஊக்கத்தினால் குழந்தைகளை நன்றாகப் படிக்க வைக்க வேண்டும் என்ற ஆர்வம் அவர்கள் மத்தியில் எழுந்ததாக பாாக்கிறேன். என்னுடைய கடைசி வாழ்த்தாக அவர்களுக்கு சொன்னது, 'குழந்தைகளின் படிக்கும் ஆர்வத்தைக் கட்டி எழுப்புங்கள். கடவுள் என்றுமே உங்கள் பக்கம்,'




இறையியலாக்கக் கேள்வி

எனக்குள் ஏற்பட்ட தாக்கதின் காரணமாக எழுந்த கேள்வியாக நான் பார்ப்பது, எப்பொழுதும் மரங்களையும் அதன் பசுமைகளையும் தங்கள் கண்களுக்குத் தொடு பொருளாக வைத்து தங்கள் வாழ்க்கையை நடத்தி செல்பவர்களை, இறையொளியில் நான் எவ்வாறு புரிந்து கொள்வது? ஆதிக்கச் சமுகத்தின் நல்வாழ்விற்காக, அறியாமை என்னும் தீமையைக் கொண்டு அடக்கி ஆளப்படுகின்ற இவர்களின் விடியலையும் எழுச்சியையும் மீட்டெடுப்பதற்கான வழிமுறைகள் யாவை?





ஜோசப் சே.ச

# ஒளிர வேண்டிய இருளர் வாழ்வு

## வாழும் இடப் பின்புலம்

நான் மூழ்குதல் அனுபவத்திற்காகச் செஞ்சி திருவண்ணாமலை வழியில் உள்ள பாக்கம் என்ற கிராமத்திற்குச் சென்றிருந்தேன். இந்தப் பகுதி இயேசு சபை இருளர் பணித்தளம். இருளர் பணியில் தற்போது பணிபுரியும் இயேசு சபையினர் மற்றும் இயேசு சபை இருளர் பணி முழுநேர ஊழியர்கள் இவர்களின் அறிமுகத்தோடு எனது அனுபவத்தைத் தொடங்கினேன்.

எனக்குக் கொடுக்கப்பட்ட பணி கல்வி பயிலும் பிள்ளைகளைப் பள்ளிக்கு முறையாக, தொடர்ச்சியாக அனுப்புதல், மாலையில் அவர்களுக்குப் பாடம் கற்பித்தல். இவை இரண்டோடும் மக்களோடு இருத்தல், அவர்கள் செய்யும் வேலையை நானும் சேர்ந்து செய்தல்.

பாக்கத்தில் மொத்தம் பத்தொன்பது இருளர் குடும்பம் இருந்தன. இது ஒரு குன்றின் அடிவாரத்தில் அமைந்த இடம். மலைகளுக்கு இடையில் விவசாய நிலப்பரப்பு மத்தியில் வசிக்கிறார்கள். எனவே அவர்களின் இயற்கை எழில் சூழ் வாழ்வு என்னை மிகவும் கவர்ந்தது.

இவர்கள் செய்யும் வேலை என்று பார்த்தால் விவசாய நிலம் சார்ந்த வேலைகள் குறிப்பாக மலாட்டை, சோளம், கரும்பு போன்ற பயிர் வகைள், தானியங்கள் சார்ந்த கூலி வேலைகளும், சென்னைக்குச் சென்று ஒப்பந்த வேலையையும் செய்கிறார்கள்.

இவர்கள் வாழும் பகுதியில் எந்த ஓர் அடிப்படை வசதி ஒன்றும் கிடையாது. அங்கிருந்து 5 கி.மீ. தூரம் சென்றால் தான் மருத்துவமனை, மேல்நிலைப்பள்ளி உள்ளன. பேருந்து வசதி அதிகம் இல்லை எனவே நடந்து தான் அதிக நேரம் அருகில் இருக்கும் கிராமங்களுக்குச் செல்வார்கள்.

## அனுபவங்கள் எழுப்பிடும் தேடல்கள்

நான் சென்ற நாள் முதல் என்னுடைய இருப்பு மக்களுக்கும் எனக்கும் மாற்றத்தைக் கொண்டு வந்தது. ஏனெனில் நான் மக்களிடமிருந்து பெற்ற அனுபவங்களும் மக்கள் என்னிடமிருந்து பெற்ற அனுபவங்களும் எராளம்.

**கல்வி கற்கும் ஆர்வத்தை உசுப்பிவிடல்:** மாணவர்களை எப்படியாவது கல்வியில் ஆர்வமிக்கவர்களாக மாற்ற முயன்றேன். அவர்களின் பெற்றோர் சென்னைக்கு வேலைக்காகச் சென்றிருப்பதால் அதிகம் பேர் தங்கள் தாத்தா பாட்டியோடு இருப்பவர்கள். எனவே அவர்களைப் பள்ளிக்கு ஒழுங்காக அனுப்ப யாரும் கிடையாது. நான் இருந்த நாட்களில் எல்லா நாளும் நானும் அவர்களோடு பள்ளிக்குச் செல்வேன். எப்பொழுதெல்லாம் விடுமுறை வருகிறதோ அடுத்த நாளும் சேர்த்து இவர்கள் விடுமுறை எடுத்துவிடுவார்கள். எனவே நான் இவர்களோடு இருந்த பொழுது சுதந்திர தினம், கிருஷ்ண ஜெயந்தி மற்றும் மழையால் விடுமுறை என்று பல தடங்கல்கள் இருந்தன. இந்த நிலையில் இவர்களை நான் அடிக்காமல் எனக்குப் பதிலாக ஊர் மக்களே 'டேய் சார் சொல்லுராரு பள்ளிக் கூடத்துக்கு போகாம இருக்காதே' என்று தங்கள் ஊரில் உள்ள மாணவர்களைப் பள்ளிக்கு அனுப்பி வைத்தது என்னை மிகவும் பாதித்தது.

**சுரண்டப்படும் இருளர்:** நானும் இவர்களோடு சில நாட்கள் மலாட்டைப் பிடுங்கவும், ஆடு மேய்க்கவும், நிலக்கரி வேலையும் செய்யச் சென்றேன். கடும் வெயில் என்று பாராமல் கடினமாக உழைத்தாலும் தகுந்த ஊதியம் இவர்களுக்குக் கிடைப்பதே இல்லை. இவர்களின் இரத்தத்தில் மகிழ்பவர்கள் ஏராளம். இவர்கள் பிறருக்காக நடித்து வாழத் தெரியாதவர்கள். இவர்களின் எதார்த்தமான வாழ்வு என்னை மிகவும் பாதித்தது.

## இறையியலாக்கக் கேள்விகளும் எதிர்நோக்குக் கீற்றுக்களும்

- “மண்ணுலகு உருவற்று வெறுமையாக இருந்தது. ஆழத்தின் மீது இருள் பரவியிருந்தது” (தொ 1:1)

இருளர்கள் என்று அழைக்கப்படும் இவர்கள் உருவற்று வெறுமையாகப் பிறரால் ஓரங்கட்டப்படுகிறார்கள். அந்த ஆழத்தின் இருள் இவர்களை வெளியே வர வாழ்க்கையில் முன்னேற விட மறுக்கிறதோ?

- ஒரே மழையில் அவர்களுடைய வீடுகள் அனைத்தும் தண்ணீருக்குள் மூழ்கியது என்னை மிகவும் சிந்திக்க வைத்தது. அதிலும் குறிப்பாக வீட்டுக்குள் தண்ணீர் புகுவதைக் கண்டு ஒரு மாணவி ஓடிச் சென்று தனது பள்ளி பையைப் எடுத்தது இவர்களின் நிலை விரைவில் மாற்றம் காணும் என்ற நம்பிக்கையைத் தந்தது.

இறைவனில் இரண்டறக் கலந்து, இயற்கையை தம் வசப்படுத்தி வாழும் இம்மக்களுக்கு இயேசு கண்ட இறையாட்சிச் சமூகத்தை வளர்க்க, நம்பிக்கை என்னும் வெளிச்சத்தை இருளர் மத்தியில் ஒளிவீசச் செய்யக் கூடிய சாத்தியக் கூறுகள் எவை?

அனைத்தையும் இழந்து நிர்க்கதியாய் நிற்கும் இந்த இருளர் சமூகத்திற்கான விடுதலை விழுமியங்களை அறிந்து, ஆற்றல்மிக்க சமூகமாக உருவெடுக்கச் செய்வது எப்படி?



**ஒரு தனி நபரின் வாழ்க்கை முட்களும் களைகளும் நிறைந்த நிலமாக இருந்தாலும், நல்ல விதை வளரக்கூடிய இடம் எப்போதும் இருக்கிறது. நாம் கடவுளை நம்ப வேண்டும்.**

**திருத்தந்தை பிரான்சிஸ்**



ஜான் கமிலஸ் சே.ச.

# என்னைக் கவர்ந்த ஏழையரின் உழைப்பும் கல்வி கற்கும் ஆர்வமும்

உயர விரும்பும் ஓர் ஊர்

மருதத்தை அகத்திலும் நெய்தலைப் புறத்திலும் கொண்ட ஊர் தான் நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள நெப்பத்தூர் என்ற கிராமம். இந்த ஊரில் எறக்குறைய நூறு குடும்பங்கள் இருக்கின்றன. இவர்கள் ஓரே சாதியைச் சேர்ந்த ஏழை அடித்தட்டு மக்கள். 95 விழுக்காடு மக்கள் இந்து மதத்தைப் பின்பற்றுபவர்கள். பெரும்பாலானோர் அரசு கட்டிக் கொடுத்த கான்கிரீட் வீடுகளிலும் ஓட்டு, ஓலைக் குடிசைகளிலும் வாழ்கின்றனர். பெரும்பாலான ஆண்கள் கொத்தனார் வேலைக்காகக் கேராளாவுக்குச் செல்கின்றனர். பெண்கள் வயல்வெளியிலும் பருத்தித் தோட்டத்திலும், நூறு நாள் வேலைத் திட்டத்திலும் மூன்று மாதத்திற்கு ஒருமுறை வரும் வேலைக்குச் செல்லும் அன்றாடக் காய்ச்சிகள். ஒரு சில குழந்தைகளைத் தவிர அனைத்துக் குழந்தைகளும் அருகிலுள்ள திருநகரி ஊரில் அமைந்திருக்கும் அரசு உயர்நிலைப் பள்ளியில் தான் படிக்கின்றனர்.

ஓயாத உழைப்பின் மறு உருவமோ!

ராமாயி என்பது அவரது பெயர். இவர் சாந்தமான குணமும், இளகிய மனமும் கொண்டவர். கணவனை இழந்து எட்டு வருடங்கள் ஆகின்றன. இவருக்குச் சொந்தம் என்று சொல்ல ஒரே ஒரு பெண் குழந்தையும், இரண்டு பேத்திகளும், ஒரு பேரனும் உண்டு. அவர்கள் வெளியூரில் இருப்பதால் இவர் தனியாக அந்தச் சின்ன ஓலைக் குடிசையில் வாழ்ந்து வருகிறார். ஒரு நாளுக்கு ஒரு டம்ளர் அரிசி போதும். ஒரு நாள் செய்யும் குழம்பு மூன்று நாளைக்கு வரும்.. பிரசவம் பார்ப்பதில் கூடக் கைப் பக்குவமும் மன தைரியமும் கொண்டவர். நூறு நாள் வேலைக்கும் வயலுக்கும், பருத்தித் தோட்டத்திற்கும் உழைப்பைத் தேடிச் செல்பவர். இதைத் தவிர திருமண மண்டபங்களில் தோட்டத்தைச் சுத்தம் செய்தல், இருக்கைகளைச் சுத்தமாக வைத்திருத்தல், சமையல் செய்ய உதவுதல் போன்ற வேலைகளையும் வாய்ப்பு கிடைக்கும் போது செய்வார். சாகும் வரை தன் சொந்த கையால் உழைத்து வாழ வேண்டும் என்ற வைராக்கியம் கொண்டவர்.

எனது அனுபவ இறுதி நாளில் குழந்தைகளுக்கு விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ராமாயி பாட்டியின் பழைய வீட்டின் தளம் தான் அந்த விழாவிற்கான அரங்கம். அதிலிருந்த குண்டு குழிகளை மண்ணால் நிரப்பி, கையால் பூசி உருட்டுக்கட்டையால் அடித்து சிறுவர்களின் உதவியுடன் சமதளமாக்கி வைத்திருந்தோம். அச்சிறுவர்களுடன் சேர்ந்து நானும் வண்ணத்தாட்களால் அரங்கத்தை அலங்கரித்துக் கொண்டிருந்தேன். இளைஞர்கள் அரங்கத்திற்கு முகப்பலிருந்த சுவரில் சிறுவர் சிறுமியர் மரங்கள் பறவைகள் மற்றும் வயலும் கொண்ட ஓவியத்தை அழகாக வரைந்திருந்தார்கள். அந்தத் தளத்தை சாணியால் பூசினால் அரங்கத்திற்குரிய எழில் மிளிரும். அது இரவு 11.45 மணி. பாட்டி மண்டப வேலை முடித்து விட்டு வீட்டிற்கு வருகிறார். அவர் கொண்டு வந்த ஒரு வாளி நெய் உப்புமாவை நாங்கள் எட்டு பேரும் சாப்பிட்டு முடித்தோம். அப்போது இரவு மணி 12.15. நான் பாட்டியைப் பார்த்து, “பாட்டி, சாணியால் மொழுகினால் தான் இந்த தளம் அரங்கம் போல் காட்சியளிக்கும்.” உடனே பாட்டி, “இப்ப மொழுகினால் தான் நாளைக்கு காயும்.” அவள் என்னிடம் பக்கத்து வீட்டில் இருக்கும் அடி குழாயிலிருந்து இரண்டு குடங்கள் தண்ணீர் கொண்டு வரச்சொல்ல நானும் அலைபேசியினுடைய டார்ச் உதவியால் ஒரு சிறுவனின் உதவியோடு தண்ணீர் கொண்டு வந்தேன். பாட்டி அந்த இரவில் தன்னந்தனியாக 50 மீட்டர் தூரம் நடந்து சென்று வேறொரு வீட்டிலிருந்து சாணி சுமந்து வந்தார். அந்த இருளுக்கு அன்று அவர் தான் பௌர்ணமி. அவரது நேரம்

பாராமல் செய்த உழைப்பாலும், கை வண்ணத்தாலும் அந்தத் தளம் அரங்கமாக மெருகேறியது. அப்போது இரவு மணி 1.15. வேலை முடிந்த மனதிருப்தியுடன் நாங்கள் உறங்கச் சென்றோம். அவரோ துயிலெழுந்தது அதிகாலை 4.30 மணிக்கு. நடைபயணமாய் 5 மணிக்கே வேலைக்குப் புறப்பட்டு விட்டார். அவரின் ஓய்வைத் தேடா உழைப்பையும், எளிய மனத்தையும் கண்டு வியந்து போனேன்.

வாய்ப்பு கொடுக்கும்போது வளர்ச்சியும் வராதோ!

நான் அங்குள்ள குழந்தைகளை ஒன்றாகத் திரட்டி மாலை நேர வகுப்பு எடுப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தேன். அந்த வகுப்பு 6 மணியிலிருந்து 8 மணி வரை போகும். சில நேரங்கனில் மாணவர்களுக்கு படிக்க வேண்டிய பாடங்கள் அதிகம் இருப்பதினாலும் அவர்களுடைய ஆர்வத்தினாலும் அந்த வகுப்பு 9 மணி வரைக்கும் செல்லும். அன்று ஞாயிற்றுக் கிழமை, நான் குளித்துக் கொண்டிருந்த போது ஒரு சிறுவன், “அண்ணா, இன்னிக்குக் காலையில் டீயூசன் இருக்கா?” என்று வினவ நானும், காலையில் டீயூசன் இல்லை, வழக்கம் போல மாலையில் டீயூசனுக்கு வாங்க என்று கூற அவனும் வீட்டிற்கு சென்றான். நான் குளித்து முடிப்பதற்கு முன் திரும்பவும் வந்து, “அண்ணா, எங்க அக்காவுக்குப் படிக்க நெறய இருக்குதாம். டீயூசன் வைங்கண்ணா?” அந்தக் குழந்தைகளின் ஆர்வத்தைக் கண்டு மெய்சிலிர்த்துப் போனேன். பிறகு 10 மணிக்கு அவர்களை டீயூசனுக்கு வரச்சொன்னேன். அவர்கள் அடுத்த தெருவில் இருந்ததால் அங்குள்ள 8, 9, 10 வகுப்பு படிக்கும் மாணாக்கர்களைத் திரட்டிக் கொண்டு வந்தனர். அவர்கள் படிக்கவிருந்த மனப்பாடப் பாடல் பகுதியை யூடீபுலிருந்து பதிவிறக்கம் செய்து அதைக் காண்பித்து அவர்களுக்கு புரியும் வகையில் சொல்லிக் கொடுத்தேன். அவர்களும் மகிழ்ந்தனர்.

இறையியலாக்கக் கேள்வி

கடின உழைப்பும் முன்னேற வேண்டும் என்ற ஆர்வமும் கொண்ட ஏழை எளிய மக்கள் உழைப்பின் கனியைச் சுவைத்திட, விடுதலை வாழ்வைப் பெற்றிட இயேசுவின் இறையாட்சிப் பாணியில் எவ்வகையான முன்னெடுப்புகளை எடுக்க வேண்டும்?



**மனித உரிமைகள் பயங்கரவாதம், அடக்குமுறை அல்லது படுகொலைகளால் மட்டுமல்ல, மோசமான மற்றும் நீதியற்ற ஏற்றத்தாழ்வுகளை உருவாக்கும் நியாயமற்ற பொருளாதார கட்டமைப்புகளாலும் மீறப்படுகின்றன.**

**திருத்தந்தை பிரான்சிஸ்**



லாரன்ஸ் சே.ச.

# விடுதலை வாழ்விற்காக ஏங்கிடும் கிராமம்

வரலாற்றுப் பிழையான கிராமம்

நான் எனது அமிழ்தல் அனுபவத்திற்காகத் தர்மபுரி மாவட்டம் அரூர் பங்குத்தளத்தில் பேதாதம்பட்டி எனும் கிளைப்பங்கிற்குச் சென்றேன். பேதாதம்பட்டி அழகிய மலைகள் சூழ்ந்த பகுதி. வனத்துறையினரின் அடக்குமுறையால் வரலாற்றுப் பிழையைச் சுமந்து வாழும் வாசாத்தி எனும் ஊரின் அருகில் உள்ள ஒரு சிற்றூர். ஏறக்குறைய அங்கு ஆயிரம் குடும்பங்கள் உள்ளன. அந்த மொத்த மக்கள் தொகையில் நான் முப்பத்தைந்து கத்தோலிக்கக் கிறிஸ்தவக் குடும்பங்களோடு மட்டும் எனது அனுபவத்திற்காகத் தங்கியிருந்தேன். மற்ற குடும்பங்கள் அனைத்தும் இந்து மதத்தைச் சார்ந்தவர்கள். பேதாதம்பட்டி மக்களின் வாழ்வியல் ஆதாரம் என்பது வர்ணம் பூசும் பணியாகும். ஒப்பந்தத்தின் அடிப்படையில் புதிதாகக் கட்டப்படும் வீடுகளைப் பொறுப்பெடுத்து ஒரு குழுவாகச் சேர்ந்து வேலை செய்கின்றனர். சில சமயம் தனியாக வேறு சில நபர்களுக்கு கீழோ இந்த வேலையைச் செய்து வருகின்றனர். தேர்தல் காலங்களில் அரசியல் கட்சிகளுக்காகச் சுவர்களில் வர்ணம் பூசும் பணியினையும் செய்து வருகின்றனர். பெண்களில் பெரும்பான்மையானோர் வீட்டுப் பராமரிப்பில் தங்களை ஈடுபடுத்திக் கொள்கின்றனர். ஒரு சில பெண்கள் நூறு நாள் வேலைத் திட்டத்தின் அடிப்படையில் அந்தப் பணிக்குச் செல்கின்றனர்.

வேதனைகளுக்கு விடியல் இல்லையா?

போதாதம்பட்டியில் நான் தங்கியிருந்த இடம் புதிரை வண்ணார் வாழுமிடம். பிறப்பால் தலித் பிரிவுக்குள் இருந்தாலும், கிறிஸ்தவர்கள் என்பதால் அரசால் பிற்படுத்தப்பட்டோர் பிரிவில் சேர்க்கப்பட்டு அரசு ச லு ை க க ை ள ப ் ெ ப ற த ் தகுதியில்லாதவர்களாக்கப்பட்டனர். தலித் இனமக்களே மதத்தின் அடிப்படையில், சாதிய உட்பிரிவின் அடிப்படையில் ஒதுக்கி வைப்பதை, தீண்டாமைக்கு உட்படுத்துவதை மற்றும் வசைமொழி வாங்குவதைக் கண்டு, போராட வலிமையில்லாமல் வேறு ஊர்களுக்கு இடம் பெயரும் சூழலையும் ஒருவரால் காணமுடிகிறது. இன்றும் கூட இந்தக் கிறிஸ்தவத் தலித் மக்கள் தங்களுக்கென்று அந்த ஊரில் புதிதாக ஒரு நிலம் வாங்க முடியாது என்கிற நிலை உள்ளது. சுமார் முப்பது வருடங்களுக்கு முன்பு ஒரு வெளிநாட்டு அருட்பணியாளரின் உதவியால் இந்த மக்கள் கல்வி பெற்றிருந்தாலும், படித்துப் பெற்ற பட்டங்களுக்கு ஏற்ற வேலை வாய்ப்பு கிடைக்காது வர்ணம் பூசும் தொழில் செய்து தங்கள் வாழ்வாதரத்தைத் தேடிக்கொள்ளும் அவநிலையைக் காணமுடிகிறது.

உயர் படிப்பு படிப்பதற்கோ அல்லது அரசு அலுவலகப் பணிக்கான தேர்வுகளை எழுதுவதற்கோ பண உதவி செய்து தர ஆள் இல்லாது மனம் உடைந்து நிற்கின்றனர். அரூர் பேரூராட்சி திருமாவளவன் தலைமையிலான விடுதலைச் சிறுத்தைகள் எனும் அரசியல் கட்சியின் செல்வாக்கைக் கொண்டிருந்தாலும், அந்தக் கட்சியின் கவன எல்லைக்குள் இந்தக் கிறிஸ்தவத் தலித் மக்கள் சேர்த்துக் கொள்ளப்படாமல், அரசியல் அல்லது இயக்கத் தோழமை இல்லாது தனித்துவிடப்பட்டிருக்கின்றனர். தங்கள் வாழ்க்கைத் தேவைகளை நிறைவு செய்வதற்காகக் கடன்பட்டு, பிறகு கடன்காரர்களுக்குப் பயந்து ஓடி ஒளியும் அவலமும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. வாழ்வின் பாரங்களைத் தாங்க முடியாமல் குடிப்பழக்கத்திற்கு ஆளாவதும், குடும்பச் சண்டையில் முடிவதும், ஏன் தற்கொலை செய்து கொள்வதும் ஒரு தொடர் கதையாகவே மாறிப் போனது. இவை எல்லாவற்றிற்கும் மேலாக, கிறிஸ்தவர்களாய் இருப்பதால் 'திருஅவையாவது தங்கள் வாழ்வை மேம்படுத்த உதவி செய்யும்' என்ற அவர்களது நம்பிக்கையையும் ஒரு சில

அருள் தந்தையர்கள் சிதைத்துவிட்டதாக அம்மக்கள் கூறுகின்றனர்.
இவ்வாறு பொருளாதார, சமூக, அரசியல், சமய மற்றும் குடும்ப சூழலில் பாதிக்கப்பட்டு தங்கள் எதிர்ப்புக் குரலை, போராட்டத்தைத் தெரிவிக்க முயன்றதால் காவல்துறையினரிடம் அடக்குமுறைக்கும் உள்ளாகி இருக்கின்றனர்.

ஈடுபாட்டில் கற்றது

தங்கியிருந்த வீட்டில் வீட்டு வேலைகளுக்கு உதவியாக இருப்பது, குழந்தைகள் பள்ளி செல்லும் முன் அவர்களது வீட்டை முன்பாகவே சந்தித்து அவர்களுக்கு வாழ்த்துச் சொல்லி அனுப்புவது, இதர வீடுகளைச் சந்தித்து அவர்களோடு தேநீர் அருந்துவது, உணவு உண்பது மேலும் அவர்களோடு உடனிருந்து நேரம் செலவிடுவது போன்ற செயல்களில் முதலில் என்னை ஈடுபடுத்திக் கொண்டேன். அவர்களுடைய இன்பத்திலும் துன்பத்திலும் உடனிருந்து அவர்களுடைய உணர்வுத்தளத்தில் பங்கு பெறுவது, மற்றும் வாய்ப்பு இருக்கும் போது வர்ணம் பூசும் வேலைக்கு செல்வது, மாடு மேய்ப்பது போன்ற செயல்களிலும் என்னை ஈடுபடுத்திக் கொண்டேன். எனது ஈடுபாடு மக்களோடு மக்களாக இருக்க, அவர்களின் வாழ்வாதரத்திற்கான துன்பங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள உதவியது. மாலை வேளையில் மாணவர்களுக்கு விளையாட்டு, படிப்பு மற்றும் மறைக்கல்வி கற்றுக் கொடுத்தல், ஊர் மக்களோடு சேர்ந்து செபமாலை செபித்தல் போன்ற செயல்கள் எனது ஈடுபாட்டில் மக்களை மற்றும் குழந்தைகளை ஒருங்கிணைத்த தளங்களாகும்.

விடை தேடும் இறையியல் வினாக்கள்

1. சாதிய உட்பிரிவுப் பூசல்களால் பொருளாதார, சமூக, அரசியல் மற்றும் சமயச் சூழலில் பாதிக்கப்பட்டு நாடோடிகளாய்த் திரியும் இம்மக்களை எவ்வாறு மனிதமாண்பு போற்றும், உரிமைக் குரல் எழுப்பும் ஓர் இயக்கமாகக் கட்டியெழுப்புவது?

'

2. படித்தால் முன்னேறலாம்' என்ற வாசகத்தை நம்பி பட்டப்படிப்புகளைப் படித்தும் வேலையில்லாத் திண்டாட்டத்தால் வஞ்சிக்கப்பட்டு, தினக்கூலியாக நம்பிக்கை இழந்து நிற்கும் இளைஞர்களுக்கு எவ்வாறு நம்பிக்கையை, எதிர்நோக்கை அவர்கள் வாழ்வில் மீட்டெடுக்க உதவுவது?

3. அடிப்படைத் தேவைகள்கூட நிறைவேற்றப்படாமல் மனஅழுத்தத்தாலும் மனச்சோர்வாலும் கவனத்தைச் சிதறடித்துக் கொண்டிருக்கும் குழந்தைகளுக்கு எவ்வாறு படிப்பின் மகத்துவத்தை அவர்களது வாழ்வின் விடுதலையைப் புரிய வைப்பது?

4. பாலினப் பாகுபாட்டின் அடிப்படையில் பொழுதுபோக்கு இன்றி வீட்டிலேயே முடக்கப்பட்டிருக்கும் பெண்களை எவ்வாறு சமுதாயச் சக்திகளாக மலர வைப்பது?







மனோஜ் சே.ச

# சகதியில் இருந்து சக்திக்கு … …

சாதியச் சமுதாயம் திணிக்கும் வலிகள்

“அடுத்த சென்மம்னு ஒன்னு இருந்துச்சுனா நான் இந்த எனத்துல (இனத்தில்) மட்டும் பொறக்க விரும்பல தம்பி. எங்க சொந்த ஊர்லலாம் இப்படியில்ல. ஆனா கட்டிக்கிட்டு வந்த இந்த ஊர்ல எங்கள வித்தியாசமா நடத்துறாங்க” என்று கல்வியியல் படித்த வடிவு அக்கா உதிர்த்த வார்த்தைகள் அவரின் மனதில் மட்டுமல்ல பலரின் மனதிலும் ஆண்டாண்டு காலமாக தேங்கி நிற்கும் கோபம், ஆதங்கம், இயலாமையின் வெளிப்பாடு. அறிவியல் வளர்ச்சி, தொழில் நுட்ப வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி என்று அனைத்தாலும் தகர்க்கப்பட முடியாமல் இந்திய சமூகத்தை ஆட்டிப்படைக்கும் சாதிப் படிநிலையின் உச்சக்கட்ட விளைவு தான் இந்த வார்த்தைகள் விவரிக்கும் வலி.

சக்தி ஊட்டும் மையம்

பல்முனை அடக்குமுறைக்கு உள்ளாயிருக்கும் தலித் பெண்களைச் சக்தியாகத் திரட்டி திராணியோடு திக்கெட்டும் கலை வழி விழிப்புணர்வூட்டும் பணியைச் செய்துவரும் சக்தி மையத்திற்கு எனது மூழ்குதல் அனுபவத்திற்காகச் சென்றிருந்தேன். அருட்சகோதரிகள். சந்திரா, பெல்சி இந்த மையத்தை நடத்தி வருகிறார்கள். கலைப் பயிற்சிகளோடு அப்பெண்கள் சுயமாக நிற்பதற்காகச் சுய தொழில் (கூடை பின்னுதல், தையல்) பயிற்சிகளையும் இம்மையம் அளித்து வருகின்றது. தலித் மாணவர்களிடையே கல்வி கற்கும் ஆர்வத்தை வளர்த்தெடுக்க சில கிராமங்களில் மாலை நேரக் கல்வி மையங்களையும் நடத்தி வருகிறார்கள்.

சக்தியாகிடும் சகதி

சக்தி மையத்தின் நிறுவனர்- இயக்குநர் அருட்சகோதரி. சந்திரா அவர்களிடம் இந்த மையம் தொடங்குவதற்கான தொடக்கப்புள்ளி எதுவென்று உரையாடிக்கொண்டிருந்தேன். அவரது நவ துறவற கிராம அனுபவத்தின் போது அவருக்கு ஏற்பட்ட ஓர் அனுபவம் அவரது அர்ப்பண வாழ்வினை முழுமையாக ஒடுக்கப்பட்ட மக்களின் மேம்பாட்டிற்காக அர்ப்பணிக்க உந்து சக்தியாக இருந்ததாகக் குறிப்பிட்டார். சகோதரி அவர்கள் வயல் வெளியில் ஒடுக்கப்பட்ட மக்களோடு வேலை செய்து கொண்டிருந்த போது களைப்பினால் தண்ணீர் தாகமெடுக்க அங்கு வைக்கப்பட்டிருந்த குடத்தில் செம்பினைக் கொண்டு தண்ணீர் குடிக்க முயன்றிருக்கிறார். அதைப் பார்த்த அந்த தோட்டத்து முதலாளியம்மா அந்த செம்பினை தட்டிவிட்டு அவரை கேவலமாகத் திட்டிவிட்டு சேற்றோடு இருந்த அருட்சகோதரியின் கைகளில் செம்பினை உயரத் தூக்கி தண்ணீர் குடிக்க ஊற்றியிருக்கிறார். அந்நிகழ்வு ஓர் ஆறாத வடுவாக அவர் மனதில் பதிந்துள்ளது.

அந்த வடுக்களின் வலிகளில் பிறந்த உத்வேகம் தான் இந்த சக்தி மையம் என்றார்கள். இது சகதியிலிருந்து சக்திக்கான பயணம். அனுபவத்தினை அணைகட்டித் தேக்கி வைக்கும் போது நிச்சயமாகப் பள்ளத்தை நோக்கி ஆவேசத்தோடும் ஆற்றலோடும் நம்மை பயணிக்கச் செய்யும். யோர்தான் நதிக்கரையில் நிகழ்ந்த அப்பா அனுபவம் வாழ்வை முடக்கும் சமூகக் கூறுகளால் முடங்கி கிடந்த ஒடுக்கப்பட்ட, புறக்கணிப்பட்ட மக்களின் சார்பாக நின்று அவர்களின் வாழ்வினை மேம்படுத்தும் செயல்பாட்டில் ஈடுபட்டு அதன் விளைவாக நிர்வாணமாக்கப்பட்டு நிர்க்கதியற்று சிலுவையில் தொங்குவதற்காகவோ? எனக்கான யோர்தான் அனுபவம் எது என இந்த அனுபவம் என்னை சிந்திக்கத் தூண்டியது.

அப்பாடா எனக்கு கீழேயும் ஒருத்தன் இருக்கான்!

இந்தியச் சமூகம். அடுக்கிவச்ச பொதி மூட்டை மாதிரி இருக்கிறது. தன்னை ஒருவன் அடக்குவதைக் கண்டு திமிறி எழும் ஒரு சமூகம் அதே திமிரைக் கொண்டு

மற்றொரு சமூகத்தை மிதித்துக் கொண்டிருப்பது வேதனையானதே. இந்த மனோபாவம் ஒடுக்கப்பட்ட மக்களின் உட்சாதிப் பிரிவினரிடையேயும் கண்டது மனதுக்கு வேதனை அளிப்பதாகவும் சாதிய அமைப்பின் சூட்சுமத்தைப் புரிந்து கொள்ளவும் உதவியது. ஒடுக்கும் ஆதிக்கச் சக்திகளுக்கு எதிராக ஒடுக்கப்பட்டோர் ஓரணியாக அமைப்பாகத் திரளத் தடையாக இந்தச் சாதியப் படி நிலை அமைப்பு சதி வேலை செய்வது அப்பட்டமாகத் தெரிந்தது.

இன்னும் எதுக்குப்பா அவுங்களுக்கு இடஒதுக்கீடு

இன்னும் ஏன் கல்வித்துறையிலும் வேலை வாய்ப்புத் துறையிலும் இடஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் எனும் கேள்வியும் பொருளாதார அடிப்படையில் இடஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்ற ஆதங்கமும் தொடர்ந்து கொண்டே உள்ளன. ஆனால் நான் சென்ற கிராமத்தில் வாழும் மக்கள் அனைவரும் இந்து தலித் மக்களாக இருந்தும் இடஒதுக்கீட்டின் மூலமாக பயன் பெற்று அரசுசார் நிறுவனங்களில் பணியாற்றும் எந்த ஒரு நபரையும் காண முடியவில்லை அதே சமயத்தில் அந்த கிராமத்திற்குட்பட்ட பஞ்சாயத்தில் தலித் மக்கள் துப்புரவுப்பணியில் மட்டும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இந்த சமூக எதார்த்த நிலை என்னுள் ஆயிரம் கேள்விக்கணைகளை தொடுத்தது.

இடஒதுக்கீட்டுக்கு எதிராகத் தங்கள் ஆதங்கங்களை வெளிப்படுத்தும் பலரும் சமூக எதார்த்தத்தைப் புரிந்து கொள்வதில்லை என்கிற தெளிவு ஏற்பட்டது. சமத்துவ சமூகத்தை நோக்கிய பயணத்தின் முதல் படியான இடஒதுக்கீட்டைப் பற்றிய தகவல்களை அறியாத சமூகமாக அவர்கள் இருந்தது வேதனையை அளித்தது. அம்பேத்கரின் தாரக மந்திரத்தில் போராடு ஒன்று சேர் என்பதன் வீரியத்தைப் புரிந்து கொண்ட ஒடுக்கப்பட்ட மக்களுக்குக் கற்பதன் மற்றும் கற்பிப்பதின் வீரியத்தை உணரச் செய்ய வேண்டும் என்ற தெளிவு ஏற்பட்டது.

அடையாளங்களை அவமானமாக்கியது யார்?

சமூக விடுதலைச் சிந்தனைகள் இவற்றை தவிடுபொடியாக்கி புதிய அர்த்தங்கள் கற்பித்தாலும் வேதனைக்குரிய விசயம் என்னவென்றால் ஒடுக்கப்பட்ட மக்களும் தங்களின் அடையாளம் அவமானம் என்று கட்டமைக்கப்படுவதை ஏற்றுக்கொண்டு அதைத் தாழ்வாகக் கருதும் மனப்பாங்கு தான். தாழ்வாகக் கருதும் மனப்பாங்கு சிறிது மாறியிருந்தாலும் முற்றிலும் ஒழியவில்லை என்பது எனது அனுபவம் காட்டும் நிதர்சனமான உண்மை ஆகும். பண்பாட்டு அடையாளங்கள் மீது வலிந்து சுமத்தப்பட்ட இந்த அவமானங்களை மறு கட்டமைப்பு செய்து பரவலாக்கம் செய்ய வேண்டியது இன்றும் தேவைப்படும் ஒரு பண்பாட்டுத் தேடலாகும்.

புரட்டிப் போடும் இறையியலாக்கக் கேள்விகள்

- மாண்பைத் தொலைத்துத் தங்கள் சுயமரியாதையை இழந்து வாழும் அடித்தள மக்கள் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்கள் மனித மாண்பைப் பெறுவதற்கான விடுதலைப் போராட்டத்தில் சமத்துவம் மற்றும் சமூக நீதியைப் பெற இயேசுவின் இயக்கம் காட்டும் நெறிகள் யாவை?
- படைப்பு அனைத்தும் நல்லது எனக் கண்ட கிறித்தவ கொள்கைகளுக்கு மத்தியில் சமூகத்தில் தினமும் பார்க்கப்படும் தூய்மை மற்றும் தீட்டு ஆகியவற்றைப் புரிந்து கொண்டு அவற்றை மறுகட்டமைப்பு செய்வதற்கான சாத்தியக் கூறுகள் யாவை?
- சமூகம் கட்டமைத்த எல்லைகளால் தங்கள் வாழ்வைத் தொலைத்து நிற்கும் மக்கள், தங்கள் வாழ்க்கையையே சாபமாக நினைக்கும் மக்களுக்கு வாழ்வு என்பது கொடை என்னும் கிறித்தவ நெறியைச் சாத்தியப்படுத்துவது எப்படி?
- பெண்களை இச்சைப்பொருளாக பார்க்கும் சமூகத்தில் படைப்பில் அனைவரும் சமம் என்னும் சமத்துவக் கொள்கையையும் பெண் மாண்புமிக்கவள் என்னும் கிறித்தவ நெறியையும் பரவச் செய்து கடவுள் நினைத்த புதியதோர் உலகம் கட்டமைப்பது எவ்வாறு?



சாலமோன் சே.ச

# விடுதலை விடியலை நோக்கிய அருந்ததியர்

அமிழ்தல் அனுபவம் தந்த தாயில்பட்டி

அருந்ததியர்கள் தமிழ்நாட்டில் இன்று 65 லட்சத்திற்கும் மேல் வாழ்கின்றனர். சாதியின் பெயராலும், தீண்டாமையின் பெயராலும் பன்முனைத் தாக்குதல்களுக்கு ஆளாகி, கொத்துக்கொத்தாக நசுக்கப்பட்ட இவர்கள் மாதிகா, பகடை, மாதாரி, சக்கிலியர், செம்மான், படுவை என்று பல பெயர்களால் அழைக்கப்படுகின்றனர். இவர்கள் பேசும் மொழி தெலுங்கு மற்றும் கன்னடம்.

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், சாத்தூரிலிருந்து ஏறத்தாழ 15 கிமீ தொலைவில் அமைந்துள்ளது நான் தங்கி வாழ்ந்த “தாயில்பட்டி” என்னும் கிராமம். மேற்கே இருந்து வரும் காற்று மேல் சாதியினருக்கே என்று உணர்த்த ஊருக்கு மேற்கே ஆதிக்கச்சாதியினரும் கிழக்கே தலித் மக்களான பறையர் மற்றும் அருந்ததியர் மக்களும் வாழ்கின்றனர். சாதியப் பாகுபாடு இன்னும் ஒழியவில்லை என்ற எதார்த்தத்தை உணர்த்தும் வகையில் சாதிக்கொரு தண்ணீர் பிடிக்கும் இடம், தேநீர்க்கடை, சமுதாயக் கூடம் என்று உள்ளன.

உயிருக்கு உத்திரவாதம் இல்லாத இந்த வேலைக்கு இவர்கள் பெறும் ஊதியம் உண்மையிலேயே நியாமானதா என்பது ஒரு கேள்வியே! ஆதிக்கச் சாதியினர்களால் பிறப்பு வழித்தொழில் என்று மனித மானுடைத்தைச் சிதைக்கும் தெரு கூட்டுதல், செத்த ஆடு, மாடுகளை அகற்றுதல், இறப்புச் செய்தி அறிவித்தல், பிணக்குழி வெட்டுதல், பிணம் தூக்குதல் போன்ற தாழ்வான தொழில்களைச் செய்யக் கட்டாயப்படுத்தப்படுகின்றனர்.

உடனிருப்பில் உதித்த தெளிவுகள்

இயேசு சபை டாக்கா மைய மாலை நேரக்கல்வி மைய சாத்தூர் வட்டார ஒருங்கிணைப்பாளராக இருக்கும் திரு. தெய்வராஜ் அவர்கள் வீட்டில் தங்கினேன். இவருடைய கடின உழைப்பும் எளிமை வாழ்வும் என்னை மிகவும் பாதித்தன. இம்மக்களின் பொருளாதாரநிலை மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. ஆனாலும் எவ்வளவு துன்பங்கள், இடர்பாடுகள் வந்தாலும் அவற்றின் சூழ்நிலையைக் கையாளும் திறன் மக்களிடம் இயல்பாக உள்ளது. மக்களோடு நான் வெடி மருந்துத் தொழிற்சாலைக்கு வேலைக்குச் சென்றேன். இவர்களது வாழ்வின் எதார்த்தமோ உழைக்கவில்லையெனில் உணவு இல்லை என்பதே ஆகும்.

அருந்ததியர் சமுதாயத்திலே சில அரசியல் கட்சிகளும் தலைவர்களும் இருக்கின்றார்கள். மக்களைக் கட்டி எழுப்பவும், இளையோர்களை ஒருங்கிணைக்கவும், மக்களின் பிரச்சனைகளை அரசின் கவனத்திற்கு எடுத்துச் செல்லவும் ஒன்றிணைந்து செயல்படக்கூடிய தலைவர்கள் இல்லை. வீட்டிலும், வேலை செய்யும் இடங்களிலும் ஆண்களைவிடப் பெண்கள் பல மடங்கு வேலை செய்ய நிர்பந்திக்கப்படுகிறார்கள்.

புத்துயிர் கொடுக்கும் குல தெய்வப் பக்தி

இவர்களுடைய குல தெய்வங்கள் முத்துமாரி, முத்துவீரப்பன், வீரலட்சுமி, சப்பாணி, வடக்கத்தியம்மாள் ஆவர். “எங்களின் குலதெய்வங்கள் பெரும்பாலும் நட்புணர்வின் அடிப்படையில் தோன்றியவை” என்று நம்புகின்றனர். வழக்கமாக மாசி மாதம் வரும் அமாவாசை அன்று குலதெய்வத்தை வழிபடுகின்றனர். வீட்டில் திருமணம் போன்ற ஏதாவது நல்ல நிகழ்ச்சி நடைபெறுவதாக இருந்தால் குடும்பமாகச் சென்று குல தெய்வத்தை வழிபட்ட பின்புதான் அவற்றை ஆரம்பிக்கின்றனர். யாவே இறைவனைப்போல இவர்களுடைய குலதெய்வ வழிபாட்டு நம்பிக்கை, வாழ்வில் ஒவ்வொரு

கட்டத்திலும் எவ்வாறு தங்கள் குல தெய்வங்கள் உடன் பயணிக்கும் தெய்வங்களாகவும் விடுதலை அளிக்கும் தெய்வங்களாகவும் இருக்கின்றார்கள் என்று இவர்களின் நம்பிக்கை வாழ்வு நமக்கு பாடமாக உள்ளது.

ஈடுபாட்டில் பெற்ற தாக்கங்கள்

நான் ஒவ்வொரு நாளும் மாலை நேரக் கல்வி மையங்களுக்குச் சென்று மாணவ, மாணவியருக்கு ஊக்குவிக்கும் கதை, விளையாட்டு, பாடல்கள் சொல்லிக் கொடுத்தேன். 200 மாணவ மாணவியரைச் சந்தித்து அவர்கள் படைப்பாற்றலைக் கலை நிகழ்ச்சிகள் மூலம் வெளிப்படுத்த வாய்ப்புக் கொடுத்து, அவர்களை உடனிருந்து ஊக்குவித்தேன். மக்களோடு வேலைக்குச் சென்றது மக்களின் வாழ்க்கைப் போராட்டத்தை ஆழமாக உணர்வுத் தளத்திலே புரிந்து கொள்ள உதவி செய்தது.

பெரியவர்களை வீடுகளிலும், வேலை செய்த இடங்களிலும் சென்று சந்தித்தது அவர்களுடைய வாழ்க்கை அனுபங்களை நான் உணர்ந்து கொள்ள வாய்ப்பாக அமைந்தது. இளைஞர்களின் எதார்த்தமான பேச்சு, கரிசனையான அன்பு, சகோதரத்துவப் பாசம் ஆகியவை அவர்களின் உலகைப் புரிந்துகொள்ள உதவியாக இருந்தது. அவர்களின் அயராது உழைப்பு, நேர்மை, என்ன துன்பம் வந்தாலும் சமாளிக்கும் ஆற்றல், அசைக்க முடியாத தன்னம்பிக்கை ஆகியவை எனக்கு வலுவூட்டுவதாக இருந்தன.

நம்பிக்கையின் கீற்றுக்கள்:

நேர்மை, திறந்த மனம், கடின உழைப்பு, மனசாட்சி இவையே இவர்கள் வாழ்வின் விழுமியங்கள். “அடி பணிஞ்சு போனது அந்த காலம்....” என்று வேலை செய்யும் இடத்தில் நடந்த உரையாடலில் ஒரு அம்மா சொன்ன இந்த வார்த்தை விடுதலைப் பார்வையை விதைக்கும் வித்தாக அமைந்துள்ளது. பெரும்பாலும் படிக்கும் இளைஞர்கள் தங்களுடைய விடுமுறை நாட்களில் வேலைக்குச் செல்லும் நிகழ்வு அவர்களின் தன்னம்பிக்கை, உழைப்பின் மூலம் வாழ்கையில் உயர வேண்டும் என்னும் உயரிய சிந்தனை, அடிமை நிலையிலிருந்து விடுதலையை நோக்கிய பயணம் போன்றவை அவர்களின் வளர்ச்சியின் வித்தாக உள்ளன.

“வயித்துக்கு நல்லா சாப்பிடுங்க தம்பி, கேட்டு வாங்கி நிறையச் சாப்பிடுங்க தம்பி, உங்க வீடு மாதிரி நினைச்சுகிட்டு நல்ல சாப்பிடுங்க, எங்க ஊருக்கு வந்திட்டு யாரும் பட்டினியா போகக் கூடாது”, என்ற குரல் விருந்தோம்பலின் விடி வெள்ளிகள் இவர்கள் என உணர்த்தியது. என்னுடைய இந்த உடனிருப்பு பல தளங்களில் என்னைச் செதுக்கி மக்களை மையப்படுத்திய மக்களின் குரலே கடவுளின் குரல் என்னும் இறை ஒளியில் என்னை வாழ அழைப்பு விடுத்திருக்கிறது. தொடரும்.

அனுபவம் எழுப்பிய இறையியலாக்கக் கேள்விகள்.

- பல வழிகளில் பல பரிணாமங்களில் ஒடுக்குமுறைகளைச் சந்திக்கும் அருந்ததிய மக்களின் வாழ்வில் எந்த வகையில் நம்பிக்கையின் கீற்றுகளை அவர்களின் விடுதலையாக விடியச் செய்ய முடியும்?

- மானிட மாண்பு பறிக்கப்பட்டு நம்பிக்கையையும் உரிமையையும் இழந்து தவிக்கும் அருந்ததிய மக்களின் வாழ்வை இயேசுவின் இறையாட்சிப் பாணியில் மேன்மையடையச் செய்வதற்கான சாத்தியக் கூறுகள் யாவை?





ஜெயசீலன் சே.ச

# எப்புடி தம்பி இப்புடி?

ஊர் மற்றும் கல்வி நிலை

ஈரோடு மாவட்டத்தில் உள்ள கடம்பூருக்கு அருகிலுள்ள வைத்தியநாதபுரம் என்ற இந்து ஊராளி மக்கள் மட்டுமே வசிக்கும் ஒரு மலை கிராமத்திற்கு நான் எனது அமிழ்தல் அனுபவத்திற்காக சென்றேன். 25 குடும்பங்கள் இருக்கும் அந்தக் கிராமத்தில், மொத்தமே 12 குழந்தைகள்தான். இப்பொழுதுதான் முதல் தலைமுறையாக நான்கு மாணவிகள் மற்றும் ஒரு மாணவர் பத்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆண்களில் பலருக்கு கையெழுத்திடத் தெரிந்திருந்தாலும், பெண்களில் ஒருவருக்கு மட்டுமே கையெழுத்திடத் தெரிந்திருந்தது. இதுதான் ஊரின் கல்வியறிவின் நிலை.

சமூக-பொருளாதார எதார்த்தங்கள்

ஊரின் சமூக நிலை எனப் பார்க்கும்பொழுது, ஊர் மக்கள் அனைவருமே ஊராளிகள் என்றாலும், ஊருக்கென இருக்கும் ஓர் இந்துக் கோவிலும் சிறு பெட்டிக்கடையும் வேறோர் ஊரில் வசிக்கும் லிங்காயத்து இனத்தைச் சேர்ந்த ஒருவரால் சொந்தமாக நிர்வாகிக்கப்படுகின்றன. இவ்விரு இடங்களிலும் திணிக்கப்பட்ட தீண்டாமை, அவருக்கிருக்கும் அதிகாரத் தொனியை ஒருவர் தவற முடியாது.

ஊரில் இருக்கும் அனைவருக்குமே அரசாங்கத்தின் 'இலவச வீடு' திட்டத்தின் மூலம் தங்குவதற்கு வீடுகள் இருந்தாலும், பெரும்பான்மையானோருக்கு விவசாயம் அல்லது பயிர் செய்ய நிலமில்லை. பணப்பயிராக சோளமும் உணவிற்காக கேழ்வரகும் பயிரிடப்படுகின்றன. ஏறத்தாழ ஐந்து அல்லது ஆறு மாதங்களுக்குப் பிறகுதான், உழைத்ததற்கான கூலி கிடைக்கும். கேழ்வரகினை எக்காரணம் கொண்டும் மக்கள் விற்பதில்லை மாறாக, அதுவே அவர்களுக்கு அந்த ஆண்டு முழுதும் உணவு. எப்பொழுதாவது, அரிசியினை உணவாகப் பயன்படுத்துகின்றார்கள். விவசாயம் இல்லா நாட்களில் தங்கள் ஆடு மாடுகளை மேய்க்க அருகிலிருக்கும் காடுகளுக்குச் செல்கின்றார்கள்.

இயற்கையோடு இணைந்த வாழ்வு

அவர்களுக்கு ஆடு மாடுகள் இருந்தாலும், அவர்கள் எப்பொழுதும் அசைவம் உண்பதில்லை. எந்தளவுக்கெனில், அவர்கள் தாங்களே வளர்க்கும் ஆட்டு அல்லது மாட்டுப் பாலினைக் கூடப் பயன்படுத்துவதில்லை. தங்கள் சொந்தங்களாகவே இவ்வுயிரினங்களைப் பார்க்கின்றார்கள். இதன் பொருட்டோ என்னவோ, அவர்கள் என்றுமே மருத்துவமனைக்குச் சென்றதில்லை, செல்வதில்லை. ஆம்! இயற்கையோடு இணைந்த வாழ்வு, நலமான வாழ்வு.

எனது ஈடுபாடு

நான் பகலில் மக்களோடு விவசாயம் செய்யவோ அல்லது ஆடு, மாடுகள் மேய்க்கவோ செல்வேன். மாலை வேளைகளில் பள்ளிக் குழந்தைகளோடு சிறிது நேரம் விளையாடிய பின்பு அவர்களுக்கு மாலை நேர வகுப்புகள் எடுப்பேன். பின்னர், இரவு நேரங்களில் வீடுகளைச் சந்தித்து அவர்களது வாழ்க்கை அனுபவங்களுக்குச் செவிமடுப்பேன். கையெழுத்திடத் தெரியாதவர்கள் அனைவருக்கும் கையெழுத்திடக் கற்றுக்கொடுத்தேன்.

கற்பும் சமத்துவமும்

ஆண்-பெண் சமத்துவம் பற்றிய ஊராளி மக்களின் மனப்பான்மை என்னை மிகவும் வியக்க வைத்தது. ஆண்கள் எவரும் மேல் சட்டை அணியாமல் இருப்பதில்லை. காரணம், 'ஆண்களுக்கும் கற்பு உண்டு' என்ற அவர்கள் எண்ணமே! தங்கள் ஊர் அல்லது சமூகம் சம்பந்தப்பட்ட அனைத்து முடிவுகளிலும் பெண்களுக்கும் அதிக முக்கியத்துவமும் அதிகாரமும் உண்டு. குறிப்பாக, தங்கள் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுப்பதிலும்

தொடர்ந்து திருமண வாழ்விலே ஈடுபடுவதிலும் பெண்களுக்கு முழு அதிகாரம் உண்டு. அவர்களது உரிமைகள் பாதுகாக்கப்படுவதோடு அவர்களது சுதந்திரமும் எண்ணங்களும் முடிவுகளும் மதிக்கப்படுகின்றன.

கடவுளின் சாயலில் மனிதர்

'நீங்கள் சாதரணமாக அசைவம் உண்பதில்லை?' என்று நான் கேட்டபொழுது ஒருவர் சொன்னார், 'அசைவம் என்பது சாமிக்குப் படைக்கப்பட வேண்டிய ஒன்று' 'ஆயினும், இறுதியில் அதை நீங்கள்தானே உண்பீர்கள்' என்று நான் கூறியவுடன் அவர் பதிலளித்தார், 'ஆம், நாம்தான் உண்ண வேண்டும். நாம் தானே சாமி. வேறு யார் வந்து உண்பார்கள்?' ஒவ்வொரு மனிதருக்குள்ளும் வாழ்ந்திடும் இறைவனை நாம் பார்க்க வேண்டும். ஏனெனில், கடவுள் நம் அனைவரையுமே தமது உருவிலும் சாயலிலும் படைத்திருக்கின்றார்' என்று கூறக்கேட்டு அவர்களின் இறைப்பார்வை கண்டு வியந்து போனேன்.

பட்டாவா? ஃபாதரா?

நான் தங்கியிருந்த வைத்தியநாதபுரத்திலும் அதைச் சுற்றியுள்ள ஊராளி மக்கள் வாழும் இன்னும் ஐந்து கிராமங்களிலும் அருட்தந்தை பாக்கியராசு சே.ச அவர்களின் வழிகாட்டுதலின்படி நான் ஓர் ஆய்வினை மேற்கொண்டேன். இதைப் பொறுக்காத மற்றச் சமூகத்தைச் சேர்ந்த சிலர், நான் அப்பகுதிகளில் 'வேதம் போதித்தேன்' என்று காவல் துறையில் புகார் அளித்தனர். அப்புகாரின் பேரில் நான் மறுநாளே விசாரிக்கப்பட்டு அவ்விடத்தைக் காலி செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டு எச்சரிக்கப்பட்டேன். இதில் சுவாரசியம் என்னவென்றால், ஏற்கனவே வேறு ஊரைச் சார்ந்த இருவர் தங்கள் கைகளில் அரிவாள்களோடு இந்த ஊருக்குள் வந்து சலம்பலில் ஈடுபட்டபோது, ஊர் மக்கள் புகார் அளித்தும் எந்தவித நடவடிக்கையும் (இந்நாள் வரையிலும்) எடுக்காத நம் காவல்துறையினர், என் சம்பந்தப்பட்ட புகார் காரணமாக மறுநாளே நடவடிக்கை எடுத்தனர். காவி இவர்கள் மத்தியிலும் கால் வைத்துவிட்டதோ?

வழியும் வாழ்வும்:

நான் ஊரிலிருந்து புறப்படும்போது ஒரு தாய் கூறினார்: "எங்களை முன்னேறவும் விடமாட்டார்கள், முன்னேற்றுபவர்களையும் விடமாட்டார்கள். காரணம், நாங்கள் எப்பொழும் இவர்கள் சொல்வதை மட்டுமே கேட்டுக்கொண்டு அவர்களுக்கு அடிமையாகவே பயத்தோடு வாழவேண்டும்." இந்த உணர்வே இவர்கள் விடுதலை வாழ்விற்கு அடிகோலும். ஆம்! வழியை உண்டாக்கத் தேவையில்லை, வழியைக் காண்பித்தால் மட்டுமே போதும். அவர்கள் நடந்து விடுவார்கள்.

எப்புடி தம்பி இப்புடி?

இப்படியான எனது அனுபவங்களை என் தந்தையிடம் பகிர்ந்து கொண்ட போது அவர் என்னிடம் ஒரு கேள்வி கேட்டார். "இவ்வளவு அனுபவங்களுக்குப் பிறகும் எப்புடி தம்பி சாமியாருக இப்புடி இருக்காங்க?"

இறையியலாக்கக் கேள்விகள்

1. தங்கள் வாழ்விற்குத் தேவையான அடிப்படை உரிமைகள் கூடக் கிடைக்கப் பெறாத மக்கள் மத்தியில் அனைவருக்கும் உரிமை வாழ்வு என்னும் சமத்துவ நெறியை வளர்த்தெடுப்பதற்கான சாத்தியக் கூறுகள் யாவை?

2. மனித சாயலில் படைக்கப்பட்ட நாம் மற்றவரை துன்புறுத்தக்கூடாது என்னும் சிந்தனை கொண்ட மக்கள் மத்தியில் நிலவிவரும் மனித மாண்பு விழுமியங்களை விசாலப்படுத்துவது எப்படி?

4. அறநெறியும் கற்பொழுக்க வாழ்வும் அனைவருக்கும் பொதுவானது என நினைக்கும் மக்கள் அடிமைத்தனமும் அடக்குமுறையும் அநீதமானது என்பதை உணர்ந்து தான்மை வாழ்வை இறையொளியில் மீட்டெடுப்பதற்கான வழிமுறைகள் யாவை?

- ஜெயசீலன், சே.ச

# ஒருங்கிணைவுத்தாள் தலைப்புகள்

## 2019-2020

## பருவம் I

அனாதையாக்கப்படும் குழந்தைகளும், உதறித்தள்ளப்படும் மனித மாண்பும்

- மாற்றுத்திறனாளி சிறப்புக் குழந்தைகள் சந்திக்கும் சவால்களும் நம்பிக்கை நகர்வுகளும்
- ஏழ்மையும் மனித மாண்புக்கான விடுதலைத் தேடல்களும்
- குழந்தைத் தொழிலாளர்களும் விடுதலைக்கானத் தேடல்களும்
- தெருவோரச் சிறார்களின் அபாயகரமான வாழ்வும் எதிர்கால மீட்டுருவாக்கமும்
- போதிமரங்களாகும் போராட்டக்களங்கள்.
- (விடுதலையைத் தேடும் மக்கள் போராட்டங்கள் - ஓர் இறையியலாக்கம்)
- அருந்ததியரின் பண்பாடும் மனித மாண்புக்கானத் தேடலும்
- ஏமாற்றப்படும் புலம்பெயர்ந்தோரின் வாழ்வும் நம்பிக்கையூட்டும் நகர்வுகளும்.
- மறுக்கப்படும் ஊராளி மக்களின் உரிமைகளும், மீட்டெடுப்பதற்கான விடுதலை முன்னெடுப்புகளும்.
- கைவிடப்பட்டக் கைம்பெண்களும் கைகொடுக்கும் உழைப்பும்
- இருளர் வாழ்வில் ஒளியாகும் கல்வி
- புதிரை வண்ணாரின் வேலையில்லாத் திண்டாட்டமும் சந்திக்கும் சவால்களும்
- தூய்மைத் தீட்டு : சமூக ஒதுக்குதலுக்கு உள்ளாகும் தலித் மக்கள்
- சாதியப் பூசல்களுக்கு ஆளாக்கப்படும் அருந்ததிய மக்களின் ஒருங்கிணைந்த விடுதலை

## பருவம் II

-
- மனித மாண்பைச் சீர்குலைக்கும் மொட்டைக் கடிதங்களும் புத்துலகம் படைப்பதற்கான இறையியல் தேடல்களும்
- ஊடகத் தீவிரவாதம்: நவீன ஊடகங்களின் தாக்கமும் மனித மாண்பை மீட்டெடுப்பதற்கான தேடலும்
- உற்பத்தித் தொழிற்சாலையில் ஒப்பந்தத் தொழிலாளர்களின் நிலை
- நகர்ப்புற ஆதரவற்ற முதியோர்களின் வாழ்வும், விடியலுக்கான தேடல்களும்
- சமயச் சார்பற்ற இந்தியக் குடியரசு நாட்டில் குடியுரிமைச் சட்டங்களும் சிறுபான்மையினரும்
- நீதிச் சமுதாயத்திற்கு வித்தாகும் கூட்டுறவு
- ஆணவக் கொலையும் சிலுவையின் வழி விடுதலையும்
- இந்தியப் பாசிசம் விடுக்கும் சவால்களும், திருவிவிலியம் காட்டும் விடுதலைக் கூறுகளும்
- ஒடுக்கப்பட்டோருடைய எதிர்ப்புத் தன்மையின் பரிமாணங்களும் விடுதலைக்கான நம்பிக்கைக் கூறுகளும்
- ஒற்றைச் சமுதாயத்தை நோக்கிய இந்துத்துவத் தீவிரவாதமும் பண்மைத்துவம் போற்றும் கூட்டாட்சிச் சமுதாயத்திற்கானத் தொடர் தேடல்களும்
- காசு வாங்கும் கொள்ளை நோய்களும் புதிய வாழ்வுக்கான நம்பிக்கைத் தேடல்களும்
- மீம்ஸ்: இளையோரின் சமூக மாற்றத்திற்கான புதிய விடுதலை வித்து
- நாட்டார் தெய்வங்களின் வெளிப்பாடும் விடுதலைக்கான கூறுகளும்
- விடுதலைக் குரலாக ஒலிக்கும் கானாப்பாடல்கள்
- பெண்களைச் சிதைக்கும் பண்பாட்டுக் கூறுகளும் மனித மாண்புக்கான தேடல்களும்

# அனுபவங்கள்



## கிராமப்புற அமிழ்தல் அனுபவத் தளத்திலிருந்து

இறையாட்சிப் பாதையில் பயணம் செய்திட நம்மை அழைக்கின்றது இறையியலாக்கப் பணி. மனிதம் சிதைக்கப்பட்டு வாழ்வு நொறுக்கப்பட்ட சமுதாயத்திலே மலர்ந்து கொண்டிருக்கும் இறையாட்சியின் சாயல்களை, சவால்களை, தூண்டுதல்களை, நம்பிக்கைகளை இனம் கண்டு கொண்டு இறையாட்சித் தொடர் பயணத்திலே நம்பிக்கை முயற்சிகளோடும் தேடல்களோடும் உடன் பயணிப்பதே இறையியலாக்கப் பயிற்சியாகும்.

ஆறியாத்தாலும் அக்கிரமத்தாலும் அதர்மத்தாலும் நொறுக்கப்பட்டுள்ள மக்களின் அனுபவ மண்ணில் முளைத்து வளர்வது தான் இறையியலாக்கம். வேதனை நிறைந்த விழிகளில் விடியல் கனவுகளைச் சுமந்து கொண்டிருக்கும் மக்களின் அனுபவங்களே இறையிலாக்கப் பயிற்சியின் தொடக்க முனையாகும். தொடர்ந்து வரும் சுனையாகும். எனவே அருள்கடல் இறையியலாக்கப் பயிற்சியின் தொடக்கமாகவும் தொடர்ந்து வரும் இன்றியமையாக் கூறாகவும் இருப்பது நொறுக்கப்பட்ட மக்களின் அனுபவம்.

இறையியலாக்கப் பயிற்சியில் நுழைந்திட்ட எம் முதலாமாண்டு மாணவர் ஒன்பது பேர் அடித்தட்டு மக்கள் அனுபவத்தில் பங்கு பெற்றிட மூன்று வாரங்களாக ஒடுக்கப்பட்ட கிராமப்புற ஏழை மக்களோடு வாழ்ந்தனர். அவர்கள் பெற்ற அனுபவங்களை, எழுச்சிகளை, கண்ட கேள்விகளை, தேடிய அர்த்தங்களை, இணைந்திட்ட போராட்டங்களை, அனுபவித்த மாற்றங்களை நம்மோடு பகிர்ந்து கொள்ள முன் வந்துள்ளனர். இவை எல்லாம் இவர்களின் இறையியலாக்கத்தின் அரிச்சுவடிகளாக மாறுகின்றன. இவர்களோடு பயணித்துப் பாருங்களேன்.

- ராஜ் இருதயா, சே.ச.

## அமிழ்தல் அனுபவம்

### மாணவர் பார்வையில்

அருள் கடல் என்பது தமிழக இயேசு சபையின் வட்டார இறையியல் மையமாகும். இது "தமிழில் அல்ல மாறாக தமிழ் இறையியல்" என்னும் தத்துவத்தின் அடிப்படையில் இம்மண்ணுக்கும் மக்களுக்குமான இயேசுவை அடையாளப்படுத்தி, அவர் வழியில் விடுதலை இறையியலை கட்டமைக்கிறது. இந்த விடுதலை இறையியலின் அடிநாதமாக இருப்பது "அமிழ்தல் அனுபவமாகும்". ஏனெனில் சமூகத்தால் வஞ்சிக்கப்பட்டு சாதியத்தால் புறக்கணிக்கப்பட்டு மாண்பிழந்து வாழ வழியின்றித் தவிக்கும் அடித்தட்டு மக்களோடு இரண்டறக் கலந்து உடன் பயணிக்கும் இயேசு சபையாளர்களை உருவாக்குவதும், இம்மக்களுக்கான மாண்பையும் உரிமையையும் மீட்டெடுப்பதே இவ்விடுதலை இறையியலின் நோக்கமாக இருக்கிறது.



அமிழ்தல் அனுபவம் என்பது இறையியல் மாணவர்கள் ஒடுக்கப்பட்ட மக்களோடு தங்களை இரண்டறக் கரைத்துக் கொள்ளும்

ஒரு கற்றல் அனுபவமாகும். ஒவ்வோர் ஆண்டும் இம்மாணவர்கள் தலித், ஓரங்கட்டப்பட்ட குழுக்கள் மற்றும் பழங்குடியினர் வாழும் ஊர்களில்



ஏறக்குறைய 20 நாட்கள் தனி நபராகத் தங்கி அவர்களது அன்றாட வாழ்வில் உடன் பயணித்து, அவர்கள் எதிர்கொள்ளும் சமூகப் பொருளாதாரப் போராட்டாங்களை அனுபவப் பூர்வமாக கண்டு கொள்கிறார்கள். மேலும், அவ்வனுபவத்தின் அடிப்படையில் எழும் விடுதலைக்கான கேள்விகளுக்கு இறையொளியில் பதிலிருப்பையும் தேடுகிறார்கள்.

ஒடுக்கப்பட்ட மக்களின் மாண்பையும் உரிமையையும் மீட்டெடுக்கும் விடுதலை, வெறும் ஏட்டறிவினால் மட்டும் சாத்தியமாவதில்லை. மாறாக வீதிக்கு வந்து எதார்த்தத்தில் விழுந்தெழும் அனுபவமே விடுதலைக்கான விதையாகிறது. அதன் அடிப்படையில் இந்த அனுபவம் மாணவர்கள் தங்களின் முற்சார்பு சிந்தனைகளிலிருந்தும் சாதி சமய அடையாளங்களிலிருந்தும் விடுதலை பெற வழி வகுக்கிறது. மேலும் ஒடுக்கப்பட்ட இம்மக்களின் உரிமையையும் மாண்பையும் மீட்டெடுப்பதற்கான அவசித்தையும் தேவையையும் புரிந்து செயல்படத் தூண்டும் ஓர் ஒப்பற்ற அனுபவமாக இருக்கிறது

- அலெக்ஸ். சே.ச .

## மண்ணையும் மக்களையும் மீட்டெடுக்கும் "முகில்" அனுபவம

மண்ணுக்கும் மக்களுக்குமான ஆன்மீகத்தில் ஆழம் பெறுவதே வட்டார இறையியலின் சிறப்பு அம்சமாகவும் முகில் அனுபவத்தின் நோக்கமாகவும் இருக்கிறது. மண்ணுக்கும் மக்களுக்குமான ஆன்மீகம் என்பது மக்களின் பண்பாட்டு வாழ்வியலோடு பின்னிப் பிணைந்ததாகும். இந்நிலையில் பண்பாட்டுச் சிதைவு ஒரு கருச் சிதைவே. ஏனெனில் இது ஒரு இனத்தின் அடையாளத்தை அழிக்கிறது. அவ்வகையில் அழிந்து வரும் மண்ணின் வளத்தையும் மக்களின் உடல் நலத்தையும் மீட்டெடுக்கும் வேட்கையோடு மிகவும் சிறப்பாகச் செயல்பட்டும் ஒரு சித்த மருத்துவ மையமே முகிலாகும். இது மதுரைக்கருகே உள்ள திருமங்கலம் பகுதியில் அமைந்திருக்கிறது.

தமிழக இயேசு சபை இறையியல் மாணவர்கள் ஒரு வாரம் இம்மையத்தில் தங்கி, தமிழ் இலக்கியங்களிலும் தமிழர்களின் வாழ்வியல் வாயிலாக வெளிப்படும் உயரியச் சிந்தனைகளைத் தன்வயப்படுத்துவதற்கு வாய்ப்பாக இந்த முகில் அனுபவம் அமைகிறது. குறிப்பாக விவிலிய மதிப்பீடுகளின்படி தமிழ் இறைவாக்கினர்களாக அறியப்படும் சித்தர்களின் பாடல்களில் எழும்



விடுதலைக் கீற்றுகளை உள்வாங்கி சமத்துவச் சமுதாயத்தைக் கட்டமைப்பதற்கான சாத்தியக் கூறுகளில் ஆழம் காண இந்த அனுபவம் உதவியாக இருக்கிறது.

தன்மை திரிந்த முறை அறிந்து உணவும்
மருந்தாக்கியே
பரிபூரண நலம் காணும் தமிழ்ச் சித்த ஞானம்
ஊற்றியே
நீர்த்துப் போன விளைநிலத்தையும் சத்தூட்டிச்
சருகாலே
இயற் - கையால் வளநலமோதும் அதிசய
முகிலே!

- அலெக்ஸ். சே.ச

## மரியன்னை இறையியலைக் கூர்மைப்படுத்தும் ஊஞ்சல் மாதா திருத்தலம்



மரியியல் பாடத்தின் ஒரு பகுதியாக, மரியாவின் பக்தி வணக்கத்தைப் பற்றதி தெரிந்து கொள்ள, தேன்பாக்கம் பகுதியில் அமைந்திருக்கும் ஊஞ்சல் மாதா மையத்திற்கு பேராசிரியர் பணி.பாஸ்கர் அந்தோனி சே.ச. அவர்களின் வழிநடத்துதலில் சென்றோம் . சுவாமி மு.வல்தாரிசு அவர்களுக்குக் கனவில் மரியா குழந்தை இயேசுவோடு தோன்றியதன் வெளிப்பாடாக உருவானதுதான் ஊஞ்சல் மாதா பக்தி.

பஞ்ச பூதங்களில் ஒன்றான காற்றில் அசையும் ஊஞ்சல், அதில் குழந்தை இயேசுவோடு அமா்ந்திருக்கும் மாதா கடவுளின் இயக்கவியலின் அல்லது இயங்கியலின் குறியீடாக அமைந்துள்ளது. நம்பிக்கையோடும், மனதில் நினைத்த வேண்டுதலோடும் ஊஞ்சல் மாதாவின் அருகில் உறங்கும் போது கடவுள் கனவில் பிரச்சனைகளுக்கான தீர்வை வெளிப்படுத்துவார் என அறிந்து கொண்டோம். திருமணச் சிக்கல், குடும்பங்களில் பிரச்சனைகள், பொருளாதார பின்னடைவு, தோல்விகளில் துவண்டு போதல்,



கொடிய நோய்களுக்கு குணம் பெறுதல் என பல அற்புத நிகழ்வுகள் இங்கே நடந்திருக்கின்றன எனவும் அறிந்து மாதாவின் பரிந்து பேசுதல் வல்லமையையும், மக்களின் பக்தியைப் பற்றியும் தெரிந்து கொண்டோம். அசைவாடும் ஊஞ்சல் கடவுளின் ஆற்றலைக் காட்டுகிறது எனவும் கற்றுக்கொண்டோம்.

கூத்தவாக்கத்தினைச் சோ்ந்த ராணி, ஆசிரியை சகுந்தலா போன்றோரின் நம்பிக்கைப் பகிர்வுகள் வழியாக 'கடவுளின் அருளை உணரும் ஒவ்வொரு தருணமும் புதுமை, ஊஞ்சலில் அமா்ந்திருக்கும் மாதாவினைத் தொட்டு அசைத்து பாா்க்கும் போது மனதில் மாற்றம் வரும்' என அறிந்து கொண்டோம். ஊஞ்சல் மாதா மையத்தில் அருட்பணி புரிவோருக்கும் எமது நன்றிகள் பல. பணி.பிலிப்பு அவா்கள் எங்களை பரமன்கேணியில் வரவேற்று தனது உபசரிப்பாலும் அன்பான தோழமைப் பகிர்வாலும் கவனித்துக் கொண்டாா்.

- செயராசு சே.ச.

## வார்த்தை விளையாட்டு

அன்பு தோழமைகளே, வார்த்தைகளைக் கண்டுபிடியுங்கள்

ம் அ சி த் வ தி யா ய
க் போ கு ரு கு ட் ம் டா
ம் க க் னி தா ள ய ஞ் ய சி
ர் ந் த நி ம் ப் ப
வு ஆ ம் ய் ட கூ
ர் த த் ல் டு தொ போ
த் த து டு ப து ரி
ய கா ரி சி ரி த
ட் ச டை அ ச் ரை
கு றா ப றை ற் க்
வா ம் சி தே ய த
ய ம் கி க் வ மு து
த் தா ந் த சி ம்
க ள் து கு ணு க்

**விடை:**

அத்தியாவசியம்
குருட்டாம்போக்கு
தானியக்களஞ்சியம்
நிர்பந்தம்
ஆய்வுகூடம்
போர் தொடுத்தல்
காரியதரிசி
அரைச்சட்டை
பற்றாக்குறை
தேசியவாதம்
சித்தாந்தம்
துணுக்குகள்

லாரன்ஸ் சே.ச

# நிகழ்வுகள்

## அருள்கடல் கல்வியாண்டுத் தொடக்க விழா தொடக்கமே அமர்க்களம் தான்



அருள் கடல் குழுமத் திசைவழியாக்கமும், கல்வியாண்டுத் தொடக்க விழாவும் ஜுன் 11 மற்றும் 12ஆம் தேதிகளில் கொண்டாடப்பட்டன. இஞ்ஞாசியாரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்துத் தொடங்கிய நிகழ்வுகள் திருப்பலியில் ஆழம் பெற்றன. ஒன்பது முதலாண்டு மாணவர்களையும், ஆறு இரண்டாமாண்டு மாணவர்களையும், ஐந்து அருள்பணியாளர்களையும் வரவேற்று விழா தொடங்கியது. திசைவழியாக்கத்தில் அருள்கடல் வாழ்வும் பயிற்சியின் நோக்கும் போக்கும் அறிமுகப்படுத்தப்பட்டன.

சத்திய நிலையம் குழும அதிபர் பணி. போனிபஸ்



பன்னா சே.ச. இயேசு சபைப் பயிற்சியின் தனித்துவத்தைப் பற்றிப் பேசி இறையியல் கல்வியின் முக்கியத்துவத்தைப் பற்றி எடுத்துரைத்தார். வழக்கறிஞர் திருமதி. அக்சீலியா பீட்டர் அவர்கள் சூழல் இறையியலின் முக்கியத்துவத்தைப் பற்றிப் பேசி மாற்றுச் சிந்தனைக்கு விதையூன்றினார். சென்னைப் பல்கலைக்கழகத்தின் கிறித்தவத் துறையின் முன்னாள் தலைவர் பணி. பெலிக்ஸ் வில்பிரட், மக்களிடையே அமைதியும், ஒத்திசைவும் ஏற்படுத்தும் பொது வெளி இறையியலின் ஆய்வுத் தாளைப் பகிர்ந்து கொண்டார். அவருடைய விசாலமான பார்வையும், பரந்த அறிவும் எங்களுடைய இறையியல் கல்வியாண்டின் தொடக்கத்தைப் பொருளுள்ள வகையில் அமைத்துக்கொள்ள உதவியது.

வளர்ந்து வரும் இந்திய இறையியலை இனங்காட்டும் வகையில் பணி. ராஜ் இருதயா அவர்களின் தொகுப்பில் உருவான 'Theologizing in India: Voices of Indian Theologians' என்ற நூலும், பணி. அலங்காரம் அவர்கள் எழுதிய 'Empowering the Dailts and Poor in the Power of the Spirit' என்ற நூலும் வெளியிடப்பட்டன. பணி. ஆரோக்கியதாஸ் அவர்கள் உருவாக்கிய 'அம்மா மரியே' என்ற பாடல் குறுந்தகடும் அன்று வெளியிடப்பட்டது.

\- பால்ராஜ் சே.ச

## தோழமை இறையியலாக்கச் சிந்தனைக் களம்

## CHITS (Chennai Inter-theologates Sharing)

இக்கல்வி ஆண்டுக்கான சென்னை கிறித்தவ இறையியல் மையங்களின் கருத்தரங்கமானது 'Misguided Nationalism: A Christian Response' என்கிற மையப்பொருளின் அடிப்படையில் கவரப்பேட்டையில் உள்ள சலேசிய இறையியல் மையத்தில் நவம்பர் 14 ஆம் தேதி நடைபெற்றது. இன்றைய காலச் சூழலில் மனித மாண்பைக் குலைக்கும் மனித உரிமையைச் சிதைக்கும் ஒற்றைச் சிந்தனைப் பண்பாட்டிற்கு எதிராக மனித மாண்பை வளப்படுத்த எவ்வகையில் நாம் செயல்படலாம் என்பதன் அடிப்படையில் பல்வேறு கட்டுரைகள் பகிர்ந்து கொள்ளப்பட்டன. அக்கட்டுரைகளின் அடிப்படையில் பல்வேறு விவாதங்களும் நடைபெற்றன. இக்கருத்தரங்கில் நம் இளவல்கள் அருள் மற்றும் ஜோசப் 'Misguided Nationalism and Economic Development' என்கிற மையப் பொருளில் தங்களுடைய ஆய்வுக் கட்டுரையைப் பகிர்ந்து கொண்டனர்.



அருள் சாரல்




இக்கட்டுரையானது பலராலும் வெகுவாகப் பாராட்டப்பட்டது. இக்கட்டுரைத் தயாரிப்பிற்கு உதவியாக, இத்தலைப்பின் கீழ் ஒரு நாள் குழும இறையியலாக்கம் நடத்தப்பட்டு கட்டுரையானது செறிவூட்டப்பட்டது. இன்றைய காலச் சூழலுக்கேற்ப இறையியல் கருத்துக்களைப் பொருள்கோள் செய்து செயல்பாட்டிற்கு அழைத்துச் செல்லும் ஓர் அறைகூவலாக இக்கருத்தரங்கம் அமைந்தது.

- மனோஜ் சே.ச

## “இளையோரும் அரசியல் ஈடுபாடும்’

### இயேசு சபை மாமேதை லோனர்கன் கருத்தரங்கு



ஒவ்வொரு ஆண்டும் மாமேதை லோனர்கன் கருத்தரங்கானது இளவல்கள் அருட்பணிக்காகச் செல்லக்கூடிய பங்குத் தளங்களில் வாழும் இளையோருக்கு நடத்தப்பட்டு வருகிறது. மாநில விருப்பத் தேர்வுகளின் அடிப்படையிலும், இளையோரை வலுவூட்டும் நோக்கத்தோடும் இவ்வாண்டும் இந்த நினைவுக் கருத்தரங்கமானது 'இளையோரும் அரசியல் ஈடுபாடும்' என்ற தலைப்பில் மார்ச் மாதம் 8-ஆம் தேதி, பாதை மையத்தில் சிறப்பாக நடத்தப்பட்டது.

ஏறக்குறைய 120 இளையோர்கள் கலந்துகொண்டு விழிப்புணர்வும், புத்துணர்வும் பெற்றனர். இந்தக் கருத்தரங்கில், அருட்பணி. எல். யேசுமரியான் சே.ச. அவர்கள் இளையோருக்குச் சிறப்புரையாற்றினார். அரசியல் என்பது நமது குடும்பத்திலே தொடங்குகிறது. நமது உரிமையைக் கேட்கும் போதெல்லாம் நாம் அரசியலில் ஈடுபடுகிறோம் என்று இளையோருக்குச் சிந்தனையூட்டினார். கத்தோலிக்கக் கிறித்தவர்களாகிய அனைவரும் அரசியலில் முழுமையாக ஈடுபட வேண்டும் என்ற உற்சாகத்தையும் தூண்டிவிட்டார். அதனைத் தொடர்ந்து இளவல்கள் மூன்று குழுக்களாகப் பிரிந்து மூன்று கருத்துரைகளை 'இந்திய அரசியலமைப்புச் சாசனம் அறிமுகம்' 'இன்றைய அரசியல் சூழல் கிறித்தவப் பார்வையில்' மற்றும் 'இளையோரின் பதிலிறுப்பு' என்ற தலைப்புகளில் தங்களது செறிவான கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார்கள். அமர்வுகளின் இறுதியில், பங்குத் தளங்களில் நடைமுறைப்படுத்தக்கூடிய மூன்று செயல் திட்டங்களை இளையோர்களே வகுக்க உதவி செய்யப்பட்டது. கருத்தரங்கானது அருட்பணி. ராஜ் இருதயா சே.ச தலைமையேற்று நிகழ்த்திய திருவிருந்தோடு நிறைவு பெற்றது. இந்நிகழ்வு சிறப்பாக நடைபெற பாதை மைய சேசு சபைத் தோழர்கள், உடன் உழைப்பாளர்கள், பங்கு தந்தையர்கள் மற்றும் அருள் கடல் குழுமத்தார்



அனைவரும் முழு ஆதரவு தந்து, இக்கருத்தரங்கானது இளையோருக்குப் பயனுள்ள வித்தில் அமைந்திட உதவினார்கள்.

ஆண்டோ சே.ச

## விடுகதை

நான்கெழுத்துச் சொல்லாம்.<br>
முதலெழுத்துப் போய்விட்டால் பெண்ணாகும்.<br>
இரண்டாம் எழுத்துத் தனிநின்றால் ஒரு திங்கள்.<br>
அவ்வேழுத்தோடி விட்டால் கடுங்காற்றாம்.<br>
முதலும் ஈறும் ஒன்றிணைந்தால் மாட்டுணவாம்.<br>
முதலிரண்டும் ஒன்றானால் மண்ணில் மூடல்.

பதில்: புதையல்

- ஜெயசீலன் சே.ச



அருள் சாரல்

# இந்திய வட்டார இறையியல் மையங்களின் ஒன்றிணைந்த கருத்தரங்கு



இயேசு சபை வட்டார இறை ஞான ஜோதி ( கர்நாடகம் ) மற்றும் அருள்கடல் (சென்னை) ; 'Emerging Nationalism in In Democracy' என்னும் தலைப் கருத்தரங்கைச. சென்னை அரு இந்த கருத்தரங்கானது இரண்டு முறை நடைபெறும் கருத்தரங்கு ஆகும்.

ஒவ்வொரு இறையியல் மையத்தில் இருந்தும் இரண்டு ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. முதல் நாளில் Democracy – History, Development and Challenges என்னும் தலைப்பில் அருள்கடல் சார்பில் கட்டுரை சமர்ப்பிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து Loss in the Spirit of Democracy: Need for the Theological Response என்னும் தலைப்பில் கர்நாடகத்தின் சார்பில் கட்டுரை வாசிக்கப்பட்டது. முதல் நாளில் கடைசி கட்டுரையாக Pseudo Nationalism and its Victims என்னும் தலைப்பில் ராஞ்சி சார்பாகக் கட்டுரை சமர்ப்பிக்கப்பட்டது.




இரண்டாவது நாளில் முதல் கட்டுரையாக கர்நாடகத்தில் சார்பில் Religio-political-economic manoeuvres in India and the stunned populace: a theological response என்னும் கட்டுரை சமர்ப்பிக்கப்பட்டது. இரண்டாவதாக Role of Subalterns in Building up New India என்ற கட்டுரை அருள்கடல் சார்பாகச் சமர்ப்பிக்கப்பட்டது. இறுதியாக Building up the Kingdom – Towards future ராஞ்சி சார்பாக சமர்ப்பிக்கப்பட்டது. இறுதியாக நடந்த குழுக் கலந்துரையாடல், எழுப்பப்பட்ட கேள்விகள், உள்ளொளிகள், தேடல்கள் கருத்துப் பட்டறையின் வைரத்தைத் தீட்ட உதவின.

இந்தியாவில் இன்றையச் சூழலுக்கு ஏற்ற வகையில் இந்தக் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டதை அனைவரும் பாராட்டினர். அருள்கடல் வட்டார இறையியல் மையத்தின் சார்பாக அனைவருக்கும் நன்றிக் கூறி கருத்தரங்கை நிறைவு செய்தனர்.

வில்லியம்ஸ் சே.ச

## கவிதை I - இஸ்ராயேல் மக்களும் யாவே கடவுளும்

வயிற்றைச் சுண்டச் செய்யும்
பசிக் கொடுமையில் நாங்கள்
பாழான பாலை நிலத்தில் பார் அறியா
மன்னாவால் மனம் குளிரும் மாற்றம்
கடவுளின் அன்பு பெரியது என்பதற்காக...

பலத்தால் எதையும் பந்தாட முடியும்
எனும் மூர்க்கத்தனத்தில் நாங்கள்
பாலைநிலத்தில் பரதேசிகளாய்
பலம் இழந்து கழிந்த நாட்கள்
கடவுளின் பலம் பெரியது என்பதற்காக...

துன்பம் ஒன்றே துணையாக என்று
குழி தோண்ட ஆளில்லாத
அணாதைகளாய் நாங்கள்

பாலைநிலம் கடந்த பின்
பாலும் தேனும் பொழியும்
பரந்த நிலம் காத்திருக்கும்
கடவுளின் உடனிருப்பு பெரியது
என்பதற்காக...



கடந்த கால கசப்பில் எதிர்கால திகைப்பில்
கடவுளே உனக்கு கண் இல்லையா
எனும் விரத்தியில் நாங்கள்
கண் திறந்து பாராயோ?
வானத்துப் பறவைகளும் வயல்வெளி மலர்களும்
இன்று சகஜமாய் வாழ்ந்து கொண்டிருக்கின்றன
கடவுளின் பராமரிப்பு பெரியது என்பதற்காக...

- லாரன்ஸ் சே.ச.

# பொதுநிலையினருக்கான 100 மணி நேர இறையியல்

இறையியல் என்பது அருட்பணியாளர்களுக்கும் துறவிகளுக்கும் மட்டும் வழங்கப்படும் திருஅவையின் பரம்பரைச் சொத்து அல்ல. மாறாக, இறையியலாக்கக் கல்வி அதில் ஊற்றெடுக்கும் உள்ளொளிகளும் நம்பிக்கைகளும் சமுதாய மாற்றுச் சிந்தனைகளும் பொதுநிலையினருக்கும் உரியன என்ற காரிசனையின் வெளிப்பாடுதான் 'பொதுநிலையினருக்கான 100 மணி இறையியல்' என்ற சான்றிதழ் படிப்பாகும். அருள்கடலின் நகர இருப்பின் கனியாக முகிழ்ந்துள்ளது இப் பொதுநிலையினர் பணி.

'நம்பிக்கையாலே பொதுநிலையினர் உலகின் ஒளியாக விளங்குகின்றனர்' என 'பொதுநிலையினரின் திருத்தூதுப் பணி' என்னும் இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு முழங்குகிறது (Apostalicam Actuositatem, No.13). மேலும், பொதுநிலையினர் தனி ஆள் திருத்தூதுப் பணி மற்றும் கூட்டுத் திருத்தூதுப் பணியை மேற்கொண்டு உலகை விழித்தெழச் செய்து இயேசுவின் இறையாட்சிக் கனவை நனவாக்க அவர்களை உழைக்க அழைப்பு விடுக்கின்றது.

இயேசு சபையின் பொது அமர்வுகளும் பொதுநிலையினரோடு இணைந்து நற்செய்திப் பணியாற்றிடும் அழைப்பை முன்வைக்கின்றன. இந்தப் பின்னணியில், இரண்டாம் வத்திக்கான் சங்கம் மற்றும் இயேசு சபையின் பொது அமர்வுகளின் சவால்களை ஏற்றுக்கொண்டு தமிழ் இறையியலைச் சமைத்தெடுப்பதே எமது இலக்காகும்.

இந்த இறையியலாக்கத் தேடலில் கடந்த 12 ஆண்டுகளாக சென்னை மற்றும் செங்கல்பட்டு மறை மாவட்டங்களைச் சேர்ந்த பொதுநிலையினரும் இணைந்து பயணிக்கின்றனர். இந்நாள் வரையிலும் 250க்கும் மேற்பட்ட பொதுநிலையினர் பங்கேற்று, தரமான நற்செய்திப் பணியாளர்களாக உருவாகியதைப் பங்குத் தளங்களிலும் குடும்பங்களிலும் கண்கூடாகப் பார்க்கமுடிகிறது. படைப்பாற்றலோடு துண்டுப் பிரசுரங்கள், சிற்றேடுகள், நூல்கள் மற்றும் கட்டுரைகள் போன்றவற்றைப் படைத்து அருள் கடலில் பெற்றதைப் பரவலாக்கவும் செய்கின்றனர். தங்களது குடும்ப, பங்கு வாழ்விற்கும் மிகவும் அர்த்தமுள்ளதாகப் பார்க்கின்றனர்.



வித்யஜோதி பாடத் திட்டத்திலுள்ள மூன்று ஆண்டு இறையியல் பாடங்களை இரத்தினச் சுருக்கமாக விவிலியம், அறநெறி, கொள்கைத் திரட்டுகள் மற்றும் கோட்டுபாடுகள் போன்ற பன்முகப் பார்வையிலும் சமுதாய மாற்றச் சிந்தனையிலும் நம் மண்வாசனையோடும் அறிமுகப்படுத்துகிறோம்.

கடந்த கல்வியாண்டில் 50க்கும் மேற்பட்ட பொதுநிலையினர் ஆர்வத்துடன் பங்கேற்றது மிகவும் சிறப்பானது. அவர்களுக்கு நல்ல முறையில் வகுப்பறை வசதியை ஏற்படுத்திட அரங்கத்தில் கனிணி, திரை மற்றும் கனிணி ஒளிவீச்சி (LCD Projector) போன்றவற்றை இல்லத் தலைவர் அருள்முனைவர் ராஜ் இருதயா அவர்கள் சிறப்பாக நன்கொடையாளர்கள் வழியாக ஏற்பாடு செய்து தந்துள்ளார். அருள் கடல் பேராசிரியர்கள் அனைவரும் ஆர்வமுடன் பொதுநிலையினருடன் உடன்பயணிக்கின்றனர்.

- அருள்பணி. பாஸ்கர் அந்தோணி, சே.ச.

## கவிதை 2 - என்று காண்பேன் நீதியாளர்களை?

பெண்களுக்கு எதிரான பாலியல் சீண்டல்கள் பல
எங்கோ ஒருவர் அதை உலகுக்கு உணர்த்த
அது மீ டு எனத் தீயாய் உலகில் பரவியது.
கருப்பின மக்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகள் பல
எங்கோ ஒருவர் அதை உலகுக்கு உணர்த்த
அதுவும் மீ டு எனத் தீயாய் உலகில் பரவியது.
ஆதிக்க வர்க்கத்தின் ஆணவக் கொலைகள் பல
எங்கோ ஒருவர் அதை உலகுக்கு உணர்த்த
அதுவும் மீ டு எனத் தீயாய் நாட்டில் பரவியது.
தொழிற்கூடத் தொந்தரவுகள் பல
எங்கோ ஒரு நடிகர் தற்கொலை செய்ய
அதுவும் மீ டு எனத் தீயாய் நாட்டில் பரவியது.
தலித்துக்கு எதிரான தீண்டாமைக் கொடுமைகள் பல
எங்கும் சாதியப் பாகுபாடு அதை உலகுக்கு உணர்த்த
யார் சொல்வார் மீ டு?

- லாரன்ஸ் சே.ச.

## கிறிஸ்துமஸ்: அன்புக்குச் செயல் வடிவம் தரும் தருணம்



மகிழ்ச்சியும் பரிசுகளும் நம்மை சூழ்ந்து கொள்ளும் நேரம் தான் கிறிஸ்துமஸ். அவ்வாறு தெருவோரத்தில் கைவிடப்பட்ட மக்களும் இந்தக் கிறிஸ்துமஸ் காலத்தின் மகிழ்ச்சியை அனுபவிக்க அருள் கடல் குழுமம் எடுத்த ஓர் சின்ன முயற்சி தான் சிங்காரச் சென்னையின் சாலையோரங்களை வீடாக்கி வாழும் சகோதர சகோதரிகளுக்கு ஒருவேளை உணவும், ஒரு போர்வையும் கொடுத்து உதவியது. “சின்னஞ்சிறியவர்களுக்கு செய்யும் போதெல்லாம் எனக்கே செய்கிறீர்கள்” என்று கடவுள் சொன்ன வார்த்தையின் அர்த்தம் உணர்ந்து மகிழ்ந்த தருணம் அது. இதற்கு முன்னேற்பாடாக, இளவல்களும், தந்தையர்களும் தங்களுக்குக் கொடுக்கப்படும் தனிச் செலவு பணத்தில் வந்த அன்பளிப்புத் தொகையை 6000 ருபாயை வைத்து உணவு தயாரித்தோம். “உலகிற்கெல்லாம் சென்று நற்செய்தி அறிவியுங்கள்” என்ற கடவுளின் வார்த்தைகளுக்கு அர்த்தம் கொடுக்கும் வண்ணம் மதிய வேளையில் நான்கு ஆட்டோக்களில் நான்குத் திசைகளுக்கு புறப்பட்டோம். கூனிக் குறுகிச் சாலையையே தங்களின் இல்லிடாமாகக் கருதி வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களைச் சந்தித்து உண்ண உணவும், குளிரில் போர்த்த போர்வையும் கொடுத்து மகிழ்ந்தோம். எல்லாவற்றையும் கவ்விக் கொள்ளும், நுகர்வுக் கலாச்சாரத்தில் மூழ்கி இருக்கும் இவ்வுலகில், “எனக்கு உணவு மட்டும் போதும், இந்தப் போர்வையை இன்னொருவருக்குக் கொடுங்கள்” எனக் கூறி போர்வையைத் திரும்ப எங்களிடமே தந்த பெரியவரின் மனது எங்கள் மனத்தை நெகிழச் செய்தது. எங்களது இந்த எளிய முயற்சியைப் போல பலர் பேர் முன் வந்து ஏழைகளுக்கும், கைவிடப்பட்டோருக்கும் உதவ முன் வர வேண்டும் என்பதன் அடையாளமே எங்களின் இச் செயலுக்கு அர்த்தம் ஆகம்

- ஜான் கமிலஸ் சே.ச.

## கொரோனா தொற்று நோய்க் காலத்தில் அருள் கடலின் ஈடுபாடு

அருள் கடல் வட்டார இறையியல் மையமானது சமுதாயத்தில் புறந்தள்ளப்பட்ட, அடிபட்ட, மாண்பு மறுக்கப்பட்ட மானுடத்தின் பார்வையில் சூழலமைவு இறையியலாக்கத்தினை மேற்கொள்கிறது. இக்கருத்து இன்னும் அதிகமாக இயேசு சபையின் உலகளாவிய மற்றும் சென்னை, மதுரை மறைமாநிலங்களின் அருட்பணி விருப்பத் தேர்வுகளில் ஒன்றாகச் செயலாக்கம் பெற்று வருகிறது. உலகையே உளுக்கிக் கொண்டிருக்கும் கொரோனா தொற்றினால் முடங்கியிருக்கும் ஏழை எளிய மக்களை அடையாளம் கண்டு உதவ அருள் கடல் குழுமம் இல்லத்தலைவர் பணி. ராஜ் இருதயா வழிநடத்துதலில் தன்னையே முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டது. இதற்காக தோழர்.கீதாம்மா, சகோதரி.வளர்மதி, திருமதி.கவிதா போன்றோருடன் இணைந்து பிறரால் கண்டுகொள்ளப்படாமல் இருந்த (டுமிங்குப்பம், நொச்சிக்குப்பம், சீனிவாசபுரம், மந்தை வெளி, தேனாம்பேட்டை, திருமுல்லைவாயல், சென்டிவாக்கம், மதுராந்தகம் பகுதிகளில் வாழும்) மனவளர்ச்சி குன்றிய 75 குழந்தைகள், 100 ஏழைக்குடும்பங்கள், வாராந்திர பங்குப்பணித்தளங்களில் வாழும் 50 ஏழைக்குடும்பங்கள், 100 வீட்டு வேலை பணிப்பெண்கள், 200 புலம் பெயர்ந்த



கட்டுமான தொழிலாளர்கள், 20 தூய்மைப்பணியாளர்கள், 50 முதியோர் இல்லத்தில் வாழும் கைவிடப்பட்டோர் போன்றோர் அடையாளம் காணப்பட்டனர். இத்தகையோருக்கு உதவிட ஐக்கிய ஆலயம், சென்னை இயேசு சபை மறைமாநிலம் மற்றும் உள்ளன்போடு உதவிடும் குடும்பங்கள் போன்றோரின் நிதி உதவிகள் பெறப்பட்டன.

அடையாளம் காணப்பட்டோரின் அன்றாடத் தேவைகளை நிறைவேற்ற மளிகைப்பொருட்கள், வங்கிக் கணக்குகளில் பணம் செலுத்துதல், மருந்துப்பொருட்கள், முக கவசம், பாதுகாப்பு உடைகள் தயாரிக்கப் பண உதவி போன்றவை வழங்கப்பட்டன. ஊரடங்குக் காலக்கட்டத்தில் பாதிக்கப்பட்ட புலம் பெயர்ந்தோர், குழந்தைகள், பெண்கள் விளிம்பில் வாழும் மக்கள் யாவரும் இறை அருளால் பாதுகாப்பாக வாழ அவர்களுக்காகத் திருப்பலிகளும், செபங்களும் நிறைவேற்றப்பட்டன. மே மாதத்திற்கான குழும அகப்பயணத்தில் சிந்தனைகள், அனுபவங்களை இறையியலாக்க கேள்விகளாகப் பகிர்ந்து கொண்டு தொடர்ந்து கொரோனா தொற்று நோய் அகல, கடவுளிடம் செபித்து வருகிறோம்.

செயராசு சே.ச.

## கருணை இல்ல முதியோருடன் தவக்காலத் தோழமை

அடுத்திருப்போர் வாராந்திரப் பணிகளில் மிக அர்த்தமுள்ள பணி, கருணை இல்லத்தில் சில மணி நேரங்களைச் செலவிடுவது. கருணை இல்லம் Missionaries of Charity அருட்சகோதரர்களால் நடத்தப்படும் முதியயோர் இல்லம் ஆகும். இங்குச் சமுதாயத்தால் ஓரங்கட்டப்பட்ட முதியவர்கள், நோய்களினால் புறக்கணிக்கப்பட்டவர்கள், மூளை வளர்ச்சி குன்றியவர்கள், மாற்றுத் திறனாளிகள் என நூறுக்கு மேற்பட்ட சகோதரர்கள் வாழ்கின்றனர். அங்குப் பணிபுரியும் அருட்சகோதரர்கள் மற்றும் பயிற்சியில் உள்ள இளவல்கள் இவர்களுக்கு சத்தான உணவும், மருந்துகளும் கொடுத்து நன்குக் கவனித்து வருகின்றனர்.

ஒவ்வொரு புதன் கிழமை அருள் கடலாளர்கள் கருணை இல்லத்திற்குச் சென்று அங்குள்ள சகோதரர்களை முதலில் சந்தித்துச் சிரித்துப் பழகுவர். அவர்களின் வேதனைகளுக்குச் செவிமடுத்து ஆறுதலான வார்த்தைகளை கூறுவர். கை குலுக்கி வாழ்த்தைத் தெரிவிப்பதில் அவர்கள் அளப்பிரியா மகிழ்ச்சி அடைவர். அனைவருக்கும் இன்முகத்தோடு உணவைப் பரிமாறுவோம். அவர்கள் சாப்பிட்ட தட்டு மற்றும் குடித்து விட்ட தண்ணீர் குவளைகளைச் சுத்தமாகக் கழுவி வைத்து விட்டு இல்லம் வருவது எங்கள் வழக்கம்.இந்த வாராந்திரப் பணி எங்கள் வாழ்வில் நிம்மதியைத் தருகிறது. எங்களை தாழ்ச்சியில் இன்னும் அதிகமாக வளர உதவுகிறது. உள்ளிருக்கும் நண்பர்களுடன் கை குலுக்கும் போது அவர்களின் மகிழ்ச்சி இரட்டிப்பாகிறது. இந்த அர்த்தமுள்ள தாழ்ச்சியான பணியைச் செய்யும் அருட்சகோதரர்களின் பணியை இறைவன் நிறைவாக ஆசீர்வதிக்க வேண்டுகிறோம். இந்த ஆண்டு பணியின் இறுதி நிகழ்வாக, கருணை இல்லத்தில் உள்ள அனைவருக்கும் அருள் கடல் குழுமமானது ஒரு வேளை உணவு வழங்கியது. நாங்கள் அனைவரும் அங்குச் சென்று அவர்களுக்கு உணவு பரிமாறி மகிழ்ந்தோம். அவர்களுக்கு உதவியாக ஒவ்வொரு நபருக்கும் ஒரு துண்டையும் கொடுத்து கௌரவப்படுத்தினோம். இந்த ஓர் சிறிய இரக்கச் செயல் அவர்களுக்கும் எங்களுக்கும் மிக்க மகிழ்ச்சியைத் தந்தது.

- ஜான் கமிலஸ் சே.ச

# ஈடுபாட்டு இறையியலின் களங்கள் - வார இறுதி பங்குப் பணித்தள அனுபவம்



அருள் கடல் இறையியல் மாணவர்களாகிய நாங்கள் 14 பங்குகளுக்கு (சென்னை-மயிலை உயர் மறைமாவட்டம் - 2, செங்கல்பட்டு மறைமாவட்டம் - 12) எங்களது வாராந்திரப் பங்குப் பணிக்காகச் செல்கின்றோம். பங்குப் பணித்தளங்களில் எங்களது முக்கியமான பணிகளாக இருப்பவை: ஞாயிறு திருப்பலியில் மறையுரை ஆற்றுவது, பங்குத்தள மக்களை அவர்களது வீடுகளில் சந்தித்து அவர்களுக்காகச் செபிப்பது, அன்பிய மற்றும் பங்கு இளையோர் கூட்டங்களை வழி நடத்துவது, குழந்தைகளுக்கு மறைக்கல்வி வகுப்புகள் எடுப்பது, வயதானவர்களுக்கு நற்கருணை எடுத்துச் செல்வது, கிளைப்பங்கில் நடைபெறும் அனைத்துவிதமான பங்கு நிகழ்வுகளையும் ஒருங்கிணைப்பது, பாடல் வகுப்புகள் எடுப்பது மற்றும் பங்குத்தந்தையருக்குப் பங்குப் பணிகளிலே உதவுவது.
வார இறுதி பங்குத்தள அனுபவங்கள் நாங்கள் வகுப்பிலே கற்றுக்கொள்ளும் பாடங்களை இன்னும் மெருகேற்றுபவையாகவும் எங்களது இறைநம்பிக்கையை இன்னும் ஆழப்படுத்துபவையாகவும் நாங்கள் மேன்மேலும் எங்களது ஆன்மீக வாழ்வில் மேம்பட எங்களுக்குப் பெரிதும் உதவுகின்றன. மேலும், மக்களுடனான உறவு, அவர்கள் எங்களைக் கவனித்துக் கொள்ளும் விதம் மற்றும் இளையவர்கள் எங்களிடம் எதிர்பார்ப்பவை போன்றவை அனைத்தும் நாங்கள் எப்படிப்பட்ட துறவற வாழ்வு வாழ அழைக்கப்பட்டுள்ளோம் என்பதனை எங்களுக்குத் தெளிவாக உணர்த்துகின்றன. இவ்வாறாக, ஒவ்வொரு வாரமும் நாங்கள் எங்களது ஆன்மீக வாழ்விலும் இறையியலாக்கத்திலும் ஆழம் பெற எங்களுக்கு



இவ்வாராந்திரப் பங்குப்பணித்தள அனுபவங்கள் மிகவும் பெரிதாக உதவுகின்றன.

ஜெயசீலன் சே.ச

## பங்குப் பணி அனுபவக் களம்: சுபம் - 2020
## (SUPAM: Supervised Pastoral Ministry)

இந்த வருடம் திருத்தொண்டர்களுக்கான பங்குத் தள அனுபம் சிறப்பாக அமைய அருள்கடல் குழுமம் பல்வேறு புதிய முயற்சிகளை எடுத்தது எங்களுக்கு மிகவும் உதவியாக இருந்தது. திருப்பலியின் போது எங்களின் பங்கேற்பு, பங்களிப்பு, மறையுரை ஆற்றுவது, நற்கருணை ஆசீர்வாதம் வழங்குவது, திருப்பலி ஏட்டைக் கையாளப் பயிற்சி என்று பல்வேறு



வாய்ப்புகள் எங்களுக்கு கொடுக்கப்பட்டது. நாங்கள் பங்குத் தளத்திற்கு செல்வதற்கு முன் வழிபாடு மற்றும் திருத்தொண்டருக்குரிய செயல்பாடுகளைப் பற்றிய நல்ல புரிதலோடு செல்ல வேண்டும் என்ற ஆவலில் எங்களின் சுபம் இயக்குநர் அருட்பணி பாஸ்கர் அவர்கள் மிகவும் திட்டமிட்டு எங்கள் வருங்கால பணியைப் பற்றிய நல்லதொரு அனுபவத்தையும் முன்சுவையையும் அளித்தார்.

குழுமத்தில் மறையுரை ஆற்றிய அனுபவம் எங்களின் ஆளுமைத் திறனை வளர்க்கவும் இறைவார்த்தையை இன்றைய சூழலுக்கு ஏற்ப மக்களுக்கு எடுத்துக் கூறவும் மிகவும் உதவியாக இருந்தது. அதிலும் சிறப்பாக கொரோனாவினால் பாதிக்கப்பட்ட இந்த நம்பிக்கையற்ற சூழலில், நம்பிக்கைக்குரிய கூறுகளை அடையாளப்படுத்தி வாழ்வை துணிவுடன் எதிர்கொள்ள வேண்டிய கருத்துக்களை இன்றைய எதார்த்தங்கள் மற்றும் அனுபவங்கள் வழியாக எடுத்துச் சொல்லக்கூடிய

அனுபவத்தைப் பெற்றோம். திருப்பலியில் திருத்தொண்டருக்குரிய பணிகளைச் செய்யும் போதும் நற்கருணை ஆசீர்வாதம் வழங்கும் போதும் கடவுளுக்கு மிக



அருகில் நின்று பணி செய்வது போன்ற உணர்வு எங்களுக்குள்ளே ஏற்பட்டது. இது எங்கள் ஆன்மீக வாழ்வை ஆழப்படுத்தும் அனுபவமாக இருந்தது. திருப்பலியை எவ்வாறு நிறைவேற்ற வேண்டும் என்ற பயிற்சி திருப்பலிப் புத்தகத்தை திறம்பட கையாளக்கூடிய அறிவையும் அனுபவத்தையும் எங்களுக்கு தந்தது. அருள்கடல் குழுமம் மேற்கொண்ட கொரோனா நிவாரணப் பணிகளில் பங்கேற்றது எங்களின் தலையாயப் பணியான தொண்டுப் பணியின் முன்சுவையாக அமைந்தது. அருள்கடல் குழுமத்தின் தொடர் உடனிருப்பும் ஊக்கமும் எங்களுக்கு புத்துணர்வு அளிக்கின்றது.

- விஜின் ஆன்டனி

## போராட்டங்கள் வழி பெற்ற தோழமையும் கள இறையியலாக்கமும்



பாஜக அரசு ஆட்சிக்கு வந்ததிலிருந்து மதவாதக் கொள்கையை மனித நேயத்திற்கு எதிராகத் தூண்டி விட்டுள்ளது. தொடர்ச்சியாகச் சிறுபான்மையினருக்கு எதிராகப் பல வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளன. ஒரே மொழி, ஒரே கல்விக் கொள்கை, ஒரே மதம் என்ற ஒற்றைச் சிந்தனையைத் திணிக்க முற்படுகிறது பாசிச பாஜக அரசு.

இவ்வகையான சமூக அநீதிகளைக் கண்டு எம் நெஞ்சம் பொறுக்கவில்லை. அருள்கடல் இறையியல் படிப்பு வெறும் நான்கு சுவர்களுக்குள்ளும் பாடப் புத்தகத்திற்குள்ளும் முடங்கி விடாது மக்களோடு மக்களாக மக்களின் உரிமைகளுக்காகப் போராடிய நம் புரட்சி நாயகன் இயேசுவின் வழியில் போராட்டத்தில் பங்கேற்றது எம் வாழ்வின் முதல் அனுபவமாகவும், முத்தாய்ப்பான அனுபவமாகவும், எம் வாழ்வைப் புடம் போட்ட அனுபவமாகவும் அமைந்தது.

எம் இல்லத் தலைவர் அருட்பணி முனைவர் ராஜ் இருதயா சேச எமக்கு போராட்டக்கள அனுபவத்தை ஏற்படுத்திக் கொடுத்தார். தேசிய கல்விக் கொள்ளைக்கு எதிரான போராட்டம், தேசிய குடியுரிமைத் திருத்தச் சட்டத்திற்கு எதிரான போராட்டம் போன்ற போராட்டங்களில் பங்கெடுத்தது வாழ்வு மறுக்கப்படும் மக்களின் ஏக்கங்களை, எதிர்ப்புகளை உணர்ந்து தோழமை கொடுக்க முடிந்தது. இயேசுவின் வழியில் இறையாட்சிப் பணியில் சமத்துவ




சமுதாயத்திற்கான எம் பங்களிப்பின் தொடக்கமாக இப்போராட்டங்கள் அமைந்தன. போராட்டத்தில் வெறும் பார்வையாளர்களாக ஓரமாக நின்று பார்த்துவிட்டு வெளியேறாமல் பங்கேற்பாளர்களாகவும், போராட்ட ஒருங்கிணைப்பு குழுவில் உறுப்பினர்களாகவும் எம் அருள்கடல் குழுமம் இருந்தது பெருமைக்குரியது.

குறிப்பாக இசுலாமிய மக்களோடும் மக்கள் இயக்கங்களோடும் கல்வியாளர்களோடும் இணைந்து போராட்டக்களத்தில் இறங்கியது தோழமைப் பணி அனுபவமாக இருந்தது.

சுடும் வரை நெருப்பு சுற்றும் வரை பூமி
போராடும் வரை மனிதர்
- வைரமுத்து -

- அருள்

# விழாக்கள்

## புனித இஞ்ஞாசியார் பெருவிழா

### தோழமை உறவையும் பணியையும் கொண்டாடும் விழா



கி.பி. 1556 ஆம் ஆண்டு இறந்து போன ஒருவருக்கு 464 ஆண்டுகள் கழித்தும் விழா எடுக்கிறோம் என்றால் இவர் சாதாரண மனிதரல்ல மாறாக மானுடத்தை இறைப்பதம் சேர்த்த மாபெரும் புனிதர். வரலாற்றைப் புரட்டிப்போட்ட இறைமகன் இயேசுவின் வாழ்வியல் நெறிகளைச் சிக்கெனப் பற்றிக்கொண்டவர். ஒரு காதலன் எப்படி தன் காதலியின் முகத்தைப் பார்க்கும் எல்லாவற்றிலும் காண்பானோ அதைப்போல படைத்த இறைவனைப் படைக்கப்பட்ட எல்லா மனிதரிலும், பொருளிலும், இயற்கையிலும் கண்டுகொண்டவர். 'ஒருவர் உலகமெல்லாம் தனதாக்கிக் கொண்டாலும் தன் ஆன்மாவை இழப்பாராகில் அவருக்கு கிடைக்கும் பயன் என்ன?' என்ற இறைவார்த்தையால் பல உள்ளங்களை இறைவன்பால் ஈர்த்தவர் அவர் தான் இயேசுசபையைத் தோற்றுவித்த புனித இஞ்ஞாசியார். அவரின் பெருவிழா ஜீலை 31ஆம் தேதி மிகவும் அர்த்தமுள்ள வகையிலே அருள் கடலோடு தொடர்புடைய பொதுநிலையினரோடும், அருகில் வாழும் பங்குத்தந்தையரோடும், சகோதர, சகோதரிகளோடும்



இயேசுசபை நண்பர்களோடும் இணைந்து கொண்டாடப்பட்டது. ஆன்மீக விருந்தும் அருட்சுவை விருந்தும் வழங்கப்பட்டது. இறை மனித நட்புறவில் வளர இந்நிகழ்வு துணை செய்தது.

- லெனின் சே.ச.

## சமய நல்லிணக்க ஒளி விழா

உலகின் ஒளியான இயேசு கிறிஸ்துவின் பிறப்பை உலகத்தில் வாழும் பிற சமய சகோதர சகோதரிகளோடு இணைந்து சிறப்பிக்க டிசம்பர் 6ஆம் நாள் மாலை ஒளிவிழா கொண்டாடப்பட்டது. மதத்தை அல்ல மனிதத்தை, சாதியை அல்ல சமத்துவத்தை உலகுக்குப் பறைசாற்றுவதுதான் அய்க்கிய ஆலயத்தின் மையமாக இருந்து வருகிறது. சமய நல்லிணக்கத்தைப் போற்றும் வகையில் பல்சமயத்தைச் சார்ந்தவர்களும் ஒளிவிழாவில் பங்கேற்றனர். குறிப்பாக இஸ்லாமியம், இந்து, சீக்கியம், பௌத்தம், சமணம், கிறித்தவம் போன்ற சமயத்தைச் சார்ந்த சமயத்துறவிகள் மற்றும் பொதுநிலையினரும் கலந்து கொண்டு இந்த ஒளிவிழாவை சமய நல்லிணக்க விழாவாகச் சிறப்புச் செய்தனர். இஸ்லாமிய சமயத்தைச் சார்ந்தவர் பாட. அதற்கு சீக்கிய சமயத்தைச் சார்ந்தவர் இசை மீட்ட அதற்கு இன்னும் அழகு சேர்க்க இந்து சமயத்தைச் சார்ந்தவர் தபேலா வாசிக்க இதை பௌத்தம், சமணம், கிறித்தவம் மற்றும் பல சமயத்தைச் சார்ந்தவர்களும் மெய்மறந்து கேட்டு இரசித்த காட்சிகள் வந்திருந்த அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்தது. இறைவன் விரும்பிய இறையாட்சியின் வெள்ளோட்டமாக இந்நிகழ்வு அமைந்தது. வந்திருந்த அனைவருக்கும் உணவு பரிமாறி மகிழ்ச்சியை இந்நிகழ்வு இரட்டிப்பாக்கியது.

- லெனின் சே.ச.



# ஏழை மாணவரோடு கிறிஸ்து பிறப்பு விழா

அருள்கடலாரின் அடுத்திருப்போர் பணிகளின் ஒரு பகுதியாகப் பட்டினப்பாக்கத்தைச் சுற்றியுள்ள ஏழை மாணவ மாணவிகளுக்கு வாரந்தோறும் புதன் கிழமைகளில் பாடம் கற்றுக்கொடுக்கவும், வாழ்வில் முன்னேற்றப் பாதையைக் காட்டவும் எமது சமூக ஈடுபாட்டைத் தொடர்கின்றோம். அவர்களை ஒருங்கிணைத்துக் கொண்டிருக்கும் அடைக்கல மாதா சபைத் துறவிகளோடு




இணைந்து கிறிஸ்து பிறப்பு விழாவை மாணவ மாணவிகளோடு கொண்டாடினோம். பல சமயங்களைச் சேர்ந்த மாணவ, மாணவிகளோடு இணைந்து, பிற கிறிஸ்தவத் திருஅவையினரின் ஆலயத்தில், கிறிஸ்து பிறப்பின் மகிழ்வினைக் கொண்டாடியது எங்களுக்குக் கூடுதல் மகிழ்ச்சியைக் கொடுத்தது. மாணவச் செல்வங்களின் கலை நிகழ்ச்சிகள் அவர்களிடம் இருந்த ஆர்வத்தை வெளிக்காட்டியது. சகோதரிகளின் பகிர்வும், தந்தையர்களின் வாழ்த்தும் மாணவர்களுக்கு உற்சாகத்தை அளித்தன. இறுதியாக உணவுப் பொருட்களை மாணவ, மாணவிகளுக்குப் பகிர்ந்தளித்து விழாவை நிறைவு செய்தோம். சமுதாயத்தால் மையத்தில் வைத்துப் பார்க்கப்படாத குழுவைச் சார்ந்த மாணவ மாணவிகளுக்காகப் பணிசெய்வதில் மற்ற துறவறச் சபையாரோடும் இணைந்து செயல்படுவது சிறப்பான செயல்பாடு ஆகும். இறையாட்சியைத் தரணியில் கொண்டுவரும் பணியில் அனைவரும் இணைந்து செயல்படுதல் சாலச் சிறந்தது.

- பால்ராஜ் சே.ச

# குழும விளையாட்டுப் போட்டிகள்

அருள் கடல் குழுமத்தின் குழும விழாப் போட்டிகள் ஏப்ரல் மாதம் 23 முதல் 28 வரை நடைபெற்றன. குழும உறுப்பினர்கள் 'ஊரடங்கு' மற்றும் 'கையைக் கழுவு' என இரண்டு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு இறகுப் பந்து, டேபிள் டென்னிஸ், கூடைப்பந்து மற்றும் கேரம் ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டன. குழும உறுப்பினர்கள் அனைவரும் தோழமையோடு அனைத்து விளையாட்டுப் போட்டிகளிலும் பங்கெடுத்தனர். குழும விளையாட்டுகளின் இறுதியில் இரண்டு குழுக்களும் சம புள்ளிகள் பெற்று கோப்பையைப் பகிர்ந்து கொண்டனர். இந்தக் குழும விழாவானது குழும உறுப்பினர்களிடையே மகிழ்ச்சியையும், தோழமையையும், உற்சாகத்தையும் அதிகப்படுத்தியது.

- மனோஜ் சே.ச

# உறவுகளைத் தொடர்வோம்...

அன்பு முன்னாள் அருள்கடல்-அருள்கிராம மாணவ உறவுகளே,

அருள் சாரல் எனும் அருள்கடலின் மின் இதழ் இந்நாள் மாணவர்கள்-ஆசிரியர்களின் இறையியலாக்க அனுபவங்களை, தேடல்களை, முயற்சிகளை உங்களோடு பகிர்ந்து கொண்டு அருள்கடல் உறவுகளைத் தொடர விரும்புகின்றோம்.

இறையாட்சிப் பணிக்களத்தில் அர்ப்பணத்தோடு பல துறைகளிலே அருட்பணி ஆற்றிக் கொண்டிருக்கின்ற உங்களது அனுபவங்களை, சிந்தனைகளைப் பகிர்ந்து கொள்ளும் வாய்க்காலாகவும் மலர்ந்துள்ளது அருள் சாரல்.

உறவுகள் தொடர்ந்திடட்டும்
பணிகள்-பயிற்சியின் பயணம் தொடரட்டும்
அருள்கடல் உறவுத் தோழமையில்


- ராஜ் இருதயா, சே.ச.

## மனிதம் மலர்ந்திட: இறையாட்சிக்கான இறையியலாக்கத் தேடல்கள் நூல் வெளியீட்டு விழா

மனதைத் தொட்ட அனுபவங்களின் அடிப்படையில் இறையியல் கேள்விகளை எழுப்பி இறையியல் தேடலில் ஈடுபடுவது அருள் கடல், இயேசு சபை வட்டார இறையியல் மையத்தின் சிறப்பம்சம் ஆகும். அந்தத் தேடலின் விளைவாக அருள் கடல் மாணவர்கள் தங்களின் இறையியல் கட்டுரைகளை ஆண்டு தோறும் வெளிக்கொணர்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். அவ்வாறாக கடந்த 40 ஆண்டுகளாக வெளிவந்த இறையியல் கட்டுரைகளைப் பணி. ராஜ் இருதயா அவர்கள் தொகுத்து 'மனிதம் மலர்ந்திட' எனும் நூல் வடிவம் கொடுத்தார். இந்நூலானது சனவரி மாதம் 14- ஆம் தேதி தந்தை. டேனிஸ் பொன்னையா, மதுரை மறைமாநிலத் தலைவர் அவர்களால் அருள் கடலில் நடைபெற்ற விழாவில் வெளியிடப்பட்டது. பணி. குழந்தை, கப்புச்சின் சபை, அவர்கள் நூலைப் பற்றிய திறனாய்வையும் அதில் பொதிந்துள்ள இறையியல் கருத்துக்களையும் தனது உரையில் வெளிக்கொணர்ந்தார். மேதகு. தேவசகாயம், தென்னிந்திய திரு அவையின் முன்னாள் சென்னை



மறைமாவட்ட ஆயர், அருட்சகோதரி. லீமா ரோஸ், புனித அன்னாள் கன்னியர் சபையின் முன்னாள் தலைவி மற்றும் பேராசிரியர். காஜாக்கனி, காயிதே மில்லத் கல்லூரி ஆகியோர் இவ்விழாவில் கலந்து கொண்டு நூல் பற்றிய தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டு வாழ்த்திப் பேசினர்.




அருள்கடலின் முன்னாள் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மதுரை மறை மாநிலத் தலைவர் அவர்கள் முன்னாள் மற்றும் இந்நாள் பேராசியர்களுக்கு பொன்னாடை அணிவித்து மரியாதை செய்தார். இந்நூலானது பல்வேறு சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் பண்பாட்டு பிரச்சனைகளின் அடிப்படையில் அமைந்த இறையியல் தேடலின் தொகுப்பு ஆகும். தமிழகத் திரு அவைக்கு அருள் கடலின் மிகப் பெரிய பங்களிப்பாக இப்படைப்பு திகழ்கிறது.

ஜோசப் சே.ச

## அருள் தேடல்: இறையியல் சிந்தனைகளைப் பரவலாக்கும் இதழ்

ஒரு சிறந்த ஆசிரியர் தன் மாணவர்களை வெறும் பாடத்தைப் படிப்பவர்களாக மட்டும் உருவாக்கமால் வரலாறு படைப்பவர்களாக உருவாக்குபவர் ஆவார். அவ்வகையில் அருள் கடல் இறையியல் மைய ஆசிரியர்கள் மாணவர்களின் பருவத்தேர்வு என்பது பாடத்தைத் தாண்டி, சமூக அக்கறை கொண்டு கற்ற கல்வியையும் பணித்தள அனுபவத்தையும் மக்களின் எதார்த்த நிகழ்வுகளையும் ஆய்வுக்கு உட்படுத்தி இறையொளியில் அதற்கான தீர்வுகளைக் கண்டுகொள்ள எமக்குப் பயிற்சி அளிக்கின்றனர். இறையியல் மாணவர்களின் ஒருங்கிணைவுத்தாள் ஒப்படைப்பு மற்றும் பகிர்வானது வருடத்திற்கு இருமுறை இருக்கும். பருவத்திற்கு ஒன்று வீதம் ஓர் ஆண்டிற்கு இரண்டு ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிக்க வேண்டும். தரமான உரமான சிந்தனைகளைக் கொண்ட ஆய்வுக்கட்டுரைகள்

இரண்டிணைத் தேர்வு செய்து அதை அருள் தேடல் என்ற பெயரில் வெளியிட்டு அருள்கடல் மாணவர்களின் சிந்தனைகள் அலை அலையாய் அனைவருக்கும் கொண்டு சேர்க்கப்படுகின்றன. அருள் தேடலின் ஆசிரியராகக் கடந்த ஆண்டுகளில் பணி. பாஸ்கர் அந்தோணி சே.ச. சிறப்பாகச் செயல்பட்டு வந்தார். துற்போது பணி.ராஜ் இருதயா ஆசிரியராகப் பொறுப்பேற்று உள்ளார். அருள் தேடல் ஒரு ஆன்மீகத் தேடல் மட்டுமல்ல அனைவரின் அடிப்படைத் தேடலாக அமைகிறது.


ஜோசப் சே.ச




## குருத்துவ நாள் நூல் வெளியீடு

வழித்துணையாகிடும் அன்னை மரியா” என்னும் நூல் 2019 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31 நாள் அருள்பொழிவு செய்யப்பட்ட இயேசு சபை புதிய குருக்களால் உருவாக்கப்பட்டு வெளியிடப்பட்ட படைப்பாகும். இயேசு சபையின் சிறப்பு அன்னையாகப் புனித இஞ்ஞாசியார் காலத்தில் இருந்தே போற்றப்படும் வழித்துணை மரியாவைத் தமிழகத் திருஅவைக்கு அறிமுகப்படுத்தும் நூலாக வெளி வந்துள்ளது. குருத்துவ அருட்பொழிவு பெற்ற பதினொருவரும் இணைந்து 11 தலைப்புகளில் அவரவர்களின் நம்பிக்கை அனுபவம், அறிவு மற்றும் உள்ளொளிகள் ஆகியவற்றை அடித்தளமாகக் கொண்டு படைத்துள்ளனர். இயேசு சபை வாழ்வு, திருஅவை மற்றும் புனிதர்களின் வாழ்வில் அன்னை மரியாவின் பங்கு என்ற பின்புலத்தில் அருள் கடல் குழுமத்தின் தலைவர் ராஜ் இருதயா அவர்களின் தொடர் வழிநடத்துதலில், தொகுப்புப் பணியில் இந்த நூல் உருப்பெற்றது. அன்னை மரியாவிற்கு நவநாள் செபம் மற்றும் பலவித புதிய தேவைகளுக்கான மாதா மன்றாட்டு மாலை என ஏழை எளிய மக்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டு “வழித்துணையாகிடும் அன்னை மரியா” உருவாக்கப்பட்டது. இந்த நூலின் முதல் பிரதியை இயேசு சபை மதுரை மறைமாநிலத் தலைவர் பணி. டெனிஸ் பொன்னையா அவர்களால் வெளியிடப்பட்டு புதிய குருக்களை அருள்பொழிவு செய்த திண்டுக்கல் மறைமாவட்ட ஆயர் மேதகு. தாமஸ் பால்சாமி அவர்களால் பெறப்பட்டது. பல தரப்பினரும் விரும்பி வாசிக்கும் நல்ல படைப்பாக இருந்து வருகிறது.

பணி. மேக்பே சே.ச



# ஐக்கிய ஆலயம்
# பல் சமய உரையாடல் மையத்தின் இலச்சனை மாற்றம்

1972 ஆம் ஆண்டில் சேசுசபை இக்னேசியஸ் இருதயம் அடிகளார் அவர்களின் பெரு முயற்சியால் ஐக்கிய ஆலயம் பல் சமய உரையாடல் மையமாகத் தொடங்கப் பெற்றது. இரண்டாம் வத்திக்கான் சங்கம் பல் சமய உரையாடலின் முக்கியத்துவத்தைத் திருஅவைப் பணியாக அறிவிக்கும் முன்பே சர்வ சமயச் சமரத் தந்தை எனப் பாராட்டப் பெற்ற பணி.



இக்னேசியஸ் இருதயம் அடிகளார் பல் சமய உரையாடலில், உறவாடலில் மிகுந்த ஆர்வம் கொண்டவராக இருந்தார். இவரது கனவு நனவாகிய நாளில் இருந்து இம்மையத்தை அரும்பாடுபட்டு வளர்த்தெடுத்துள்ளார். இம்மையத்தில் இந்திய, தமிழ்ப் பண்பாட்டை வெளிப்படுத்திடும் சின்னங்கள் பல உள்ளன.

உரையாடல் பெரு மண்பத்தின் உள் முகப்பில் பல் சமயம் போற்றும் இச் சின்னம் வைக்கப்பட்டிருந்தது. இந்து, இசுலாம், பௌத்தம், கிறித்தவம் என நான்கு மதங்களை மட்டும் குறிப்பதாக இருந்தது.

சமய நல்லிணக்கம், ஒற்றுமை, தோழமைப் பணியின் பார்வைகளில் முடிந்தளவுக்குப் பன்னிரெண்டு சமயங்களைக் குறித்திடும் வகையில் இச் சின்னம் விரிவாக்கமும் புதுப் பொலிவும் பெற்று இம்மையத்தை அலங்கரிக்கின்றது.

பெரிய சமயங்களோடு மக்கள் சமயங்களும் சேர்க்கப்பட்டிருப்பது இச்சின்னத்தின் தனிச் சிறப்பு. ஐக்கிய ஆலயத்தின் இன்றையச் செயலர் பணி. ராஜ் இருதயா அவர்களின் வழிநடத்தலில் அருள் கடல் இளவல்கள் இதனை அழகுற வடிவமைத்து நிறுவியுள்ளது வருபவரை எல்லாம் கவருவதோடு மட்டும் இல்லாமல், அனைத்துச் சமயத்தினரும் ஒன்றிணைந்து செயல்படுவதற்குத் தூண்டு கோலாக உள்ளது.



# அருள்கடலாரின் எழுத்துப் படைப்புகள் 2019-2020

- **ராஜ் இருதயா,** (தொகு) மனிதம் மலர்ந்திட: இறையாட்சிக்கான இறையியல் தேடல்கள், சென்னை: அருள் கடல் வெளியீடு, 2019.
- **Raj Irudaya,** (ed.) *Theologizing Today: Voices of Indian Theologians,* Bangalore: ITA & ATC Publications, 2019.
- அருள்கடலார், வழித்துணையாகிடும் அன்னை மரியா, (தொகு.) **ராஜ் இருதயா,** திண்டுக்கல்: வைகறை பதிப்பகம், 2019.
- **Raj Irudaya,** "The Kenotic and Life-Giving Jesus in the Gospel of John," in *Christian Commitment to Service: Faith in Practice* (eds.) J.Charles Davis and Jeevaraj Lourdhu, Delhi: Christian World Imprints, 2020, pp.23-32.
- **Raj Irudaya**, "Jesus: A Prototype of Renaissance and Enlightenment," *VJTR,* 84 (2020), pp.107-129.
- **Sahayaraj Stanley**, "The Contribution of Ignatius Hirudayam SJ, towards Interreligious Dialogue"*,* in *Dialogue Conversations and Beyond,* (ed.) Anandam Lourdu. Iniavai Publication, Trichy, pp.119-133.
- **Antony, Baskar,** அருள் வாழ்வு: விவிலிய நாள் குறிப்பேடு, (Daily Bible Reflections for February),(ed.) X.D. Selvaraj, Dindigul: Vaigarai Publications, 2019.
- **Antony, Baskar,** "An Archival Study on the History and the Activities of John Baptist Trincol in the Colonial Southern Parts of Tamil Regions, India." *Universal Review Journal,* VIII/V May, 2019, 1221-1238. ISSN No: 2277-2723.
- **Antony, Baskar,** "An Archival Study on the History and the Activities of Adrian Caussanel in the Colonial Southern Parts of Tamil Regions, India." *IJMTE Journal* IX/V May, 2019, 6639-6654. ISSN No: 2249-7455.
- **Antony, Baskar,** அருள் வாழ்வு: விவிலிய நாள் குறிப்பேடு, (Daily Bible Reflections for December) (ed.) X.D. Selvaraj, Dindigul: Vaigarai Publications, 2020.
- **ஆரோக்கிய தாஸ் ஜே.,** "மோடி 2.0: ஏக்கங்களும் எதிர்பார்ப்புகளும்", நம்வாழ்வு, செப்டம்பர், 2019.
- **ஆரோக்கிய தாஸ் ஜே.,** "இந்தியாவில் கல்வியும் தேசியக் கல்விக் கொள்கையும்", நம்வாழ்வு, அக்டோபர், 2019.
- **ஆரோக்கிய தாஸ் ஜே.,** "தடம் மாறும் தகவலறியும் உரிமைச் சட்டம் ", நம்வாழ்வு, டிசம்பர், 2019.
- **ஆரோக்கிய தாஸ் ஜே.,** "மறையுரைச் சிந்தனைகள்" அன்றாட அருள்வாக்கு, ஜீன் 2019 - ஆகஸ்ட் 2020.

# மௌனம் கலைவோம்

அலெக்ஸ் சே.ச.

## மௌனம் கலைத்து – வன்முறையை வலுவிழக்கச் செய்வோம்

(ஒவ்வொரு திங்கள் திருப்பலியும் சிறப்பான நம்பிக்கைப் பகிர்வுகளோடு அர்த்தமுள்ள வகையில் கொண்டாடப்படுகின்றது அருள் கடல் இறையியல் மையத்தில். மாணவர்களே இத் திருப்பலியைச் சிறப்பு செய்வார்கள். இன்றைய சமுதாய மாற்றத்திற்குத் தேவையான கருப்பொருளை எடுத்துக் கொண்டு முன்னுரை வழங்குவர். நற்செய்தி அறிவித்தலுக்குப் பிறகு இரண்டு மாணவர் திருப்பலியின் மையக் கருத்தை ஒட்டிய சிந்தனைகளை தங்களது அனுபவ ஒளியிலும் இறைவார்த்தை பின்புலத்திலும் பகிர்ந்து திருப்பலியை ஆழமான, அர்த்தம் நிறைந்த, மாற்றங்களைக் கொணரும் அனுபவமாக மாற்றுவர். தலைமை ஏற்றுத் திருப்பலி கொண்டாடும் அருள்பணியாளர் சிந்தனைகளை ஒருங்கிணைத்துத் திருப்பலியை நம்பிக்கைக் கொண்டாட்டமாக வழிநடத்துவார். இக்கொண்டாட்டம் அருள் கடல் பயிற்சி-பணி வாழ்விற்கு உந்துச் சக்தியாக அமைகின்றது. அவ்வாறு ஜீலை 13ஆம் நாள் திங்களன்று நடந்த திருப்பலியின் அனுபவத்தை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அனைகின்றோம். – ராஜ் இருதயா, சே.ச.)

வாழ்வை அளிப்பவரும் அதை நலன்களால் நிறைப்புவருமான இயேசு கிறித்துவின் பெயரால் உங்கள் அனைவருக்கும் இனிய வணக்கம். இந்தக் குழுமத் திருப்பலியிலே 'மௌனம் கலைத்து - வன்முறையை வலுவிழக்கச் செய்வோம்' என்னும் மையப் பொருளில் சிந்தித்து இறையருளைப் பெற்றிட உங்களை அன்போடு அழைக்கின்றேன்.

அண்மையில் சாத்தான் குளத்தில் காவலர்கள் நடந்திய வன்முறையையும் மூர்க்கத்தனத்தையும் நாம் அறிவோம். அநியாயமாக அடித்துக் கொல்லப்பட்ட திரு. ஜெயராஜ் மற்றும் திரு. பெனிக்ஸ் அவர்களுக்காகவும் இவர்களைப் போன்று விசாரணை என்னும் பெயரில் கொல்லப்பட்டு பொது வெளிக்கு வராமல் இருட்டடைப்புச் செய்யப்பட்டவர்களுக்காவும் சில நொடிப் பொழுது அமைதி அஞ்சலி செலுத்துவோம்.

இந்த நிகழ்வு தொடர்ந்து நடக்கும் வன்முறைகளுக்கு ஒரு சான்று. இங்கு வேறுபட்ட தளங்களில் மாறுபட்ட சூழல்களில் மக்கள் மீதான வன்முறைத் தாக்குதல்கள் நடந்த வண்ணம் இருக்கின்றன.

'

- காவல்' உங்கள் நண்பன் என்பது மாறி, காவல் என்றால் காவு வாங்குதல் என்று பொருள் மாறிவிட்டதோ?
- நம்பி வருவோரை நரபலியாக்குவதுதான் காவல் என்பதன் உண்மை பொருளா?
- உதவ வேண்டியவர்களே உயிரை எடுக்கிறார்களே, இவர்களை என்னவென்று சொல்வது?
- கலகக்காரர்களால் காயப்பட்டவர்களைவிட, காவலர்களால் கொல்லப்பட்டவர்கள் இம்மண்ணிலே அதிகம். விசாரணைகள் உயிரையே விலையாய் கேட்குமோ?
- காவல் நிலையம் என்ன, சாமானியர்களின் சவக்குழியா? இமைகளே, கண்ணை காயப்படுத்தலாமா?
- பாதுகாப்புக் கொடுக்கப்பட வேண்டிய மக்களையே கொன்று குவித்துவிட்டு பின்பு யாருக்கு காவலராய்

இருக்கப்போகிறார்கள்?

என்று காவலர்கள் மீதான விமர்சனங்கள் நீண்டு கொண்டே போகின்றன.

'தானும் இரையாக்கப்படுவேன் என்று தெரியாமலே தலைவன் போடும் இரைக்கு ஓடோடி வருகிறது சேவல் - அந்தோ பரிதாபம் அந்தக் காவலரின் நிலை.' சட்டத்தை சாதகமாக்கி, அரசின் கூலிப்படையாய்ப் பல நேரங்களில் செயல்படும் காவல் துறையும் ஒருநாள் இந்த வஞ்சக அரசின் வக்கிரமங்களால் வீழ்த்தப்படும்.

இத்தகைய விமர்சனங்களில் கண்ணியத்தோடு செயல்படும் காவலர்கள் விதி விலக்கானவர்கள்.



ஒருபுறம், இவர்கள் கடலில் கரைந்த பெருங்காயமாகக் காணாமல் போகிறார்கள். மறுபுறம், காவலின் கண்ணியத்தையும் கடமையையும் மறந்துவிட்டு, எவரோ ஒருவர் ஏவிவிட, எமன் வாரிசுகளாக சில காவலர்கள் அப்பாவி மக்களை அடித்துக் கொல்லும் அக்கிரமங்கள் அன்றாடம் அரங்கேறிக்கொண்டேதான் இருக்கின்றன. இங்கு நடக்கும் விசாரணையெல்லாம் அன்று இயேசுவுக்கு நடந்த விசாரணையே: உண்மையை மூடி மறைப்பது, சட்டத்தைச் சாதகமாக்கி நிரபராதிகளை நிர்க்கதியாக்குவது, அதிகாரத்தை ஆயுதமாக்கி வன்முறைகளால் ஒடுக்குவது, எதிர்ப்பின் குரல்வளையை நெறிப்பது என்று எல்லா விசாரணைகளும் இங்கே கொலைக் களத்திலேயே போய் முடிகின்றன.

கொலைக்களம் ஒரு முடிவல்ல. மூர்க்கத்தனமான இத்தகைய வன்முறைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமெனில் நல்லவர்கள் தங்கள் மௌனத்தைக் கலைக்க வேண்டும்.

எனக்கு எதுக்கு வம்பு என்றோ? யார் எப்படி போனால் எனக்கென்ன என்றோ? சுயநலமாய் இருந்துவிட முடியாது. இப்படி தனித்திருப்பது ஒருபோதும் வாழ்வுக்கான உத்தரவாதத்தை தராது. இன்று இவர்கட்கு! நாளை எனக்கு, நமக்கு என்றால்?

நான் நலமாக வாழ வேண்டுமெனில் நாடும் காடும் நலமாக இருக்க வேண்டும். ஆதலால் எந்தப் பிரச்சனையும் தனிபட்ட பிரச்சனையல்ல. எல்லா பிரச்சனையும் சமூகப் பிரச்சனையே, எனக்கான பிரச்சனையே என்பதைப் புரிந்திட வேண்டும். இல்லையெனில், புலிகள் வாழும் காட்டிலே தனித்து விடப்பட்ட மானாய் விரட்டி விரட்டி வேட்டையாடப்படுவோம்.

எனவே, அநீதிக்கு முன் அடங்கிப் போகாமல் 'ஏன் அடிக்கிறாய்?' என்று கேட்கும் துணிச்சல் பெற வேண்டும். ஆங்காங்கே நடக்கும் வன்முறைகள் எல்லாம் தனக்கானது என்று எண்ணி வெகுசனம் மகா சமுத்திரமாய் வெகுண்டெழ வேண்டும். அவ்வாறு நிகழும்போது இத்தகைய வன்முறைகள் நிச்சயம் வலுவிழந்து போகும். வறியவருக்கான வாழ்வும் பாதுகாப்பும் உறுதி செய்யப்படும்.

எனவே, மௌனம் கலைத்து, வெகுண்டெழும் வெகுசனங்களில் நாமும் ஒருவராக இருக்க இப்பலியில் துணிச்சலை அருளாகக் கேட்போம்.

மனோஜ் சே.ச.

# மௌனம் கலைப்போம்! மனித மாண்பு காப்போம்!

மனித இனம் ஓர் இடத்தில் குழுவாக வாழத் தொடங்கிய காலம் முதலே ஒரு குழு மற்றொரு குழுவின் மீது தன் ஆதிக்கத்தைச் செலுத்தி அடக்குமுறையைக் கையாள்வதைத் தொடங்கிவிட்டது. இனவாத, மொழிவாத, சமயவாத, பண்பாட்டு, வர்க்க, சாதிய, பாலின அடிப்படையில் மற்றும் அதிகாரம் உடைய ஆட்சியாளர்கள் அதிகாரமற்ற குடிகள் மீது நடத்தும் வன்முறை போன்ற பல்வேறு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு வரலாற்றிலே அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.

இத்தயை அடக்குமுறைகள் அரங்கேற்றப்படும் போதெல்லாம் மனிதத்தைக் காக்க அதற்கெதிரான குரல்களும் எழுப்பப்பட்டுக் கொண்டேதான் இருக்கின்றன. குரல் எழுப்புகிறவர்கள் மேற்குறிப்பிட்ட ஏதேனும் ஒரு குழுவைச் சார்ந்தவராக இருப்பினும் அதனைக் கடந்து மனித மாண்பை முன்னிறுத்திக் குரல் எழுப்பியுள்ளனர்.

இனவாத அடக்குமுறைக்கு எதிராகக் குரல்கொடுத்த நெல்சன் மண்டேலா மற்றும் மார்டின் லூதர் கிங் போன்றோரையும், சாதிய ஒடுக்குமுறையைச் சாடிய அம்பேத்காரையும், பண்பாட்டு அடக்குமுறைக்கு எதிரான மெரினா புரட்சியையும், சமய அடிப்படைவாதத்திற்கு எதிராக வெடித்துக் கிளம்பும் குரல்களையும், ஆட்சியாளரின் அடக்குமுறையை வெளிக்கொணர உண்மையை உரக்கக் கூறிய காவலர் ரேவதி போன்றோரையும் இதற்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். ஆக மனித மாண்பை, மனித நல வாழ்வை முன்னிறுத்தும் குரல்களாக நாமும் செயல்பட வேண்டும் என்பது இன்றையக் காலத்தின் கட்டாயம் ஆகும். திருவிவிலியமும் நமக்கு அத்தகைய அழைப்பையே விடுக்கிறது. ஏனெனில் நம் வரலாற்று இறைவன் மனித மாண்பை நிலைநிறுத்த அடக்குமுறைக்கு எதிராகக் குரல் கொடுப்பவராக, செயல்படுபவராக இருக்கிறார்.

முதல் ஏற்பாட்டிலே, ஆபேலைக் கொன்ற காயினின் அடக்குமுறைக்கு எதிராக யாவே இறைவன் மௌனம் காக்காமல் "உன் சகோதரன் எங்கே?" என்று குரல் எழுப்புகிறார். எகிப்திலே இஸ்ரயேல் மக்கள் பார்வோன் மன்னனால் அடக்குமுறைக்கு ஆளான போது யாவே இறைவன் அவர்களுக்காகச் செயலாற்றுகிறார். தன்னையே மோசேக்கு வெளிப்படுத்தி அடிமைத்தனத்திற்கு எதிரான விடுதலை வாழ்வை அவருக்குக் கற்பித்து, மோசே வழியே மக்களை ஒன்றுபடுத்தி, இறுதியிலே அடக்குமுறையை வேரறுக்க அம்மக்கள் சார்பாகத் தானே போராடுகிறார். மன்னராட்சி காலத்திலே, உடன்படிக்கையை மறந்து, பழங்குடி கூட்டாட்சி முறையை விடுத்து இஸ்ரயேல் மக்கள் ஏழைகள், கைம்பெண்கள் மற்றும் எளியவர்களை நசுக்கிய போது இறைவாக்கினர்கள் வழியாக தன் அறச்சினத்தை வெளிப்படுத்துகிறார்.

இரண்டாம் ஏற்பாட்டிலே, இயேசு தண்ணீர் திருமுழுக்கில் மக்களோடு ஐக்கியப்படும்போதே அவர்களின் மாண்புநிறை வாழ்வுக்காக அடக்குமுறைக்கு எதிராக குரல்கொடுத்து சிலுவையிலே தன்னுயிரையே கொடுக்கும் உறுதிப்பாட்டோடு பணிவாழ்வைத் தொடங்குகிறார். மனிதர்களுக்கான மாண்புநிறை வாழ்வினை முடக்குகிற அனைத்து யூத அமைப்புகள் மற்றும் சட்டங்களுக்கு எதிராக இயேசு வீரியத்தோடு குரல்கொடுக்கிறார்.

இவ்வாறாக இயேசுவும் வரலாற்றிலே அடக்குமுறைக்கு எதிராகக் குரல்கொடுத்தவர்களும் மனிதத்திற்காகக் குரல்கொடுக்க வேண்டும் என்ற விருப்பத் தேர்வினை மேற்கொண்டு பணியாற்றினர். அத்தகைய விருப்பத் தேர்வினை நாமும் மேற்கொண்டு செயல்பட அழைக்கப்படுகின்றோம். இதில் நாம் தவறும் போது ஆதிக்கவாதிகளின் அடக்குமுறைகள் ஏற்படுத்தும் விளைவுகளில் நாமும் பங்காளிகள் ஆகிறோம்.

மௌனம் கலைப்போம். மனிதம் பேசுவோம்.
மனிதத்திற்காகப் பேசுவோம்.

ஜெயசீலன் சே.ச.

# மௌனம் கலைத்தல்: நீதிக்கான செயல்பாடு

மௌனம் கலைத்தல் எனும் சொல்லாடலே அதன் செயல் நிகழ்வாக்கம் உடனடி பதிலிருப்பாக அல்லாமல் காலந்தாழ்த்திய பதிலிருப்பாக அமைவதை நமக்கு உணர்த்துகிறது. இவ்வரையறையின் அடிப்படையில் மௌனம் கலைத்தல் என்பதனை மூன்று கோணங்களில் நாம் பொருள் கொள்ளலாம்.

மௌனம் கலைத்தல் - அடக்கமுறைக்கு எதிரான வெளிப்பாடு

தனக்கு எதிராக நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருக்கும் அடக்கமுறைக்கு அல்லது உரிமை பறிப்பிற்கு எதிரான ஒரு வெளிப்பாடுதான் மௌனம் கலைத்தலாகும். ஒடுக்கப்பட்டு அல்லது மிதிபட்டு வாழ்ந்து வந்தவர் அவரது மாண்பு பறிக்கப்பட்ட வாழ்வை நினைத்து வெகுண்டெழுகிறார் என்பதை இது நமக்கு உணர்த்துகிறது. ஆம்! இனியும் அடக்குமுறை முன்பு போலத் தொடர மறுக்கின்றார். ஏனெனில் அந்நேரம் வரையிலும் அடக்குமுறைக்கு உட்படுத்தி வந்தவரின் கௌரவத்திற்கும் அதிகாரத்திற்கும் விடுக்கப்பட்ட ஒரு சவாலாக, சவுக்கடியாக மௌனம் கலைத்தவரின் நிலைப்பாடு உள்ளது. அதன் பிறகு சற்று துன்பத்திற்கே உரியதாயினும் தற்பொழுது அவர் மாண்புநிறை வாழ்வின் முற்சுவையினைப் பெற்றுள்ளார் என்றே கூறவேண்டும். இங்கு மனித மாண்புநிறை வாழ்விற்கான தேடலை அடக்கமுறைக்கு உட்பட்டு வாழ்ந்து வந்தவரே தொடங்குகிறார்.

குஜராத்தில் ஊரடங்கு விதிமுறைகளை மதியாமல் தனது நண்பர்களோடு நான்கு சக்கர வாகனத்தில் சுற்றித்திரிந்த ஓர் ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினரின் மகனுக்கெதிராக மௌனம் கலைத்த சுனிதா எனும் பெண்காவலர் இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாவார்.

மௌனம் கலைத்தல் - அறச்சினத்தின் வெளிப்பாடு

பிறருக்கு எதிராக நடைபெறும் தீங்கினை அல்லது அநீதியைப் பொறுத்துக்கொள்ள முடியாமல் நீதிக்குச் சான்று பகரும் அறச்சினத்தின் வெளிப்பாடுதான் மௌனம் கலைத்தலாகும். இவ்வகையும் கூட, முந்தையதைப் போல ஒருவர் தேர்ந்தெடுத்த மற்றொருவருக்கு அல்லது ஒரு குறிப்பிட்ட சாராருக்கு தொடர்ந்து தொல்லைகள் பல கொடுத்து வருவதன் வெளிப்பாடு ஆகும். இவ்வாறு மௌனம் கலைப்பவர் ஒரு வேளை தனது வாழ்வில் ஏற்கனவே இத்தகைய தொல்லைகளுக்கு உட்பட்டவராக இருக்கலாம் அல்லது தொல்லைக்கு உட்படுத்தப்படுபவர் தனது மௌனத்தைக் கலைக்க முடியாத நிலையில் இருந்திருக்கலாம். எவ்வாறாக இருப்பினும், அங்கு விடுதலைக்கான முதல் அடி எடுத்து வைக்கப்பட்டுவிட்டது. எனினும் இவ்வகை மௌனம் கலைத்தலில், தொல்லைகளுக்கு உள்ளானவருக்கு மட்டுமல்ல மாறாக மௌனம் கலைத்தவருக்கும் அதன் பிறகு பல்வேறு நிலைகளிலிருந்து துன்பங்களும் அச்சுறுத்தல்களும் தொடுக்கப்படுகின்றன. இவை அனைத்திற்கும் எதிரான போராட்டம் தொடரும்போது தான் இம்முயற்சி வெற்றி பெறுகிறது. இங்கு மனித மாண்புநிறை வாழ்விற்கான தேடலானது ஒரு மூன்றாம் நபரால் அதாவது பிறர் சார்ந்த ஒருவரால் தொடங்கப்படுகிறது.

சாத்தான்குளத்தில் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கும் மத்தியில், தனது சக காவலர்களுக்கு எதிராகவே நீதிக்குச் சான்று பகரும் பொருட்டு உண்மையிலேயே திரு ஜெயராஜ் மற்றும் திரு பென்னிக்ஸ் ஆகியோருக்கு என்ன நடந்தது என நாடறியச்செய்த பெண் காவலர் ரேவதி இதற்கு ஒரு சிறந்த முன்னுதாரணமாவார்.

கொரோனா வெளிப்பாடு - இயற்கை கலைத்த மௌனம்

கொரோனா செயற்கையாக மனிதரால் உருவாக்கப்பட்டதா இல்லையா எனும்

விவாதத்திற்கிடையே நான் கொரோனாவானது இயற்கை மனித சமூகத்திற்கு எதிராக மௌனம் கலைத்த ஒரு தருணமாகப் பார்க்கின்றேன். ஆம்! படைப்பின் மணி மகுடமாகவும் தனக்காகவே அனைத்தும் படைக்கப்பட்டிருக்கின்றது எனக் கூறிக்கொண்டு அனைத்தையும் சுரண்டிச் சூறையாடிக் கொண்டிருந்த மனித சமூகத்திற்கு எதிராகத் தனது நிலைப்பாட்டை உணர்த்தும் பொருட்டு இயற்கை தொடுத்த பதில் தான் இக்கொரோனா வெளிப்பாடாகும். இது தனது மற்றும் பிறர் சார்ந்த மௌனம் கலைதல் ஆகும். அதாவது, முதலாவதும் இரண்டாவதும் கலந்த ஒரு நிலையாகும். இயற்கை மட்டுமே இதனைச் செய்யும் வல்லமையுடையது. எனவேதான், பல் வேறு நிலைகளில் அதுவும் குறிப்பாக அறிவியலில் உச்சம் தொட்டு விட்டோம் என மமதை கொண்டிருந்த மனித குலத்தால் ஏதும் செய்ய முடியவில்லை. இங்ஙனம் இவ்வெளிப்பாடு, இயற்கை மேற்கொள்ளும் மாண்புநிறை வாழ்விற்கான தேடலில் முதற்படியாகும்.

மௌனம் கலைத்த இயேசு – மனித மாண்புநிறை வாழ்வுத் தேடலின் முன்னோடி

யோவான் நற்செய்தி 8:1-11ல் நாம் காண்பது போல விபச்சாரத்தில் பிடிபட்ட பெண்ணைத் தண்டிக்குமாறு சிலர் அவரை இயேசுவிடம் கூட்டி வந்து நிறுத்திய போது அவர் "மௌனமாக" தரையில் ஏதோ எழுதிக் கொண்டிருந்தார். விடாமல் கேட்டுக் கொண்டிருந்ததால், தனது மௌனம் கலைத்து அப்பெண்ணை அவர்களிடமிருந்து விடுவித்தார். இவ்வாறு, அங்கு நடைபெறவிருந்த அநீதச் செயலுக்கு முற்றுப்புள்ளி வைத்து அப்பெண்ணின் மாண்பினைக் காத்ததோடு அதன் பிறகு மாண்புநிறை வாழ்வு வாழவும் அவருக்கு வாய்ப்பளித்தார்.

வாருங்கள், மௌனம் கலைவோம்! அதன் மூலம் நமது, பிறரது மற்றும் இயற்கையின் மாண்புநிறை வாழ்வுத் தேடலின் முதற்படியில் அடியெடுத்து வைப்போம்!



-ராஜ் இருதயா, சே.ச.

# மௌனம் கலைத்திடச் சுருக்கென்ற சில கேள்விகள் ???

- அமெரிக்காவிலே ஆப்பிரிக்க அமெரிக்கர் திரு. ஜார்ஜ் பிளாய்டு அநியாயமாகவும் கொடூரமாகவும் காவல் துறையினரால் பட்டப்பகலில் பலரின் முன்னே கொலை செய்யப்பட்டதைக் கண்டு, கேள்விப்பட்டு அமெரிக்கா முழுவதுமே பொங்கி எழுந்ததே!
- கொரோனா தொற்று நோயால் பெரிதாகப் பாதிக்கப்பட்ட அமெரிக்காவில், அதையெல்லாம் பொருட்படுத்தாது வீதிக்கு வந்து துணிச்சலோடு போராடினார்களே!
- கொலை செய்யப்பட்டவர் ஆப்பிரிக்க அமெரிக்கராக இருந்தாலும் எல்லா இனத்தவரும் நிறத்தவரும் மதத்தவரும் வீதிகளில் இறங்கி நீதிக் குரலை எதிர்ப்பாகப் பதிவு செய்தார்களே! அமெரிக்கா மீது நாம் பல குறைகளைக் கூறினாலும் இந்த ஒட்டு மொத்த அமெரிக்கப் பதிலிறுப்பை வரலாறு மறந்திடாது!

- சாத்தான்குளத்தில் திரு ஜெயராஜ் மற்றும் அவர் மகன் திரு பென்னிக்ஸ் ஈவு இரக்கமின்றி, திட்டமிடப்பட்ட வகையில் காட்டுமிராண்டித்தனமாகச் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு காவல் மரணமாக்கப்பட்டார்களே!
- தமிழகமே வெகுண்டெழுந்ததா? வீதிக்கு எத்தனை பேர் வந்து எதிர்ப்புக் குரல் கொடுத்தோம்? கொரோனா தொற்று நோய் எனும் சாக்குப்போக்கில் மௌனமாகி விட்டோமா?
- கட்டாயம் சாத்தான்குள மக்களும் பக்கத்து ஊர்களும் வெகுண்டெழுந்து வீதிக்கு வந்து போராடியதை மறுக்க முடியாது!
- ஆங்காங்கே சில அரசியல், மதத் தலைவர்களும் மனித உரிமை ஆர்வலர்களும் குரல் கொடுத்ததையும் மறக்க முடியாது!
- வட இந்தியாவில் இருந்தும் சில மனித உரிமை ஆர்வலர்கள், ஏன் பாலிவுட் நடிகை நடிகரும் தங்களது எதிர்ப்பைப் பதிவு செய்ததைப் பாராட்டாமல் இருக்கக் கூடாது.
- திருமிகு சுஜித்ரா அவர்களின் ஆங்கிலக் காணொளியால் இப்பிரச்சனை உலகம் முழுவதும் பரவலாக்கப்பட்டு பல நாட்டு மனித உரிமை ஆர்வலர்களும் ஏன் ஐ.நா.சபையுமே பிரதமர் மோடிக்கும் முதல்வர் எடப்பாடிக்கும் கண்டன-கவன ஈர்ப்பு கடிதம் எழுதியதை நினைவில் நிறுத்தத் தவறக் கூடாது.

- ஆனால் அமெரிக்காவைப் போல ஒட்டு மொத்தமான எழுச்சியும் எதிர்ப்பும் போராட்டமும் தமிழக வீதிகளை ஆக்கிரமிக்கவில்லையே!
- கொரோனா பயமா? கொரோனா பயமென்றால் ஊரடங்கு தளர்த்தும் போது எவ்வித பயமுமின்றி, தனி இடைவெளி மறந்து கூட்டம் கூட்டமாக மக்கள் கூடுவதும் பொருள் வாங்க அலைவதும் ஊர் ஊராகப் பயணிப்பதற்கு மட்டும் துணிச்சல் எப்படி வந்தது?
- அரசின் அடக்குமுறை, காவல் துறையின் சித்திரவதை நம்மீதும் ஏவி விடப்படும் என்ற மரண பயமா?
- எங்கோ, எவருக்கோ நடந்த அநியாயம் என்ற அலட்சியமா? அக்கறையின்மையா?
- பத்தில் நடக்கின்ற அநியாயத்தில் இதுவும் ஒன்று என்ற பாரா முகமா? இப்படிப்பட்ட அநியாயங்களைக் கண்டு 'பழகிப் போன', 'உணர்வு மரத்துப் போன', 'சமூக ஊடகங்களுக்குள் முடங்கிப் போன', 'உசுப்பேற்றுகின்ற செய்திகளைக் கண்டு அவ்வப்போது 'மனச்சுகம்' அடைகின்ற சகோதரத்துவ உணர்வே அற்ற சடலங்களா மாறி விட்டோமா?
- தலைவலியும் காய்ச்சலும் தனக்கு வந்தால் தான் தெரியும் என்ற தத்துவத்திற்குள் புதையுண்டு எனக்கு அடி கிடைக்கும் போதுதான் வெகுண்டெழுவேன், வீதிக்கு வருவேன் என்ற சுயநலம் புரையோடிப்போன மனநிலையா?
- டாஸ்மார்க் கடைகள் திறக்கப்படாதா என்ற ஏக்கத்திலே கொரோனா காலத்தில் மனம் உடைந்திருந்த நம் தமிழ் மக்கள், திறந்தவுடனே நீண்ட வரிசையில், சுடும் வெயிலையும் பொருட்படுத்தாது மதுப்புட்டிகள் வாங்கிட ஓடோடி வந்த குடிமக்களின் குடி ஆவேசம் இம்மாதிரியான கொடூர கொலைகளை ஒரு தெருக் கூத்தாகப் பார்க்கக் கூடிய போதைக்குத் தள்ளிவிடப்பட்டு விட்டதோ?
- அப்பட்டமான கொலைகளைச் செய்த காவலர்களைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டு, ஒரு சில காவலர்களைத் தங்கள் பக்கம் வைத்துக்கொண்டு எப்படியும் ஆட்சி செய்யலாம் என்ற இறுமாப்பில், பொய் அறிக்கைகளையும் திசை திருப்பும் கருத்துகளையும் அள்ளி வீசிய முதல்வரும் அவரின் அமைச்சர் சகாக்களும் நீதி போற்றும் மனித மாண்பைக் காத்திடும் அரசையா

வழி நடத்துகிறார்கள்?

- மனித உரிமைகளுக்கு எதிரான படுகொலைகள் என்று பார்த்து பதைபதைத்து, வெறும் செபத்தோடு மட்டும் நிறுத்திக் கொண்டு, நாள் ஒன்றுக்கு இரண்டு மூன்று தொலைக்காட்சி திருப்பலி பார்த்து மனத்திருப்தி அடையச் செய்யும் ஆன்மீகம் உண்மையான கிறித்தவச் சீடரின் ஆன்மீகமா? நீதியின் மேல் பசி தாகம் உள்ளவர்தானே பேறு பெற்றவர்கள்!
- மன ஆறுதலையும் தேறுதலையும் தரும், தனிப்பட்ட நன்மைகளையே தேடும் ஆன்மீகத்தை மட்டும் சுவைத்துக் கொண்டு, போராட்ட ஆன்மீகத்தைப் புறந்தள்ளும் நாம் நீதிக்காக, உண்மைக்காக, மனித மாண்பிற்காக இறையாட்சிக் களம் இறங்கிப் போராடிய இயேசுவின் வழித் தோன்றல்களா?
- போராட்டக் குணத்தை மழுங்கடிக்கும் ஓரங்கட்டும் அருட்பணியாளர்கள், துறவறத்தார் கிறிஸ்துவின் போராளிகளாக மாறத் திராணி இல்லையா? நீதிக்காக மறைசாட்சியான புனிதர் போன்ற உள்ளங்கள் இன்னும் நம் மத்தியில் பிறக்கவில்லையா?
- என்னைப் பாதிக்காத பணிகளில் மட்டும் ஈடுபடுவேன் என எழுதாத சட்டத்திற்குள் தங்களைச் சிறைப்பிடித்தவர்களா நாம்?
- ஸ்டெர்லைட் பட்டப்பகல் அரசு இயந்திரப் படுகொலைகள், ஜல்லிக்கட்டு பண்பாட்டுக் கூட்டமைப்பிற்கு எதிராகக் கட்டவிழ்த்துவிடப்பட்ட காவலர்–அரசு வன்முறைகள், இரு நூறுக்கும் மேற்பட்ட பொள்ளாச்சி இளம் பெண்களைச் சீரழித்த பாலியல் வக்கிர வன்முறைகள் இவற்றை எல்லாம் மௌனப்படுத்தி, மனித உரிமைகளுக்கு மயானம் கட்டிக் கொண்டிருக்கின்ற தீமைகளை, அராஜகங்களைப் பொசுக்கிடும் தீக்குச்சிகளாக எப்போது மாறப் போகின்றோம்?
- இன்னும் எத்தனை ஜெயராஜ்களையும் பென்னிக்ஸ்களையும் காவு கொடுக்கப் போகிறோம்?
- மௌனம் கலைக்க வேண்டிய நேரம் இது இல்லை என்றால் நாம் எல்லாருமே மௌனியாக்கப்பட்டு மயான பூமியின் சொந்தக்காரர்களாக்கப்படும் நாளும் தூரமும் வெகு தூரத்தில் இல்லை!
- மௌனம் கலைப்போம்! மனித உரிமை காப்போம்!

அரசியல் என்பது ஒரு உன்னதமான செயல். நாம் அதை மறுபரிசீலனை செய்ய வேண்டும், அதை வணக்கத்துடனும் மற்றும் அர்ப்பணிப்புடன் ஒரு பயிற்சியாகப் பார்க்க வேண்டும், இதற்கு சாட்சிய வாழ்வும், தியாகமும் தேவை, அதாவது பொது நன்மைக்காக ஒருவர் இறக்கவும் தயாராக வேண்டும்.

திருத்தந்தை பிரான்சிஸ்



# அருள்கடல் கல்வியாண்டுத் தொடக்க விழா : 2020-21

-சாலமோன் சே.ச

# படைப்பாற்றலோடு புத்துலம் படைக்க ...

அருள் கடல் குழுமக் கல்வியாண்டுத் தொடக்க விழா ஜீலை 10 ஆம் தேதி இறை ஆசியோடும் மகிழ்வோடும் கொண்டாடப்பட்டது. அருட்பணி ராஜ் இருதாயா சே.ச, குழுமத் தலைவர் கல்வியாண்டுத் தொடக்க விழா வரவேற்புறை வழங்கி அருள் கடல் கடந்து வந்த பாதையும் வரலாற்றின் கடவுளின் வழி நடத்தலையும் நன்றியோடு அவையில் பதிவு செய்தார்.

அருட்பணி. ஜெபமாலை ராஜா சே.ச, இயேசு சபை சென்னை மறைமாநிலத் தலைவர் அருள் கடல் பயிற்சியின் தனித்துவத்தைப் பற்றிப் பேசி இறையியல் கல்வியின் முக்கியத்துவத்தைப் பற்றி எடுத்துரைத்தார். அருட்பணி. ஜெரி சே.ச, தனிமனித மாண்பினை உயர்த்துவதற்கு நாம் செய்யக் கூடிய இறையியல் படிப்பும், இறையிலாக்கமும் வழிவகை செய்ய வேண்டும் என்று பகிர்ந்து கொண்டார். அருட்பணி. இராபின் சே.ச, சென்னை மறைமாநிலப் பயிற்சி ஒருகிணைப்பாளர் அருள் கடல் பயிற்சியானது நம்முடைய பண்பாட்டில் வேரூன்றி ஒருங்கிணைந்த வளர்ச்சியை மையமாகக் கொண்டு செயல்படும் இறையியல் மையமாகத் திகழ்கிறது என்றார். மேதகு. ஆயர். தேவசகாயம், முன்னாள் சென்னை தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர் “ கொரோனா தொற்றுநோய் இன்றையக் கிறித்தவ நம்பிக்கைக்கு விடுக்கும் சவால்” என்ற தலைப்பின் கீழ் கல்வியாண்டின் சிறப்புறையை வழங்கினார். மனித இனம் தன்னுடைய சுய நல ஆதிக்கத்தால் இயற்கைக்கும் இவ்வுலகிற்கும் விளைவித்த ஆபத்துக்களை உணரவேண்டும். இக்காலக் கட்டங்களில் கடவுளுக்கும் நமக்கும் அதிகரிக்கும் இடைவெளி சூழல்களைச் சரிசெய்ய சரியான முடிவுகளை எடுக்க வேண்டும். இறை நம்பிக்கையில் வாழும் மனித இனம் கடவுளின் இருப்பைக் கேள்விக்கு உள்ளாக்கும் இவ்வேளையில் நாம் நம்முடைய மனிதாபிமானத்தின் இயல்பினை உணர்ந்து அனைவரும் மனித மாண்புபோடு வாழவும் கடவுளின் இருப்பை அனைவருக்கும் எடுத்துச் செல்லும் கருவிகளாக வாழ அழைப்பு விடுத்தார்.

அருட்பணி. ராஜ் இருதயா சே.ச, குழுமத் தலைவர் அவர்களின் முன்முயற்சியாலும் ஊக்குவிப்பாலும் அருள் கடல் பேராசிரியர்களும் மாணவர்களும் தங்களுடைய இறையியல் பயிற்சியின் அனுபவம், இறையியலாக்கச் சிந்தனை, கள ஈடுபாடுகளைப் பொது தளத்தில் பகிர்ந்து கொள்ளும் விதமாக “அருள் சாரால்” என்ற மின் இதலும், “அருள் திரை” என்ற மின் ஊடகமும் வெளியிடப்பட்டன. மேலும் அருள் கடல் நூலகத்திற்கான புதிய மென்பொருள் வடிவமைக்கப்பட்டு வெளியிடப்பட்டது. அருட்பணி ஆரோக்கிய தாஸ் சே.ச, இல்ல அமைச்சர் அவர்களின் நன்றியுரையோடு இக்கல்வி ஆண்டு தொடக்க நிகழ்வானது இனிதே நிறைவுற்றது.

## அன்போடு வரவேற்கின்றோம் அருள்கடல் குழுமத்திற்கு



# அமைப்புக் குழு

பொறுப்பாசிரியர் : அருள் முனைவர். ராஜ் இருதயா

ஆசிரிய ஆலோசகர் : அருள் முனைவர். சகாயராஜ் ஸ்டான்லி

மாணவ ஆசிரியர் குழு : பிலிக்ஸ், அருள், சாலமோன், லிவிங்ஸ்டன்

தொடர்புக்கு : மின்னஞ்சல் arulsaaral@gmail.com

# திருத்தொண்டர்கள்



பெர்க்



பொன்ரூபன்



ரெக்ஸ்



தேன்



விஜின்

2020

## மகிழ்ச்சியோடு வழியனுப்புகின்றோம்



அருள்



டோனி



ஜெயராஜ்



லெனின்



விவிங்ஸ்டன்



பால்ராஜ்



வில்லியம்ஸ்

3-ம் ஆண்டு இறையியல் மாணவர்கள்